ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

அருளிச் செய்த

அருட்பாடல்கள்

சுவாமிகள்மீது

அடியார்கள் பாடிய

தோத்திரப்பாக்கள்

இவை

காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்தர கலாசாலை
தமிழாசிரியர் திருவாளர்.
திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார்
அவர்களால் பார்வையிடப் பெற்று,

திரு-மழவராய நல்லூர்
திருவாளர். ஆ. நரசிம்மலு நாயுடு அவர்களால்
பதிப்பிக்கப் பெற்றன.

தூமான் அச்சு நிலையம்,

காஞ்சிபுரம்.

1937

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

பாடல் பதிப்புரை

குருநாதராகிய ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் திருமேனி தாங்கி அடியார்களை ஆட்கொள்ள உலாப்புரிந்து வந்த காலத்திலே அடியவர்கள் எதிரே மிக இனிய இசையில் தமது உளத்திருந்து ஊற்றெடுக்கும் பாடல்களைப் பாடுவது உண்டு. அவற்றைக் கேட்டுக் களித்த அடியவர்கள், சுவாமிகள் பாடும்போது எழுதி வைத்துக் கொள்வது வழக்கம். ஒருவர் பிரதியைப் பார்த்து மற்றொருவர் எழுதிக்கொண்டே இதுவரை பாடல்கள் வழங்கி வந்து கொண்டிருந்தன. தனித்தனியே நாட்டின் பல பாகங்களில் வரைந்து வைக்கப்பெற்ற அப்பாடல்கள் பலவும் ஒருங்கே ஒருவருக்குத் தெரிய வழியில்லாமல் இருந்தது.

சுவாமிகளது பாடல்கள் பலவற்றையும், அடியார்கள் சுவாமிகள் மீது பாடி வழிபட்ட பாக்களையும் ஒன்று சேர்த்து அச்சிட வேண்டும் என்னும் அவா பல அடியார்களுக்கு இருந்து வந்தது. அதன் பயனாய் அடியேன் இத்தொண்டில் ஈடுபட நேர்ந்தது. ஊர் ஊராய்ச் சென்று அடியார்களிடம் இருந்த பாடல் பிரதிகளைச் சேகரித்தும் பார்த்தெழுதிக் கொண்டும் வரவேண்டியிருந்தது. தபால் மூலம் எழுதியும் சில கிடைத்தன. பிரதிகளை அன்போடு உதவிய அடியார் பலருக்கும் நன்றி பல. அடிமை அவற்றை அச்சிடப் புலவர் ஒருவரது துணையை நாடவேண்டியிருந்தது. காஞ்சிமா நகரத்தில் பச்சையப்பன் உயர்தர கல்லூரித் தமிழ் ஆசிரியர், திருவாளர் திரு. வீ. திருஞான சம்பந்த முதலியார் அவர்களைத் திருவருள் கூட்டிற்று. பண்டிதர் அவர்கள் மிக்க அன்போடு ஆதரித்து பலவித கையெழுத்துக்களில், தமிழறிவில் பலதிறப் பக்குவமுடையவர்களாலே, பல வழூஉக்களோடே வரைந்து வைக்கப் பெற்றிருந்த பாடல்களைப் பரிசீலனை செய்து கொடுத்தார்கள். அச்சு செய்யும் போதும் திருத்துதல் பணியை அன்போடு புரிந்து உதவினார்கள்.

அவர்களுக்கு அடியார் உலகமும் தமிழ் உலகமும் மிக்க கடமைப்பட்டதாகும். அடியேனுடைய தனி வணக்கத்தையும் நன்றி கனிந்த உள்ளத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

காஞ்சிபுரம்,
21—2—1937

அடியார்கள் பாத ஊழியன்,
ஆ. நரசிம்மலு.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

பாடல்

பிழை திருத்தம்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
2	11	சசிக்க	சகிக்க
8	12	மெஞ்ஞானி	மெய்ஞ்ஞான
9	6	மூந்நாள்	மூன்னாள்
14	2	மெஞ்ஞான	மெய்ஞ்ஞான
19	11	யீடா	ஈடா
24	16	தெரிநதும	தெரிந்தும்
	17	அன்ப	ஐம்ப
32	22	வுதை	யுதை
33	2	அத்வித	அத்துவித
	11	மூந்நாள்	மூன்னாள்
34	12	விசற்பம்	விகற்பம்
35	5	தேய்வு	தேயு
38	19	மெஞ்ஞானி	மெய்ஞ்ஞானி
39	5	குறிச்	குறி
40	7	யுமயவளே	யுமையவளே
42	6	விளைய	வினய
44	24	நின்றவற்கே	கின்றவர்க்கே
45	10	கைகொண்ட	கைக்கொண்ட
46	25	நேர்த	நேர்ந்த
47	14	மெஞ்ஞான	மெய்ஞ்ஞான
48	22	பராமரமே	பராபரமே
49	12	கீட்சு	கீச்சு
55	22	பட்சமினி	பட்சணமினி
57	28	துரியோதன்	துரியோதனன்
63	3	பாரென	பாறென
	5	எறுமயிற்	ஏறுமயிர்ப்
	7	இகபரனற்	இகபாநற்
69	3	மாண்ட	மண்ட
71	8	கற்பணஞ்	கர்ப்பணஞ்
73	17	லுறுகி	லுருகி

73	19	வர்களிது	வார்களிது
74	22	குறவனு	குரவனு
75	4	ஆராதா	ஆருதா
	11	செம்பிடும்	செப்பிடும்
85	10	நிர்தப்	நிர்த்தப்
91	14	வற்றம	வற்ற
	16	வுறியிற்	யுறியிற்
93	25	தனனதன	தனனதான
94	10	வுறவு	உறவு
95	22	தேடிவுற	தேடியுற
96	1	மரு	மறு
		மொழிகிப்	மொழுகிப்
	8	பொற்றிடுவை	பெற்றிடுவை
		மெய்	மெய்ப்
	12	ரத்தன	ரத்ன
	26	சுழித்தி	சுழுத்தி

அடியார்கள் பாடல்

6	16	சாயுச்ச	சாயுச்ய
8	31	கமாலா	கமலா
13	23	திண்ணலா	தின்னலா
	34	மதிமேடை	மணிமேடை
14	6	ளெனறுநீ	ளென்றுநீ
18	19	வாராண்டி	வருவாண்டி
19	25	வாய்வு	வாயு
20	12	சேடநா	சேடஞ
23	23	வல்லூரை	வல்லூறை
	24	வல்லூரும்	வல்லூறும்
24	5	தனிப்பி	தனுப்பி
33	15	யேவ	ஏவ
34	16	அருதி	அறுதி
37	15	மராம	மரும
38	14	ஆரா	ஆரு

உ

ஸ்ரீ பரிபூரண சித்தி விநாயகர் துணை.

இரெட்டியபட்டி சுவாமிகள்

அருட்பாடல்கள்.



விநாயகர்

நேரிசை வெண்பா.

ஐந்து கரத்தாய் அறுமுகற்கு நேர்மூத்தாய்
முந்த வுதித்த முதல்வாவென்—சிந்தை
குடியிருந் தேகாக்குங் கோமா னுனையான்
அடிதொழுதேன் வந்தென்னை யாள். 1.

நீயே துணையாகி நின்மலமாய் நிற்குணனாய்த்
தாயாகித் தந்தையாய்ச் சற்குருவாய்ச்—சேய்போற்
கருதியெனை யாண்ட கணபதியே அல்லால்
வருவதியார் சொல்வாய் வழி. 2.

சென்ம மெடுத்ததொரு தீவினையோ யானறியேன்
கன்மமோ யாதோ கலங்கிடுவேன்—நன்மைபெற
ஆர்சொல்வார் நன்னெறிக ளப்பனே நின்னடியார்
சார்வைத் தெரிந்திடவே சாற்று. 3.

உலகிற் பெரியோரா முத்தமரைக் காண
நலமுள் தெரியாத நாயேன்—கலைபலவும்
உற்றுணர்ந்தார் வாச லொருக்காலுஞ் சென்றறியாச்
சிற்றறிவே னன்மைபெறச் சேர். 4.

இராசவிருட் சஞ்சீவமா யின்வேம்பு சத்தியதாய்
ஆசையுடன் வந்தே யமைந்துவெகு—நேசமுடன்
புத்திரனைப் பெற்றாரிப் பூதலத்தி லெல்லோரும்
முத்திபெற வென்றே மூதல். 5.

இன்னிசை வெண்பா.

மதுரா புரிவடக்காய் வைகைநதித் தென்பாற்
சதுரார் ரயில்பாலந் தன்மேற்கா யெங்குங்
கதித்தோங்குஞ் செந்நெல்சூழ் கட்டிடத்தின் கீழ்பால்
உதித்தாயென் னுள்ளத் துறை. 6.

அறுசீராசிரிய விருத்தம்.

வினையகற்றும் பெருமானிவ் வேளைவந்து
காத்தருள்வாய் விமல மூர்த்தி
உனையல்லால் வேறுதுணை யுண்டோயிவ்
வுலகத்தி லொருவ ரில்லை
மனமுழன்று சுழல்கின்றேன் மாயவலைக்
குட்சிக்கி மதிம யங்கித்
தினமுமியா னலைவேனோ சகிக்கவொண்ணா
துனக்கபயஞ் செப்பு வாயே. 7.

எழுசீராசிரிய விருத்தம்.

நாடுவோர்க் கெல்லாம் நாடிய படியே
நல்வரங் கொடுக்குநல் லீசன்
பாடுவோர் தமக்குப் பாடுதற் கிசைந்த
பயன்களை யளிக்குநற் பதத்தோன்
ஆடுவோர் கூத்தை அறிகின்ற சீலன்
அன்பர்தஞ் சிந்தையிற் புகுந்து
கூடியே யுறவாய் வழியது காட்டிக்
குணங்களை யுரைக்குமெய்க் குருவே. 8.

எண்சீராசிரிய விருத்தம்.

சீலமிகு செகதீசன் பெற்ற கண்ணே
தெவிட்டாத தெள்ளமுதே தேனே செந்தில்
வேலவர்க்கு முன்பிறந்த சுமுகா ஞான
வித்தகனே விண்ணோர்க்கு மேலா யுன்னை

ஞாலமுளோர் புகழ்ந்தேத்தும் விதங்கள் யாவும்
நாவினாற் சொலவொண்ணு தருமை யென்னே
கோலமத குஞ்சரமே சதங்கை கொஞ்சக்
கூத்தாடி எனையாள வருகு வாயே 9.

அன்னையுமை மனமகிழ்ந்து பயின்ற பாலா
அனைவோர்க்கு முதற்பொருளே அன்பர் சீலா
நன்னயமாய் நின்பால்வந் தடுத்தே னென்றன்
நாவினு லுனைப்பாட அருளிச் செய்தாய்
பன்னுதமிழ்க் கரசேமெய்ஞ் ஞான மூர்த்தி
பலகலைக ளாராயும் பயன்கள் நல்கி
இந்நிலத்தி லுன்மகிமை யறியச் செய்த
இங்கிதத்தை யென்சொல்வேன் எம்பி ரானே 10.

பல்லவி

வா வா கணேசா வரந் தருவாய்—கணேசா

அநுபல்லவி

பாவாலெந்தன் நாவாலுன்னைப் பாடவருள் தேட (வா வா)

சரணம்

1. தொந்தி வயிறு குலுங்க உந்தன் துதிக்கை யசைந்தாடத்
தந்தி முகமி லங்கக் காலில் சலங்கை இசைபாட
அந்தி மதியணிந்த அரன் புதல்வா விளையாட
வந்துதித் தோனே மலர்ச் சரணம் தரவருக (வா வா)

2. ஆனைமுகத் தோனே அங்குச பாசத் தோனே
கானக் குறவள்ளி கணவனுக்கு மூத்தோனே
மோனமதி லுணர்ந்த மும்மதவே ளெனும்பரனே
ஞானகுரு மூர்த்தி எந்த நாளு மெனைக்காக்க (வா வா)

3. செந்தாமரை வாவிகள் செறிந்த பூங்கா வனமும்
மந்தாரை பிச்சியோடு முல்லைமலர் சூழ்வனமும்
விந்தை விந்தையாக விளையா டருள்புரியும்
சொந்தமான தென்மதுரைச் சுமுகா எனைக்காக்க (வாவா) 1

பல்லவி

கணேசா கணேசா கணேசா கணேசா
கடம்பவன முன்னுதித்த காரண கணேசா

அனுபல்லவி

மணமும் அதிகக் குணமும் பொருந்து
மலர்கள் சொரிந்த வனங்கள் நிறைந்த
மாமதுரைமேவுசெய வீர அதிகார
மனோகர கிருபாகர உதார கருணாகர (கணேசா)

சரணம்

1. சோதி மணிமகு டங்கள்சிறந்து
துலங்கு மதிவத னங்கள் பொலிந்து
காத லுடன்மார்பில் முந்நூ லணிந்து
காலிற் சதங்கை கலீர் கலீரென்று
கணகண கணீரெனக் கலந்திசை பாடக்
கவிகள் பலகீதம் கண்டு களிகூரும் (கணேசா)

2. சிந்தை மகிழ்ந்து தினமும் புகழ்ந்து
தெரிசிக்கும் அன்பர்கள் கரங்கள்குவிந்து
வந்தனஞ் செய்யும் விதங்க ளறிந்து
வரம்புரி கின்றம கத்துவ முயர்ந்து
வரும் பிணிகள்யாவும் அகற்றும்வழி தேடி
மலடுசெவி டூமைகளை மாற்றுவி தம்நாடும் (கணேசா)

3. வேடிக்கை யாகவே அந்தகர் தங்கள்
விழிகள் தெரிந்திட வேயருள் காட்டிப்
பாடிப் பரங்கள் தனைப்போல வந்து
பசிக்கன்னந் தாவென்று பலதரஞ் சாட்டி
பாகர்கள் நன்மனை தோறுமே நுழைந்து
பலகாலும் சோதனைகள் செய்யவே வளர்ந்து (கணேசா)

4. மெய்யென்று நம்பும் விதங்களை யுத்தும்
விதம்வித மாகவே மெய்காட்டி நித்தம்

ஐயனே யுன்னை அனுதினம் போற்றும்
அடியார்கள் நெஞ்சக் தகலா திருந்து
ஆடுகின்ற கூந்தை அருகிலிருந் தோதி
ஆராய்ந்து பார்க்கும் வகைசொல்லும் சேதி (கணேசா) 2.

பல்லவி

ஐயே யுனதடைக்கலம் கணேசப் பிரபு
ஐயே யுனதடைக்கலம்

அனுபல்லவி

வையக மதிக்கவென்று வந்து அருள்புரிந்து
மைந்த னெனவுகந்து சொந்தஅடிமை கொண்டாய் (ஐயே)

சரணம்.

1 உலக மதிக்கவென்று உன்னையா னென்றுகாட்டிக்
கலகப் படுத்துவதும் காட்சிப்ர மாணமோ (ஐயே)

2. ஆதி குருவாய்வந்து அடிமைக் கருள்செய்ததை
நீதமென வுணர்ந்து நிச்சயப் படுத்திக்கொண்டேன் (ஐயே)

3. உன்னையா னென்றுசொல்ல உன்னுணை பொய்க்குமோ
என்னைநீ காட்டுமரு ளின்னதென் றறிகிலேனே (ஐயே) 3.

பல்லவி

கண்டு தெளிவாய் மனமே—கணேசனைக்
கண்டு தெளிவாய் மனமே

அனுபல்லவி

அண்டர்தொழு மூர்த்தியை ஐயன் மதுராபுரி
கொண்ட கரிமுகனைக் கோல முடனே நிதம் (கண்டு)

சரணம்

1. சத்தியுமை யாள்பாலன் சகத்திலுயர் தண்டமிழ்க் கனுகூலன்
சித்திவிநாயக சீலன் செம்பொற் பாதந்தனைநாளும்
சிந்தித்தவர்மன தன்பிற்புகுநல
மந்த்ரக் கருணை புரிபரனை நீ (கண்டு)

2. தென்றல் சாமரைபோட வைகைநதி சலபிரளயங்களோட
விந்தையாய்க் குயில்கள்பாட வேடிக்கை மயில்களாட
வெகுசிவ பக்தர்கள் தபசுமிகப்புரி
விதமதனைத்தையும் அறியுமகத்தினைக் (கண்டு)

3. பூங்கா வனங்கள் சூழ அருகினில் பொங்குதேங் கோங்கிவாழ
பாங்கா யமுதுநள பாகத் துடனே கொளப்
பரிமள புஷ்பமொ டணிகமளத்தனைப்
பலவித முக்கனி புசியுமுகத்தனைக் (கண்டு) 4.

பல்லவி

வல்லபை மணாளா சரணம்—கிருபாகரனே
வல்லபை மணாளா சரணம்

அனுபல்லவி

தொல்லையெனும் சாகரத் தல்லல் களையவென்று
தொழுமடி யவரிரு வினையக லவருள்செய் (வல்லபை)

சரணம்

1. அன்னைபிதாவும் நீயே அருளே தருமோன
தயாபரனே யென்னை—ஆதரித் திடுவாயே
பின்னோர் துணைவே றில்லையே பெருமா னெனும்
ஞானசிகாமணியே ஏந்தன்—பிழைபொறுத் தருள்வாயே (வ)

2. சிந்தை குடிகொள்வேதா தெளிவான சதாசிவ
பீடம தாகிய—தேசிகா நின்னடி தாதா
பந்தமறுப் பாய்நாதா பரமே யருவுருவாகி
நிறைந்தவா—பாசமழிப்பாய் நீதா (வல்லபை)

3. தேகம்நிலை நில்லாதே திகழ்மா மதுரம்பொழி
தேனே சீனியே—ஜெனிக்கும்வகை பொல்லாதே
யோகநிலை விள்ளாதே ஒரு பாலகன் நொந்து
வருந்து மிடர்தவிர—நுணக்கமது சொல்லாதே (வல்லபை)

4. சகிக்கமுடி யாதையனே தமியே னுடல்பொருள்
ஆவிமூன்றுந்திறை—தந்தேன் தந்தேன் மெய்யனே
சுகிக்குமடியார் நாளும் தொண்டு புரியும் சபை
கண்டு மகிழ்ந்திடும்—சுகத்திலிருத்து வாயே (வல்லபை) 5.

பல்லவி

காணக் கிடைக்குமோ கணேசா நின்பாத சேவை
கரிமாமுகனே சிற்சபை தனிலே நடமிடு பொற்பாதம்

அனுபல்லவி

பேணப் பேணப் பிறவி நீக்கிடும்
பெருமானென்றுனைப் பிரியமாய்த் தேடப்
பேதமை யென்பதுசற்றும் பாதகமென் றுணராமலே (கா)

சரணம்.

1. சோதி மகுடம் பத்திக்கப் பத்திக்கத்
துதிக்கை இசைந்து சித்திக்கச் சித்திக்கப்
பாதச் சிலம்பு சத்திக்கச் சத்திக்கப்
பகர்ந்த மந்திரம் தித்திக்கத் தித்திக்கப்
பரிபாஷைக ளறியும்படி திரிகாலமு முணரும்படி (கா)

2. வேதாகம சாஸ்திர புராணமும்
விரிந்த சாஸ்திரம் பலர்க்கும் காட்டியே
சோதிட சிற்பமும் ஆரூடங்களும்
சொல்லத் தொலையாத கற்பித நூல்களும்
துகளற்றிட அடியர்க்கருள் புரியக்கிர்பை தருமுத்தினைக் (கா)

3. சரியை கிரியாயோக ஞானமும்
தத்துவங் கடந்த முத்தர்கள் சேவையும்
அரிசிவ மெனக்கருதி நடக்கும்
அன்பர்கள் நேசமும் தந்த குணாளனே
அறிவாகர சொருபத்தினி லயமாகுத லுறுதிப்பட (கா)

4. தேவர்கள் மூவர்கள் காணாத் திருவடி
சிதம்பரத்தில் நடிக்குந் திருவடி
பாவனைக் கெட்டாப் பரமன் திருவடி
பத்தர்கள் தேடிப் பிடிக்குந் திருவடி
பந்தாதிக ளறறுக்கிருபை சிநதைதனில் வைத்துத்தினம் (நா)

பல்லவி.

கண்டுகொண் டாயோ மனமே—கணேசனைக்
கண்டுகொண்டாயோ

அனுபல்லவி.

கண்டுகொண் டாய்நீ தொண்ட ரிடத்தே
கருணைபுரியுங் கணேசர் பதத்தைக் (கண்டு)

சரணம்.

1. வானவர்க் கருள்புரியு மீசன் மதுராபுரியில் வாழுங்கணேசன்
மோனமுற்றிடு மௌனயோகன் மும்மதம்பொழி மூஷிகவாகன்
ஞானமூர்த்தி மெஞ்ஞானிகள்பாகன் நற்றமிழ்க்குதவிபுரிதேகன்
ஆனைமுகத்த னங்குசபாசன் ஐங்கரத்தனை அனுதினமுநீ (க)

2. வைகைநதியின் தென்பாலோங்கி வளர்ந்தராஜ விருக்ஷத்தடியில்
செய்யபுகழ் பெற்றேறுங்குமீசன் செங்கோல் செலுத்தி யரசு புரியும்]
சையோகத்தையும் மகிமையுங்கண்டு தபசுபுரிவ ரனந்தங்கோடி
நைவேத்தியஞ்செய் யன்பர்கள்நெருங்கி நாளும் பணிந்திடு விதத்தை நாடிக் (கண்டு)

3. பத்திபுரியு முலகத்தோர்கள் பாவனைகளை அறிந்தனுதினமுஞ்
சித்திகொடுக்குங் கிருபையாளன் ஜென்மவினைகளகற்றுவேளன்
கற்றுணர்ந்தும் நல்லறிவில்லாத கசடர்தங்களை நரகில்தீர்த்தும்
வெற்றிபுரிந்திடுமையன்பதத்தை விரும்பி நன்மைகள் பெறவும் நாடி (கண்டு) 7.

பல்லவி.

ஏழைபடுந்துயரம் பாராய் சற்றே—ஏழைபடுந்துயரம் பாராய்

அநுபல்லவி.

பேழை வயிற்றோனே பெருச்சாளி வாகனனே
பெற்றவா வுனைப் பற்றவா
பிறந்துபிறந்து மண்மேல் உழன்றுவஞ்சியர் மோகத்
தலைந்து குடிகேடன்போல் திரிந்துகெட் டழிந்திடும் (ஏழை)

சரணம்.

1. முந்நாள்செய் கர்மவினைப் பயனோ—அந்நாள்
முறையை விதித்ததுவு மயனோ
இந்நாள் படுந்துயர்சற் றல்லவே—இத்தை
யார்பா லெடுத்துரைப்பேன் குறையே
என்போ லெளியவரும் உன்போல் வலியவரும்
எங்கெங்கும் பார்த்தாலு மிலையே—துன்பம்
அங்கமெடுத்தவர்கள் துலையே
இச்சையினால் வருமாயை முற்றுமே சூழ்ந்துகொண்டெனை
இழுத்து மடிபிடித்துத் தொடுத்துப்போ ராடுதே (ஏழை)

2. பெரியோர்செய் நன்றிமறந் தேனோ—பொல்லாப்
பிழைகளைச் செய்யத்துணிந் தேனோ
வெறியரோ டுறவுசெய் தேனோ—சுத்த
விரதாதி தன்னையிகழ்ந் தேனோ
விண்ணவர்கள் தொழுதேத்தும் அண்ணலே உனைமறந்து
வினைப்பய னின்னதென்று மறியேன்—சோ
தனைக்குநா னென்னசெய்வே னெளியேன்
வேதவே தாந்தமுணர் மாதவர்கள் அடிதொழாது
விட்டகுறை யல்லாது கிட்டுமோகிட் டாதோசொல்வாய் (ஏ)

3. மதலைசெய் குற்றம்பொறுப் பாயே—அசுத்த
மாயா விகாரமறுப் பாயே
குதலைவாய் மொழியென்னுங் குற்றமோ—இதைக்
குற்றமென் றுலக மொப்புமோ

கோடானகோடி சென்மம் நானே பிறந்திறந்தும்
குறைகளனுபவிக்க வில்லையோ—இந்தத்
தரையி லெனைப்போல்யாரு மில்லையே
கொடியவினையனென்று முடியாக் கணக்கெடுத்தால்
குற்றவாளி நீயென்ன வுத்தமர்கள் மதிக்காரோ (ஏழை)

4. அறியாத பாலனென்றார் சொல்வார்—என்றும்
அனியாயம் செய்தால்நியாய மல்லவே
பரிகாரமென் றென்றைக்கு மில்லையோ—பொல்லாப்
பகையனென் றலும் கொடுஞ் சொல்லையோ
பலகால் செனனமெடுத் தொருகால் முடிவில்லாத
பற்றுவர வெங்குமிலை ஐயனே—வழக்கில்
சற்றுமுனை விடமாட்டேன் மெய்யனே
பாக்கியென்று சொன்னாலுனைத் தாக்குவேன் சபைதனிலே
பரியாசம் செய்வதெல்லாம் அறிவேன் சத்தியமாக (ஏழை)

5. கருணைப் பிரவாக னென்றுஞ் சொல்லுவார்—பொய்க்
கணக்கு முடித்தானென்றும் விள்ளுவார்
அருமை தெரிந்தவர்க ளழுவர்களென்று—மதை
யார்பாலுஞ் சொல்லவில்லை களவால்
அற்பமான செய்கையென்றும் உத்தம ரிகழ்வாரென்றும்
அடக்கங்கள் செய்துகொண்டேன் குரவா—உன்தன்
திருட்டுத் தனங்களெல்லாம் மறைவா
அப்பனேநான் சொல்லவில்லை பற்றுவர வெனக்கில்லை
அடிமை யெனச்சத்தியம் முடிவாகச் செய்துகொண்டேன் (8)



திருப்பரங் குன்றம்

பல்லவி

காக்கக் கடனுனக்குக் கந்த வடிவேலா நீ
ஆர்க்குங் கிருபை செய்யும் அப்பனே குன்றாரா

அனுபல்லவி

காக்கவந்திடு கற்பகமேவினை—தீர்க்கவந்திடு மற்புதமே (காக்க)

சரணம்.

1. அத்தனுடன் வாதாடி அம்மைபெற்ற பாலா
அன்பர்களைக் காக்கவந்த சின்மய விலாசா
சுத்த துரியதுரி யாதீத விதலோலா
* சுப்பிரமணியன் சொற்கவிக் கருள்புரியுஞ் சீலா
ஸ்ரீஸ்ரீ வெளியேசுந்தரனே காக்ஷி புரியு மந்தரனே (காக்க)

2. சூராதி சூரரைவென்ற தோகைமயில் வாகா
சுத்த நிற்குணானுபவ முத்திதரும் போகா
ஆறுதாரப் பொருள மைந்த வசசிரதேகா
அம்மைவள்ளி தெய்வானைக் கன்புபுரி பாகா
அமரர் பயங்கர மொழித்தவா சமரில்முகன்றனை வதைத்தவா()

3. நிற்குண நிராலம்ப நிர்மல விநோதா
நிரஞ்சன நிராமயம் நிறைந்தபரி போதா
சொற்பெரிய பூரண சுயம்பிரகாச நாதா
சொல்லரிய சோதிமய மானநவ நீதா
தோகைவிரித்துயர் மாமயிலேறித் தோன்றிநடத்தும் வேலனே
(காக்க) 9.

பல்லவி

ஆடிவருவாய் மயிலே கந்தனைத்—தேடிவருவாய் மயிலே

அனுபல்லவி

அஷ்டா க்ஷரத்தினுயர் அறுமுகனைப் பணிந்தேத்தி (ஆடி)

சரணம்

1. ஓம் சரவணபவ குகனே ஓம் சயிலொளி பவநிதனே
ஓம் திரிபுரபவ மயனே ஓம் நிகமொளி பரசமயனே
ஓங்கார வட்டமதில் உள்ளே யமைந்த
ஓம் பிரணவமய மதைச் சற்றே நினைந்து (ஆடி)

2. முத்தி தரும்சிவ யோகன் மூர்த்திப் பிரணவ மூலன்
அத்தி முகன்தனக்கிளையோன் அன்பர் மனதரு கிருந்து
ஆடுமயி லேறிவிளை யாடிவருந் தீரன்
அமரரிடர் தீர்க்குமமை தையனை நினைந்து (ஆடி)

---

* சுப்பிரமணியன்—சுவாமிகளின் இயற் பெயர்.

3. நித்தியகல் யாணசுதன் நேர்ந்த வரப்ரசாதன்
பத்திபுரி குமரேசன் பாதமதை நினைந்துருகி
பாடுமிசைக் கானவொரு நாளுமிடர்வாரா
பரம பதமடையப் பத்தியதும் வேறே (ஆடி) 10



சிவபெருமான்

பல்லவி

சிவபெரு மானுக்குத் தொண்டு செய்யாவிடில்
சென்ம மெடுத்ததும் வீணே.

அனுபல்லவி.

அவனி தனிலதிக தவமகிமைகள் பெறும்
அன்பர்ம னதிற்குடி கொண்டரு ளும்பிர்ம (சிவ)

சரணம்.

1. ஏழைபங் காளரா யிருப்பார்—எளி
யோர்செய் வினைகளைப் பொறுப்பார்
காளைமீ தேறியே நடிப்பார்—கை
லாசம் வீற்றிருந்தருள் கொடுப்பார் (சிவ)

2. அற்பர்கள் தன்னைமறந் திடுவார்—அறி
வுள்ளோர் தனைத்துறந் திடுவார்
சிற்பர சின்மய மாகி — நிதம்
சிவலோக மிருந்தருள் கொடுப்பார் (சிவ)

3. சரியை கிரியா யோகபதங்கள்—தனைச்
சாற்றியே நிலைபுரிந் திடுவார்
அருவ மின்னதென்றும் உருவ—மின்னதென்றும்
ஆனந்தங் காட்டியருள் கொடுப்பார் (சிவ) 11.

பல்லவி

சோதனை செய்யாதே அரனே—சோதனை செய்யாதே

அனுபல்லவி

சோதனை யால்வெளி யாகும் விதங்கள்
சூத்திர மென்று துணைபற்றி னேனே (சோதனை)

சரணம்

1: அத்தனே உன்னை யனுதினம் யான்தொழச்
சித்தி புரியும் சிவனே யினியெனை ச (சோதனை)

2. பஞ்சமா பாதகர் நெஞ்சம் பிளந்திட
அஞ்சலில் வந்து அனுக்கிர கம்செய்வாய் (சோதனை)

3. கருணையா யன்பரைக் காக்குந் தயாபரன்
வரும்வினை யெல்லாம் அகற்றியே கைக்கொண்டு (சோ) 12.

பல்லவி

ஈசா எனக்குவரந் தாராய்—இதுசமயம்
ஈசா எனக்குவரந் தாராய

அனுபல்லவி

பாசக் கடலில்விழுந் தாசைப் படுமவினையால்
மோசப் படாமலென்னை நேசிந் தருளுநகந்து (ஈசா)

சரணம்

1. ஆதி யினிற்செனித்த கால மிதுவரையில்
ஓதிப் படித்தகல்வி யேதுக் குதவியினி (ஈசா)

2. கும்பிக் கிரையேதேடிக் கூவித் திரிந்தேனிநநாள்
நம்பிக்கை போகுங்காலம நானிங் கிருப்பதில்லை (ஈசா)

3. கள்ளர் திருடர்தம்மைக் கைக்கொள்ளுங் காலமதில
வள்ளலென்றும் பேரேது வையித்தி லாருமில்லை (ஈசா) 13.

பல்லவி

ஈசனை நம்பினேனே—செக—தீசனை நம்பினேனே

அனுபல்லவி

ஈசனைநமபியோர் மனத்துடன் இருதயத்தினைத் திருத்தி (ஈச)

சரணம்

1. ஆசைப்படுவ தேதேனோ அலைந்தோடித் திரிவதேதேனோ
பாசக்கடலைக் கடந்தும் பலவேஷத் தொழில்களேனோ (ஈச)

2. மாடுமக்களை மறந்து சொந்தமனைவி தனையுமிழந்து
வீடுசுற்றமுமறந்து மெஞ்ஞான வீட்டினைத் துறந்து (ஈச)

3. ஆதியந்தமுமாகியரன் கண்ட வெளியுமாகி
சோதி வடிவமான-பிர்ம சூக்ஷவழியைத் தெரிந்து (ஈச) 14.

பல்லவி

உனைநம்பி னேனேயான்-உனைநம்பி னேனே

அனுபல்லவி

உனைநம்பி னேனிந்த வுலகத்தை மதியாமல் (உனை)

சரணம்

1. வேதங்களோதி அறிந்துன் விதங்களைப் பாடி
மாதர்கள் மேலிச்சை வையாமலே யுந்தன்
பாதத்தைத் தேடிப் பதந்தரு வாயென்று (உனை)

2. பூதலத்தோர்கள் பணிந்து புகழ்ந்திடும் நாதா
சோதனையா லெளியேன் படும் வாதனை
சொல்லவொண் ணாது சுகந்தரு வாயென்று (உனை)

3. மாதமும்மாரி பொழியு மதுரையில் வாழும்
நீதனே நம்ஜெக தீசனே உன்னை
நினைந்து நினைந்து வரந்தருவா யென்று (உனை) 15.

பல்லவி

ஐயன் கிருபை வேறே சுகம்—ஐயன் கிருபை வேறே

அனுபல்லவி

ஆர்க்கும் கிருபை புரியும் விதங்கள்
அவரிடத்திலே கண்டாய் வேறெவரிடத்திலே கண்டாய் (ஐ)

சரணம்

1. அன்பர் மனதிற் புகுந்து-விளை-ஆடுங் கூத்துகள் பாரார்
உண்ணும் பதத்தை நினைந்து-தினம்-ஊணுறக்கமு மிழந்து
இன்ப சுகமும் மறந்து-இங்கே -இனிப் பிறவியு மகற்ற
இன்னவித மென்றுரைத்தார்-ஜெக-தீசன் பதத்தை நாடி(ஐயன்)

2. அன்னை தந்தையுமவரே-எனக்-கானகுருவு மவரே [நாதா
சொன்னமொழிகள் தவறு-மதுரைச்-சொக்க வனச்சொக்க
நன்னயமாக என்னை-இங்கே-நாளுக்கு நாளாய் வளர்த்து
இன்னவித மென்றுரைத்தார்-இங்கே-இனிப் பிறவியுமில்லை
(ஐயன்)

3. உலகத் துதிக்கு மன்ன-ரெல்லா-முணர்வில் லாத கள்ளர்
நிலையற்ற வாழ்வை நம்பி-நாளும்-நெறிகள் தவறி நடந்து
சிலையிற்றொடுத்தவாளி-யம்மைச்-சீதையைச் சிறைவிடு தல்போல்
ஒளித்தெய்ய வந்தாரங்கே-உலக-நாதரென் றுரைத்தேனிங்கே
(ஐயன்) 16.

பல்லவி

பூமியில் வாராஞே அருள்பெற யிங்குவந்து
பொற்பதந் தாராஞே

அனுபல்லவி

வாமித் திரிசூலி சிவகாமி சௌந்தரி
மங்கைமண வாளனைக் கண்டுதெரி சித்திட (பூமி)

சரணம்

1. அன்ப ரிருதயத்தில் குடிகொண்ட ரூபம ரூபமதாய்
இன்பங் கொடுப்பவனாய் எனதுள்ளத் தேகமாய் நிற்பவனாய் ()

2. தில்லைச் சிதம்பரத்தில் நடம்புரி சித்தம் பலத்தானே
அல்ல லறுப்பவனே உனை யனுதினம் யான்துதிக்க (பூமி)

3. சாலோக சாமீபங் கடந்த சாரூப சாயுச்சியம்
நாலாம் பதவிதன்னை அடைந்திட நற்பதங் காட்டுதற்கு (பூமி)

4. கலியுகந் தன்னிலே ஐயன்வந்து காட்சிகள்காட்டவென்று
உலகில் மானிடமாய் வருவாரென் றுண்மைதெரிந்திருந்தும்(பூ)

5. ஊழூழி காலமெல்லாம் அவதரித் துண்மைகள் காட்டவென்று
ஏழை பரதவித்து அழுங்கண்ணீர் இன்னமும் போகாதோ (பூ)

6. எங்கும் நிறைந்தவராய்ப் பலவுயிரெல்லாந் தழைத்துநிற்க
பங்குகொ டுப்பவனாய் அரிபரி பாஷைகள் சொல்பவனாய் (பூமி)

7. வேதங்கள் பொய்யாமோ விதித்த விதிகளும் பொய்யாமோ
சாதன முள்ளவர்க்கு அருள்தந்த சாட்சியும் போராதோ (பூமி)

மதுரை-மீனாட்சியம்மை

பல்லவி

பாராயுன் திருக்கண்ணால் எனைப்
பார்த்துச்சஞ் சலங்களைத் தீராய்

அனுபல்லவி

பாரோர் புகழ் மதுராபுரி மேவிய சங்கரியே சிவசங்கரியே நீ ()

சரணம்

1. மாமணி மகுடம் புனைந்திடும் வல்லி
மதிவதனங்கள் சிறந்திடுஞ் செல்வி
காமனையெரித்த கண்ணிணையுடையாள்
கற்பகத்தருவே கனியெனுந்திருவே (பாராய்)

2. வண்டுகள் பாடும் வனந்தனி லுதித்த
மகுடசங்காரி மணிமந்தர ரூபி
குண்டோ தரனுக் கமுதினை அளித்த
குரக்தி ஓங்காரி பரத்தி ரீங்காரி (பாராய்)

3. ஆதியி லரனோ டாடிய சக்தி
அன்பத்தோ ரக்ஷரத் தமைந்திடுஞ் சித்தி
சோதிமுச் சுடரே சுடரொளிக் கொழுந்தே
சூக்ஷம வெளியே காக்ஷிதந் தெனைநீ (பாராய) 18.

மன நிலை யுணர்த்தல்.

பல்லவி

கோபஞ் செய்யாதே மனமே—கோபம் செயயாதே

அனு பல்லவி

கோபஞ்செய்தால் பாபங்கள் நேர்ந்து
குற்றம்வந் தெய்துனைச் சற்றும் விடாது (கோ)

சரணம்

1. பாசக்கடலை அகற்றிக் கொடும் பாழ்வினைகளைத் துரத்தி
நேசித்தானை மனதில் தினமும் நினைந்து நினைந்து திருத்தி (கோ)

2. தாய் வயிற்றினில் பிறந்து நல்ல சன்மார்க்கங்களை அறிந்து
மாய்கை யென்றிங்கே தெரிந்து மனம் வாடுவதேன்மதி மறந்து()

3. உன்னைப் படைத்தவனுரு உனக்குள்ளே இருக்கிறன்பாரு
சொன்ன படியேநீ தேரு சிற்சொரூப நிலையைநீ சாரு (கோ)

4. மூடர்கள எத்தனை கோடி பல மூர்க்கர்கள் எத்தனை கோடி
பாடி யிருப்பவர் கோடி பணந் தேடியிருப்பவர் கோடி (கோ) 19.

காவடிச்சிந்து

1. வெள்ளியி னாலேவி ளைந்தந கைகளை
வேண்டாமென் றேநினை மனமே—நிரேகம்
பூண்டால்வ ரும்வினை திடமே—நம்மை
ஆண்டா ருரைத்தது முனமே
வேதவிதி யோவல்லது சூதோவி னையோவென்றறி
விட்டகு றைவந்து தாக்குஞ்—சஞ்சித
கட்டையெல் லாம்பஸ்ம மாக்கும்

2. பொன்னினு லேசெய்த பூஷண மென்றுமே
போடவி ரும்பினல் கேடு—இனி
நான்சொல்வ தேவழி பாடு- மறை
நீதியி லேவுற வாடு
புலவோர்களு மரிதாகிய தவமேசெபு மிடமானது
போயுணர்ந் தேபதந் தேடு—சிவ
யோகமோன் றேசெய்ய நாடு

3. தங்கத்தி னலேச மைந்தந கைகளைத்
தானறி யாமலே போடு—சற்றும்
யான்விரும் பேனது ஓடு—எமன்
ஓலைவந் தாற்சுடு காடு

தனதானதை உறவோர்களு மெனதேயென விடுவார்களோ
சாலமல் லோயிந்தக் கூடு—பர
மானந்த மேசேர்ந்த வீடு

4, முத்தார மோடுந வரத்ன மாலைகள்
மோகன மாலைகள் வேறு—பரி
பாகமென் றேயுணர்ந் தாரோ—சுத்த
யேகவெ ளிதுறந் தாரோ
முடிமன்னர்கள் படையாதிக ளொடுகூடியே நிலையாயினு
மோசமென் றேமுன்னோர் கருதி—மல
பாசமென் றேதள்ளுஞ் சுருதி

5. பட்டுப்பட் டாவளி பார்க்கவ லங்காரம்
பண்ணவென் றேநினைந் தாயே—சர
மெண்ணும லேபுனைந் தாயே—கொன்று
உண்ணுவி ரதமென் றுயே
பக்தரோடு முக்தர்களும் சித்தந்தெளிந் தாரென்பது
பாவமென் றேமர வுரிகள்—எடுத்
தாடை புனைந்ததூ மறிவாய்

6. பூடுசு சோடுச டாவென்று பாதத்திற்
பூட்டுவ தும்நல்ல மதியோ—காவி
வேட்டியு டைகளும் விதியோ—தன்னை
மேட்டிமை செய்வதுங் கதியோ
போதைபல மாமிசமும் வேறுபட வேதங்குரு
போதிப்ப தும்முணர் வாயே—பின்னால்
வாதைப்ப டுவதும் நீயே

7. வேதாந்த வீட்டின்வி ளக்கொளி கண்டவர்
மெய்யிலே தும்மணிந் தாரோ—யாவும்
பொய்யென வேதுணிந் தாரோ—பர
சையோக மேபுணர்ந் தாரோ
வெற்றிபுரி மாலையணிந் துற்றகுரு நாதனொடு
வெட்டவெ ளியினிற் சார்ந்தார்—பிர்ம
நிட்டைபு ரிந்துமே தேர்ந்தார்

8. பெண்ணாசை யென்றும் பிதற்றித் திரிந்திடப்
பேதமை யேபிறந் தாயே—யோக
சாதனங் கள்மறந் தாயே—கொடும்
பாதக மும்பெருந் தீயே [விடப்
பெண்ணாசைகள் பொன்னாசைகள் மண்ணாசைகள் மூன்றும்
பேசுமெய்ஞ் ஞானிகள் பாதம்—தொழப்
பாசம கலுமே நீதம்

9. மாடுமக் கள்மனை வீடுசுற் றமற்பம்
வாழ்வுனக் கேன்மதி கேடா—மெத்தத்
தாழ்வெனக் கேனது கூடா—முத்தர்
ஞானவ ழிக்கிது யீடா
மனமேபெறு துணிவேபெற க்ஷணமாகிலுங் குணமோடிரு
வானமு தத்தினை மகிழ்வாய்—உண்ணும்
தேனமு தத்தினைத் தெளிவாய

10. ஆறு சுவைவெபாடு நீபுசி யாதிரு
அத்தன் திருவடி காணும்—யோக
சித்திக ளும்பல தோணும்—திட
பத்திவை ராக்கியம் வேணும்
அறமேபுரி துறவாதிகள் பணியேசெயத் துணிவாயிரு
அற்பசு கங்களும் ஒழியும்—ஈசன்
பொற்பதங் கண்டுமே தெளியும்

11. பந்தமு மற்றுப்ப ணியற்றுசற்குரு
பாதத்தைப் போற்றிடு சேயே—அருள்
வேதவி திப்படி நீயே—பேதா
பேதகம் போக்கிடு வாயே
பலகாலமும் நிலையாகவே சலனாதிகள் விலகாதிரு
பஞ்சப்பொ றிபுல னடங்கும்—மாயா
வஞ்சப்பி றவிக ளொடுங்கும்

12. பாவம கன்றிட வேதமு ழங்கிடப்
பந்தமு னக்கினி யேனோ—துன்பம்

சொந்தமென் றேநினைப் பேனோ—அருள்
வந்ததென் றுல்விடு வேனோ
பாசக்கயி றேநித்தியம் வீசித்திரி வார்களொடு
பக்ஷம றந்திடு மயிலே—அரு
ளிச்சைசு ரந்திடுங் குயிலே 20.

பல்லவி

வந்ததை ஒப்புக் கொள்வாய்—மனமே
வந்ததை ஒப்புக் கொள்வாய்

அனுபல்லவி

வந்ததுவே சிவன் தந்ததென் றறிந்து
சிந்தை மகிழ்ந்தே தேறித் தெளிந்து (வந்ததை)

சரணம்

1. மட்டுப் படாத கவலையை யொழித்தும்
வையகந் தன்னில் மகிமை யளித்தும்
வெட்ட வெளிதனில் பம்பரம் போல
விசைகொண் டாடிடும் விமலனைக் கூடி (வந்ததை)

2. பாசபந் தமதை வேரறத் தாக்கிப்
பஞ்சப் புலன்கள் பறந்திடப் போக்கி
ஆசை கொண்டுவெகு நேச மதாக
ஐயன் திருவடி யனுதினம் நோக்கி (வந்ததை)

3. நல்லது கெட்டது நமக்கினி யில்லை
நாவுக் கறுசுவைக் கஞ்சியே தொல்லை
பல்லுயிர்க் கெல்லாம் பரமனே யிருக்கப்
பஞ்சமு முண்டோ பயம்நமக் கேது (வந்ததை) 21.

பல்லவி

மனமே நீயிந்த சகந்தனில் வாழ்க்கையை
மாயமென் றறிந்திடு நிசமே.

அனுபல்லவி

தினமும் கிருபை புரிந்துபரசு கந்தருஞ்செக
தீசன் பாதத்தை நாடி—ஓர்மையாகக் கூடி (மனமே)

சரணம்

1. ஐந்துபேர் வாழ்கின்ற வீடு—அதில்
அறிவான பொருளொன்றை நாடு
பஞ்சுபோல் பறந்திடுங் கூடு—நாளைப்
பாவியெ மன்வந்தால் காடு (மனமே)

2. வினையினால் செனிக்குமித் தேகம்—நீ
வீண்காலம் போக்குவது மோசம்
அனைவர்க்கு முதவாதிப் பாகம்—இதை
அறியா திருந்தால்சந் தேகம் (மனமே) 22.

பல்லவி.

மோசம் போகாதே மனமே நீ—மோசம் போகாதே

அனுபல்லவி

ஆசையு டன்பல வேஷமெ டுத்துநீ
அற்ப சுகத்தை அனுதினம் கைக்கொண்டு (மோசம்)

சரணம்

1. பார்தனில் பெற்றதாய் தந்தை யிருந்தென்ன
பக்ஷமு டன்பிறந் தாரிருந் தென்ன
ஊராரும் சுற்றமும் பெண்டீ ரிருந்தென்ன
உண்மையா கப்பெற்ற பால ரிருந்தென்ன (மோசம்)

2. சட்டமு டன்தேடி வைத்த பொருள்வீடும்
சார்ந்திடு மாடமா ளிகைபொன் மேடையும்
கட்டில்சோ பாமெத்தை கனக தண்டிகை
காணாத காட்சி அனேக மிருந்தென்ன (மோசம்)

3. நாடிய புண்ணிய பாவ மிரண்டும்
நம்மோடு கூட வருமே யல்லாது.

தேடும்பொ ருளெல்லாம் கூடவ ராது
செகத்தில் வாழ்வை நம்பவொண் ணாது (மோசம்)

4. பற்றுத லில்லாத பாவியெ மன்வந்து
பாசக் கயிற்றினால் கட்டிக்கொண் டோடயில்
உற்றதாய் தந்தை பெண்டுபிள் ளைசுற்றமும்
உன்கூட வருமோமட யானமட் டுங்கண்டாய் (மோசம்) 23.

பல்லவி

அல்லும் பகலும்நமக் கீசன் துணையல்லாது
ஆர்துணை உண்டுசொல் வாய்மனமே

அனுபல்லவி

தில்லை நடம் புரியும் சிவபெரு மானுடைச
சேவடி போற்றுவாய் மனமே (அல்லும்)

சரணம்

1. பொல்லா ரிருப்பிடத்தில் போகாதே மனமே
பொல்லாங்கு நேர்ந்துவி டுங்கண்டாய்
நல்லா ரிருப்பிடத்தை நாடி நாடிநீ
நலத்தைத்தே டிக்கொள்வாய் மனமே (அல்லும்)

2. பாவிகள் இருப்பிடம் போகாதே மனமே
பாவங்கள் நேர்ந்துவி டுங்கண்டாய்
ஆவியொடுங்கு முன்னே ஈசன் திருவடியை
அறிந்து தேடிக்கொள்வாய் மனமே (அல்லும்)

3. பத்தர்கள் தொழுந்தில்லைப் பரம சிவனடியைப
பணியாதிருந்தால் நமக்கு நாளை
குற்றம் வந்தெமன் கையில் சிக்கிக்கொள் வதுமலால்
கொடிய நரகந்தனி லழுந்து வதுநிசமே (அல்லும்) 24.

பல்லவி

மனதிற்கு எட்டாத மணியே—எந்தன்
அறிவிற்குக் கிட்டின குணமே

அனுபல்லவி

மனமி ருந்தவிடம் அறிவாகி நின்றநீ
வாக்கு மனதிற்கெட்டா சாகரத்தில் நின்று (மனதிற்கு)

சரணம்

1. நாத விந்துதனில் நடுவாகி நின்றநீ
நாதாந்த வெட்டவெளி யோக வொளியுமாகி
போதங் கொண்டசிவ புண்ணிய ரறிவாகி
பொற்பீடந் தனில்நின்று கற்சித்த சிலம்போநீ (மனதிற்கு)

2. இடகலை பிங்கலை இரண்டுமொன் றாகிய
யோக சந்நிகண்டு நாதமொடுங்கிநின்று
விடைதனி லேறுமோ ரீச னமிர்தமுண்டு
மேவுங்குண் டலிதன்னை ஏக பதியில்தாக்க (மனதிற்கு)

3. நாபி னுனிமேல்வைத்து நாசி நுனியால் பார்க்க
நடனச பைதனில் நடிக்கும் சிலம்பொலி
மேவியே நின்றிட தோன்று தெல்லாந்தோன்றும்
விதத்தைத் தெளிவாக அறியவுங் கூடுமோ (மனதிற்கு)

4. கண்டா மணியோசை நாத வொளிகள்தோன்றும்
காக்ஷியை எவராலுங் காணவுங் கூடாது
தொண்டரறியும் விதம் விண்டாலுந் தோன்றாது
சுத்த அறிவுநிலை நிற்குணா சூக்ஷங்கண்டாய் (மனதிற்கு) 25.

பல்லவி

படுக்கை யேதுக்கு மனமே—படுக்கை யேதுக்கு

அனுபல்லவி

கடுக்கிட் டெழுந்த மனதை யுருக்கிக்
கார ணங்களைத் தெரிவ தல்லால் (படு)

சரணம்

1. பூமி யந்தமு நாதனாகிப் புவியி லன்பர்கள் நேசனாகிக்
காமி யங்களை யுறுதியென்றிடும் கசடுபலவுந் தணலதாகி
வாமி சுந்தரி யருகில்நிர்த்தனம் மகிழ்ந்துபுரியும் வள்ளலாகி
சாமி என்றிங்கே உலகத்தோர்கள் சாற்று மறையை அறிவதாகி

2. நீதமில்லா மனைவிமைந்தர்கள் நிச்சயமற்றதாம் வாழ்வைநம்பி
காதல்கொண்டு நற்செயலை மறந்து கருமமனைத்துங் கருதிக் கருதிப்
பாதகச் செயல்முழுதும் விரும்பிப் பாவிஎன்றசொல் பலரும் புகல
வேதனைப் படும்நரகில் வீழ்ந்து விபத்தை யடையும் விதத்தை யறிந்து (பரு)

3, தீர்க்க மில்லாத மனமே ஐயன் செயலைமறந் திடாதே
காக்க வல்லோ வறிவாய்மனக் கசடுபலதுந் தெளிவாய்
பார்க்கப் பார்க்க ஐயன்கிருபை பாலித்தருளும் பதத்தைத்
தேர்ச்சி யாகவே அடையும்விதம் தெரிந்து நடத்துவாயே(ப)26

பல்லவி

நித்திரை செய்யாதே மனமே—நித்திரை செய்யாதே

அனுபல்லவி

நித்திரை செய்தால் சத்துருவந் துன்னை
நிமிஷ நேரத்தில் குடிகெடுத்திடும் (நித்திரை)

சரணம்

1. அத்தன் திருவடியை அனுதினம் நினைந்து
அல்லும் பகலுமா யன்புடன் புகழ்ந்து
பத்தி புரிந்துநீ பாவத்தைக் களைந்து
பரம பதமடையும் வழிதனில் நுழைந்து (நித்திரை)

2. ஆறுதா ரப்பொரு ளென்றே தெரிந்தும
அன்பத்தோ ரக்ஷரம் ஆனத றிந்தும்
கூறுஞ் சுருதிபல வேதங்க ளுணர்ந்தும்
கொடிய சுகத்தைநீ திரணமென் றிகழ்ந்தும் (நித்திரை)

3. சித்தங் கலங்கித் தேறித் தெளிந்து
திருவருள் பெற்ற தொண் டர்களெல்லாம்
முத்தி யடைந்த வனுபவ மறிந்தும்
மூடத் தனமுனக் கேனினிச் சும்மா (நித்திரை) 27

பல்லவி

கெட்டிக்காரத் தனங்களேது—மனமே
கெட்டிக்காரத் தனங்களேது

அனுபல்லவி

கெட்டிக்காரத் தனமென்று கட்டிபுத்தி யாலேசொன்னால்
இஷ்டப்படும் போதேயையன் தட்டிக்கொடாதேபோனால் (கெ)

சரணம்

1. உலகம் கற்பிப்பதுவும் நாமோ—அதற்
குள்ளிருந் தாட்டுவதும் நாமோ
பலகலை பயின்றதுவும் நாமோ—பல
விளையாடல் செய்வதுவும் நாமோ (கெட்டி)

2. சந்திர சூரியர் நாமோ—அதைத்
தழுவிய வண்டங்களும் நாமோ
இந்திரன் வானவரும் நாமோ—கண்ட
எழுவகைத் தோற்றமும் நாமோ (கெட்டி)

3. கர்த்தன் பணிவிடையும் நாமோ—அதைக்
கருத்துட் கொள்ளுவதும் நாமோ
முத்தர் பணிவிடையும் நாமோ—இன்ப
முத்தி கொடுப்பதுவும் நாமோ (கெட்டி)

4, ஐயன் படைத்ததெல்லாம் யார்க்கு—இதைப்
பொய்யென்று நினைக்கின்ற பேர்க்கு
பொய்யென்று நினைக்காத பேர்க்கு—ஐயன்
புகழ்கிடைக் கின்றதென்று தாக்கு' (கெட்டி)

5. பஞ்சமா பாவங்களைத் தவிர்ப்பாய்—ஐயன்
பாதமே கெதியென்று துறப்பாய்
வஞ்ச வுலகங்களை வெறுப்பாய்—தினம்
மன்னுயிரைத் தன்னுயிர்போல் நினைப்பாய் (கெட்டி)

6. பத்துக்கற் பனைகளு மில்லை—அதைப்
படித்ததா லாகுமோநீ சொல்லு
நித்திய கர்மங்களைக் கல்லு—அதின்
நெறிகள் தவறலாமோ விள்ளு (கெட்டி)

7. பராபர வஸ்துவு மொன்றே—அதைப்
பாராம லிருப்பதும் நன்றோ
சரிவர நடப்பது மென்றோ—அதைச்
சாராம லிருப்பது முண்டோ (கெட்டி)

8. லாயில்லா காலில்லா குவென்று—கலிமா
நவின்றா லாகுமோ வொன்று
நேயமாக ரகிமான் கட்டளைப்—படி
நிலைத்தா லல்லவோ மிகநன்று (கெட்டி)

9. பாவங்கள் நீங்காத சொல்லு—ஐயன்
பத்தர்களுக் காகுமோ விள்ளு
கோபங்கள் நீக்கியே தள்ளு—நற்
குணமே கதியென்று கொள்ளு (கெட்டி) 28

பல்லவி

ஏனுனக் கிந்த வாட்டம்—அறிந்திருந்தும்
ஏனுனக் கிந்த வாட்டம்

அனுபல்லவி

கோனொருவ னல்லாது ஈனம்நேருமோ செய்த
குற்றமிருந் தாலனுந் தப்பிதம் பொறுக்காதே (ஏனு)

சரணம்

1, நாம்தேடும் கர்மமிது நம்மைவிட் டகலாது
சார்ந்துனைக் கொல்லுமது சர்ப்பவிஷம் போல்லாது (ஏனு)

2, புண்ணிய பாவமிரண்டும் புனர்ச்சென்ம மெடுத்திடும்
பண்ணிய தவங்கள்பரி பக்குவம தடைந்திடும் (ஏனு)

3. மோட்சம் விரும்புஞ்சென்மம் முழுதுந் தொடருங்கர்மம்
சூட்ச மிதுவேயென்று துன்பமின்பஞ் சகிப்பாய் (ஏனு)

4. பருவ மடைந்துமன்பர் பட்ட துயர்கள்யாவும்
சுருதி விளம்புகின்ற துறவு மறிந்திருந்தும் (ஏனு)

5, சத்தியந் தவறாது தானந்தவ முயற்சி
நித்திய கர்மவிதி நேசானுபூதி பெற்றும் (ஏனு)

6. பத்தி வழியேசென்று பலசென்மம் புசித்தாலும்
முத்தி கிடைக்காதென்று மூத்தோ ருரைத்தமொழி (ஏனு)

7. ஆணவ மாயைகன்மம் அகற்றுஞ்சற் குருபாதம்
காண வுருகிநாடிக் கண்டால் தெளிவுவரும் (ஏனு)

8. பஞ்சபூதப் பொறிகள் பரவும் புலன்களற்றுக்
குஞ்சித பாதமதைக் கூடிச் சுகித்திடுவாய் (ஏனு)

9. தற்பர சின்மயமாய்ச் சைதன்யப் பொருளாகிச்
சிற்பர மாய்விளங்குஞ் சிதாகாய வெளியிலே (ஏனு) 29

பல்லவி

சொன்னாலுங் கேட்பதில்லையே—துறவாதி குணம்
சொன்னாலுங் கேட்ப தில்லையே

அனுபல்லவி

முன்னா ளுனைப்போலவே மூட மதியுடையோர்
பின்னா பின்னங்களாகப் பிழையா லடைந்தகதி (சொன்னா)

சரணம்.

1. ஆசைப் பிசாசைத் துரத்து—ஐயனடியை
அநுதினம் நெஞ்சி லிருத்து
பாசப் பகையை யறுத்து—ஸ்ரீ ஓமென்ற
பஞ்சா க்ஷரத்தை நிறுத்து (சொன்னா)

2. முத்தர்கள் பணிசெய் குவாய்—இருவினைகள்
அற்றுநற் கதியடை குவாய்
சித்தந் தெளியச் சிவமாய்வந்—துன்னைக்கூடிப்
பற்றும் பரம குருவாய் (சொன்னா)

3. மும்ம லங்களைப் போக்கு—பிரார்த்வ கன்ம
முழுதும் புசித்து நீக்கு
நின்மல னடிதாக்கு—நிஷ்களங்கமாய்
நிஷ்டானு பூதி நோக்கு (சொன்னா)

4. ஆக்கைநிலை யுள்ள தல்லவே—கூற்றுவன் வந்தால்
காக்கவு நம்மாலு மில்லையே
சூக்குமம் அறிந்து நிலையே—சூக்ஷாதி சூக்ஷம்
வாக்குமன மாதி வல்லையே (சொன்னா)

5. பெண்டு பிள்ளைக ளென்னுமே—சுற்றமும் வாழ்வும்
தண்டு முண்டான துன்பமே
பண்டு சொல்லனு தினமே—உற்றுணர்ந்துநீ
கண்டு தெளிவாய் மனமே (சொன்ன) (30)

பல்லவி

அருவுருவாகிய திருவடிதேடிடு மனமே—நித்யானந்த
அருவுருவாகிய திருவடிதேடிடு மனமே

அனுபல்லவி

அருவுரு வாகிய திருவடி யானது
அமரர் முனிவர்களு மறியவொண்ணாதது
கருணைம தம்பொழி கிருபைசு ரந்திடுங்
கரிமுக னட்சர வடிவில் வந்தவர் (அரு)

சரணம்

1. சனகாதி முனிவர்கள் தழுவிடும் பாதம்
சஞ்சலமுடையவர் நழுவிடும் பாதம்
கனக சபைதனிலே நடமிடு பாதம்
கண்டவர் தரிசித்துக் களித்திடும் பாதம்
கற்ப காலமொடு நூற்ற வாதிபுரி
முத்த ரானவர்கள் பெற்ற பாதமிது (அரு)

2. பஞ்சமா பாதகம் பறந்திடப் போக்கும்
பரம யோகிகள் பணிசெய்ய நோக்கும்
கஞ்ச மலர்ச்சரணம் கருத்துள்ளை தாக்கும்
காணாத திருவடி கல்ந்துனைச் சேர்க்கும்
கற்கண்டோ தேனோ சர்க்கரைப் பாகோ
கனியொடு கலந்திடு ரசமோ பாலோ (அரு)

3. நாத கீதமொடு நடனவி லாசம்
நடிக்கும் ரகசியங்கள் மதிக்க வுல்லாசம்
பாதச் சிலம்பொலிகள் பளபள வீசும்
பகரவென் முல்சேட னுவே கூசும்
பத்ம பீடமெனும் ரத்தன மேடையல
சித்ர மாகவெகு பொற்பிர காசமுயர் (அரு)

4. நம்மால் துதிக்கவென்றால் நாவுபோ ராது
நாதம் ஒலிக்குமொலி செவிக் கேறாது
சும்மா விருக்க வென்றால் துணிவு வாராது
சொப்பனங் களிலுநாம் காணக் கூடாது
துரிய மானவழி தெரிய வேகமொடு
துயர மானபவ மகல வேவுருகி (அரு)
5. ஓகோ அனந்தமறை யோலமிட் டிடுமே
ஒருவருங் காணாத ஜாலங்காட் டிடுமே
பாகோ மெழுகோவென் றும் பதங்கள்கூட் டிடுமே
பழுக்கும் பருவமானால் நாவுக்கெட் டிடுமே
பற்பல கனிகளுள் முக்கனி யாமோ
சற்சனர் தேடிடும் நற்கனி யிதுவே (அரு) 31.

பல்லவி

வாராய் கண்மணியே—என்னருகினில்
வாராய் கண்மணியே

அனுபல்லவி

வாராயென் னருகினில் மயிலே குயிலன்னமே
தீராத கவலையைத் தீர்க்குஞ் சமயமிது (வாராய்)

சரணம்

1. பச்சைக் கிளியே பசுங்கிளியே உந்தன்
இச்சை களிருந்தும்யான் ஏகிய தறியாயோ (வாராய்)
2. முத்தே பவளமே முழுநீலக் கோமளமே
உத்தமர்க ளுக்கெல்லாம் உறவாக வேணுமே (வாராய்)
3. திக்குத்திக் கந்தமெல்லாம் திசைகட்டி யாளவே
பக்கத் திருந்துபார்க்கப் பாவையே நீவந்து (வாராய்)
4. எதிர்த்தோரை ஜெயங்கொள்ளும் எமனென்று மதியாமல்
மதிக்காத பேர்களை மண்டிச் சிதைசெய்வாய் (வாராய்)
5. பூதக ணங்களெல்லாம் புறப்படுஞ் சமயங்கள்
நீதி தவறும்பேரை நிர்த்தூளி செய்குவாய் (வாராய்)
6. சித்திக ளெல்லோருஞ் சங்கமாய்க் கூடியே
வெற்றி புரியவந்த வேடிக்கை யறியாயோ (வாராய்)

7. எட்டுத் திசையும்பதி ஞறு கோணமும்
துஷ்டர்கள் மாளவே சுயக்கொடி நாட்டினேன் (வாராய்) 32.

சந்தப்பாடல்

1, மந்திர மொன்றை நினைந்து நினைந்து [தேடுவாய்
மனங்குவி யும்படி சிந்தை தெளிந்துநீ வாடுவாய்— தினந்—
மற்கட கப்பிடி யொத்துநி லைத்திடு
சித்தமு றக்கவெ ளிப்படு நிர்த்தனம் மயிலே-கூவுங்-குயிலே

2· பந்தம கன்றிட வந்துந டம்புரி
தந்திமு கன்பத மென்றுவ ணங்கிடு பதமே—சிவ—பதமே
பற்பல கோடிச னித்தச னிப்புகள்
அத்தனை யுந்தவிர் நற்பத மிதுவே பாராய்-நுட்பம்-பாராய்

3. சந்திர சூரியர் வந்துபொ ருந்திடும்
அந்தர மேயொரு மந்திரமென்பது சாருவாய்-நிலை-சாருவாய்
சத்திய மென்றேயு ரைத்திடு வேதம்
அசத்திய மானது நித்திய மாகா தர்மமே—இது—தர்மமே

4. அந்தர மேவிநு ழைந்திடு வாய்பல
தந்திர மாகவே விந்தைபு ரிந்திடும் அற்புதம்-வெகு-அற்புதம்
அத்துவி தத்தில்மு ளைத்திடு கற்பக
சித்தியெ னத்தரு முத்தியு மிதுவே அறிவாய்—உண்மை—
அறிவாய் 33

"பல்லவி

போதும் போது மையே—எடுத்த சென்மம்
போதும் போது மையே

அனுபல்லவி

ஏது மறியாத பாலக னென்றுநீர்
எத்தனை சென்மமோ ஏமாற் றியதினி (போதும்)

சரணம்

1. கால சாலங்கோறும் நீதி தவறாது
கட்டளை யிட்டிடுமோர் கடனுமக் கிருந்தும்

கோலங்கள் செய்திடுஞ் சாலங்க ளேதுக்கு
குணங்குறி யறியாத குழவியென் றறிந்தும் (போதும்)

2. மாதர் மக்கள்மனை மீதிலாசை வைத்து
மருவி யிருந்ததோ ரறிவுகள் யாவையும்
பேதமறச் செய்துன் திருவடி சேர்ந்திடப்
பெருங்கருணைசெய்யா திருந்தா லுனைவிடேன் (போதும்)

3. வேதங்கள் வேறு ஆகமங்கள் வேறு
விதித்தவோர் சாஸ்திர வினைகளும் வேறு
சாதி சமயமும் வேறு வேறாகவே
தத்துவம் தொண்ணூற்றாறாய்ப் பிரித்தது மறிந்தேன் (போது)

4. அண்ட பிண்டசரா சரங்களும் வேறே
ஆதி யந்தமாய் நின்றதும் வேறே
தொண்ட ரிருதயத் தகப்பட்டுக் கொண்டுநீர்
தூங்காமல் முழித்தமு ழிதெரி யாதோ (போதும்)

5. உந்தன் சமத்தெல்லாம் தொண்டர்க ளிடத்தில்
உலகமெல் லாஞ்சுத்தி ஒளிந்தாலு முடிந்ததோ
எந்த விடத்திலு முந்தன்ச மத்தெல்லாம்
இனிமேல் நடக்காது நடக்காது சொன்னேன் (போதும்)

6. உலகம் வணங்கும்படி உயர்த்தி வைத்தாலும்
உடனே இகழும்படி தாழ்த்திவிட் டாலுங்
கலகப் படுத்தியெந்தன் சிரசைக்கொய் தாலுங்
கையுங் காலும்வெட்டித் தறித்தாலும் உனைவிடேன் (போதும்)

7. எத்தனையோ சித்துகளை எதிரில் காட்டினாலும்
ஏமாத்து செய்வதினிப் பலிக்காது பலிக்காது
செத்த பிணம்பிழைத்து வந்தாலு முனைநம்பேன்
சென்ம மெடுக்கவினி முடியாது முடியாது (போதும்)

8. நம்பின தொண்டர்களை மோகங்கள் செய்துநீர்
நாட்டிற் குடிகெடுத்த வகைதெரி யாதோ
அம்புவி போற்றிடப் பெருஞ் சித்து களைக்காட்டி
அநேக தேவர்களுக் கிடுக்கண்கள் செய்தது (போதும்)

9. உண்மை தெரிந்தவர்கள் உனைநம்பு வாரோ
உத்தமர் களுக்கெல்லாம் பத்தி பிடிக்குதே
எண்ணங்கள் பலகோடி இருந்தாலு மன்பர்கள்
ஈடழியச் செய்துபர வீடளிக்குஞ் சுகமதில் (போதும்)

10. விதித்த விதிகளும் சாதி சமயமும்
விருப்பும் வெறுப்புமோ இனியெனக் கேது
களிக்கும் பெருவழியில் சுகதுக்க மேது
கைவி டாதெனைக் கலந்துகொள் வீரே (போதும்) 34.

பல்லவி

எனக்கொன்றும் வேண்டாநின் பதமல்லா மல்வேறு
எந்தையே சிவ சிந்தையே உனை எப்படிக் காணுதிருப்பது

அனுபல்லவி

சனித்த சனனமெல்லாம் வீணுகப் போச்சு திந்த
சனனமானு முனக் கடிமைகொள் வாய்நாதா
சிற்பரா அருள் தற்பரா உந்தன் சேவடிப் பதமே துதித்திட (எனக்)

சரணம்

1. உனக்கு மெனக்கு மந்நா ளுறவுபற் றியகாலம்
ஒன்ருய்க் கலந்திருந்த துண்மை ரகசியம்
நினைப்பினில் மறக்குமோ நீ செய்த நன்றி
நெடுங்கால மாகவே ஒருவரு மின்றி
நிருவிகற்ப சமாதியிற்புகும் நிஷ்டைதந்தரு ளற்புதாயினி ()

2. சமய குரவர்நால்வர் சதுர்மறை மொழிந்ததும்
சனகர் முதல்முனிவர் சிரித்த சாதனமும்
மமதை சற்றுமில்லாத மகான்செய் கண்டனமும்
மார்க்கண் டருக்காக மறலியை வுதைத்ததும்
மானிடத்திரு மேனிசாத்தியும் மார்க்கமாகவே வந்துகாட்டினை

3. பரம பாகவதர்கள் பரிபாஷை யுரைத்ததும்
பராசன் மைந்தன் சொன்ன பதினெட் டொருபுராணம்
அரிசிவ பத்தி யென்னும் அனேக சமயங்களும்
அந்தரி யாமியத்தவ வுபநிட தங்களும் [வோ (எனக்)
ஆகமத்துடன் வேத சுருதிகளரியபாஷைகள் பலவும் நீயல

4. அறிவிலாச சேயனை அன்போ டணைத்துநீயும்
அத்வித உண்மையை அறிவித்தும் அறியாத
பிரிவில்லா ஒன்றான பிரமசை தன்யத்தைப்
பிரிவற வுணர்த்தியும் பேதமை யெனனசொல்வேன்
பிராணன் மனதெனப் பிரிக்கும்பேதமை பிரிவிலாதநிற்
குணமுமாயினாய் (என) 35.

பல்லவி.

கோலங்க ளேதடி குயிலே யிந்த—சாலங்கள் தானடி மயிலே
கோலமோ யிதுசாலமோ வென்றாய்—கோலங்க ளேதடிகுயிலே

அனுபல்லவி

கோடானு கோடிகதிர் வீசும்பிர காசத்துடன்
கூர்மையாய்—வெகு—நேர்மையாய் [வும் (கோ)
கொக்கர கோவென்று கூவுங்—குதித் திக்கரைக் கேவந் துலா

சரணம்

1. வேலைப்பொ ருதிடுங் கண்ணாள் சஞ்சித மீதிப்பொருளென முந்
விந்தையோ—யிது—விந்தையோ [நாள்
கூலிக்கு வேலைசெய் தந்நாள் குறை வேலைக்கு வந்தோமே யிங்
குற்றமோ—யிது—குற்றமோ [நாள்
கூவுங்குயில் பேசாதது உலாவுங்குயில் காணாதது [கோ)
கூப்பிடு மோயிந்த நேரம் வந்த கப்படு மோவெகு தூரம்

2. ஆங்காரங் கொண்டுநீ கூவி அரன் கோட்டைக்குள் ளேவந்து
அற்பமோ—யிது—அற்பமோ [தாவி
நீங்காது ஜென்மமென் றேவி யிந்நி லத்தில்வந் தோமடி பாவி
நிலையோ—யிது—நிலையோ
நித்திரைபோ காதையனைச் சற்றேமற வாதேநினை [கோ)
நீங்குவ ரோநிர்த்தன மாடியரு ளோங்கும டிநம்மைக் கூடி

3. மும்மூர்த்தி களுமொன் றாகி முக்கு ணங்களா கப்பிரி வாகி
மூலமாய்—விந்து—மூலமாய்
சன்மார்க்க மேபெரி தாகி தவ முடித்தாரடி மோகி
சத்தியாய—ஞான—சத்தியாய

தத்துவ முழுதுந்தெரிந்தும் சகலகலையு முணர்ந்தும்
சற்குரு வன்னியி லாகாதடி முத்திமோ னநிலை கூடா(கோ)

4. வேசிய ராசைகள் மறந்து விருப் புவெறுப் பற்றுத் துறந்து.
வேகமாய்—அதி—வேகமாய்
ஆசைய பிமான மகன்று அகம் புறம்சுத் தமாய்க் கலந்து
அந்தமாய்—வே—தாந்தமாய்
அட்டாங்க யோகநிலை முற்றுந்தெளி வாகிவிடில் [வார் (கோ)
அன்புடன் சற்குரு வருவார் யின்ப மோனநிலைதனைத்தரு

5. சற்குரு வைத்தேடும் பாதை யிது சகலருக் கும்வரும் போதை
சலனம்—நிற்—சலனம்
மெய்க்குரு வந்த போதே விளக் கஞ்செய் வாரடி கோதே
விசற்பம்—சங்—கற்பம்
வேதாகம புராணநிலை சரியைகிரி யாயோகமும்
மெய்யில் விளங்குமடி நித்தம் வீணாய் வெளியி லேதடி
கற்பம் (கோல)

6. கற்ப மென்பது ஞானம் கச டற்ற லல்லடி மோனம்
காட்டிலோ—யில்லை—காட்டிலோ
பறபல வென்று நாட்டிலே பலர் பகரு வாரடி தொல்லை
பாசமே—யிது—பாசமே
பன்னூல்களும் முன்னோர்களும் பாசித்த வுபாசிதனைப்
பாசாண்டிக ளெப்படி யறிவா ரடி பற்றற்ற லல்லோ
தெரிவார் (கோல) 36,

சுத்தாத்துவித நிலை

பல்லவி

எதேது செய்திடுமோ-அடிமைகொண்டும்-பிறவி நீங்க்
ஐயனையினி—எத்தனை நாள்செல்லுமோ

அநுபல்லவி

வாதேது செயயினும் சோதனை யாகுதே
வலியவந் தாட்கொண்ட மரயையார் னறிகிலேன் (எதே)

சரணம்

1. சரியை கிரியாயோக ஞானபா தமுங்காட்டித்
தானென விடந்தனில் சமரச மாய்நின்றும்
அரிபிர்ம ருத்திரன் மகேஸ்வரன் சதாசிவன்
அருவ வுருவமுள்ள ஆனந்தத் தழுத்தியும் (ஏகே)

2. பிருதிவி யப்புத்தேய்வு வாய்வொடா காயமும்
பெருத்த பஞ்சபூத பௌதிக மாச்சுதே
சோத்திரம் தொக்குசட்சு சிங்குவை ஆக்ராணம்
தொடர்ந்த சத்தபரிச ரூபர சகந்தமும் (ஏகே)

3. வாக்குப் பாதம்பாணி பாயுரு பத்தமுடன்
மனம்புத்தி சித்த மகங்காரம் நான்குமே
போக்கு வரவுள்ள ரேசக பூரகம்
பொருந்துங் கும்பகந்தனில் பிராணன பானன்சென்று (ஏகே)

4. சூதான பாஷைகள் யாதொன்றுந் தோணாது
சொர்ப்பன சாக்ர சுழுத்தி தனில்நின்று
ஆதார மானதோ ராறுக்கு மேலாக
அமைந்த துரியமதில் துரியாதீ தங்காணமல் (ஏகே)

5. அஷ்டாங்க யோகத்தி லழுந்தி யிருக்குங்காலம்
அறிவோடு கலந்ததை யார்தா னறியக்கூடும்
நிஷ்டை முடிவிலே நேச நிருவிகற்ப
நிலைபற்றும் நீயென்றும் நானென்றும் பேதமோ (ஏகே)

6. வாகான கண்மூக்குச் செவிகள் பொறிகளென்றும்
வாய்த்த ஊறுசுவை ஒளிநாத மோசையென்றும்
ஐயையோ யிதுபற்றும் பொறிபுல னைபிருந்தும்
ஆசைகெய லாமடக்கி யருளொடு கலந்ததை (ஏகே)

7. ஆன்மாக்கால் மூன்றையும் அறிவொடு கலந்துமே
ஆக்ாமிய பிரார்த்வ சஞ்சித மூன்றுடன்
நானென கோட்டைக்குள் தத்துவப் பொருளெல்லாம்
நமனுக் கிடமில்லாமல் தனித்துநீ கொள்ளைகொண்டும் (ஏகே)

8. இருக்கு யசுர்சாமம் அதர்வணம் நான்கினுள்
இயைந்தன சூக்கும சாத்திர முண்டாக்கிப்

பக்குவ மாயெங்குந் தானாயி ருந்துகொண்டு
பலதொழில் செய்வதின் பயனை யறிந்திருந்தும் (ஏதே)

9. இயற்கை யகப்பற்றுப் புறப்பற்று நீங்கியும்
எல்லா மிவனாகி யிரண்டறக் கலந்தபின்
பார்த்த விடமெல்லாம் பராபர மொன்றாகிப்
பக்குவ ஞானிகள் பட்டபா டுகள்பொய்யோ (ஏதே)

10. நாமே பிர்மமென்று நவிலவுங் கூடுமோ
ஞானிகள் நகைப்பரென் றெண்ணவும் வேண்டாமோ
ஆமோ அண்டபிண்ட சராசர மிவனாலே
ஆதித்தன் சந்திரன் நட்சத்திர மிவையெல்லாம் (ஏதே)

11. இவனே பிர்மமென்றால் இறப்புப் பிறப்பேது
எத்தவத் தோர்கட்கும் நினைப்பு மறைப்பேது
தவநெறி யுணர்ந்தோர்கள் சாற்று மறைகளெல்லாம்
தப்பா துனையன்றியோ ரணுவு மசையாது (ஏதே)

12. அன்ப ரிருதயத்தி னருகிற் குடியிருந்து
ஆனந்தக் கூத்தாடி யருள்விளை யாடலெல்லாம்
சென்ற விடங்களெல்லாஞ் சீராட்டிச சீராட்டிச
செப்புங்க லைகளெல்லாந் தெளிவாகத் தெரிந்தபின் (ஏதே)

13. மனோவாக்குக் காயங்கள் மூன்றுமுன் னிடமாக
வைத்தநாள் முதலாக வருகின்ற செயலெல்லாம்
உனக்கே பொறுப்பல்லாது எனக்கினிச சுமையேது
உண்மை யிதுசத்திய முடிவுதின் பயன்சொல்வாய் (ஏதே)

14. வாலை புவனை திரிபுரை யென்றுமே
மனோன்மணி வாயிலில் வைந்த புதையல்கள்.
மேலே நாதவிந்து சத்தி சிவமாகி
வெளியொளி யானப ரம்பரா பரையாகி (ஏதே)

15. கள்ள வேடந்தரித்துக் கபட மனதில்வைத்துக்
கல்விப் பயிற்சிசெய்துங் கர்த்தனை யறியாமல்
உள்ளந் தெளிவுதற குண்மைஞா னந்தோன்றாமல்
உலகிற் பாசாண்டிக ளெதிரில் திரிவதாலே (ஏதே)

16. வித்து வரன்வரியான் வரிட்ட மென்றநான்கும்
மேலான ஞானிகள் முடிவி லடைந்ததாலே
அத்துவித முடிவை யார்தா னடையக்கூடும்
ஆண்டவனே யுன்னை வேண்டின வர்க்கலலது (வேதே) 37.

பல்லவி

ஆதிபராபரமே அடிமையை—ஆட்கொண்ட ரூட்சமடி

அநுபல்லவி

சோதி சொரூபத்தை யானறி யாமலே
சொல்லாமல் சொல்லுஞ் சுகத்தி லிருத்தியே (ஆதி)

சரணம்—கண்ணிகள்

1. சித்த பரிபாகஞ் செய்யத் திருவருள்
உத்தம மாய்வந் துறவு கலநதது (ஆதி)

2. தேகமே யானென்றும் யோகஞ்செய் தேனது
மோசமென் றேபரி பாகஞ் செயதானடி (ஆதி)

3. தத்துவம நானென்றே பத்திசெய தேனது
குற்றமென் றேபரி சுத்தஞ்செய் தானடி (ஆதி)

4. யானென தென்னுஞ் செருக்கறுக்கத் தெய்வம்
மானிட மாகவே வந்த ததிசயம (ஆதி)

5. எங்கும் நிறைந்தப ரம்பொரு ளேக்காணச
சங்கையு முண்டோபரித தாரணி தன்னிலே (ஆதி)

6. நித்திய மொன்றே யிருக்க வநித்தியம்
சத்திய மென்று நினைத்தது தப்பிதம் (ஆதி)

7. இரேசக பூரகம் கும்பத்தி லேநிற்க
இராசயோ கமெனும் வாசிக்குப் பேரென்றும் (ஆதி)

8. பத்தி புரியப் பலதொழில் காட்டியும்
முத்தியைக் காணமு டிவுஞ்சொன் னனடி (ஆதி)

9. வேத விதிப்படி பூசைகள் செயயென்றும
ஆதி பரம்பரை யாகத் தொடர்ந்திறை (ஆதி)

10. சாதனை செய்யச சகுண வுபாசனை
வேதனை யென்றும் விளக்கி வைததானடி (ஆதி)

11. யாகாதி கிர்த்தியங் காமிய பலமென்றும்
யோகி வெறுத்தா லுருக்கம் நிறைந்திடும் (ஆதி)

12. தன்னுயிர் போலவே மன்னுயிர் காப்பதும்
சத்திய மென்று நடக்கும் படிசெய்த (ஆதி)

13. சரமச ரங்கள் யாவுமவ னென்று
சத்திய மாகச் சுருதிசொன் னமொழி (ஆதி)

14. பச்சிலை யென்றும் பறிக்கத் துணியாதே
சச்சிதா னந்தமென் றுருந்தெ ரிந்திலர் (ஆதி)

15. முப்பாழ் கடந்த முழுமுட்சுக ளுக்கல்லோ
அப்பாலொன் றேசச்சி தானந்த மாகுமே (ஆதி)

16. சாதி பேதாதி சமயம் வகுத்ததும்
நீதியா சாரம் நெறிபத்தி தோன்றிட (ஆதி)

17. ஆதார மாறுங் கடந்துநின் றுலருள்
வேதாந்த வீட்டின் விளக்கொளி யேயென்றும் (ஆதி)

18. அட்சர மாதிய மைந்திடுஞ் சூத்திரம்
இச்சை வெறுத்தோ ரிடங்காண லாமென்றும் (ஆதி)

19. பேரின்ப வீட்டிற் பெரியம ருந்தொன்றை
யாருந்தெ ரியாத லைந்துகெட் டாரென்றும் (ஆதி)

20. மெஞ்ஞானி கண்டநூல் மெய்யென்று காட்டியும்
அஞ்ஞானி காணல ரிதாகு மேயென்றும் (ஆதி)

21. சித்த புருடர்கள் தேகந் தனிலுள்ள
தத்துவ மேமருந் தாகமொ ழிந்தாரென் (ஆதி)

22. முப்பூ வொன்றாய் முடிந்த யிடமல்லோ
அப்பு வென்றும றிஞரு ரைத்தாரென் (ஆதி)

23. சிவச்செய லென்றுஞ்சீ வச்செய லென்றும்
தவத்தி லுள்ளோர் தரம்பிரித் தாரென்றே (ஆதி)

24. அந்தக் கரண மொடுங்காத சீலர்கள்
சிந்தை கலங்கித் தெளிவடை யாரென்றும் (ஆதி)

25. ஆதியந் தம்வரை தேடியுங் காணாத
பாதத்தை யான்கண்டு பற்ற வருள்செய்த (ஆதி)

26. சரியை கிரிகைகள் யோகமுந் தாண்டிய
சந்நிதிக் கல்லேயாயிச் சாட்சி கொடுத்தது (ஆதி)

27. என்னைத் தடுத்தெம் மிறைவன் பணிகொள்ள
தன்னைக் கொடுத்த அதிசய மென்சொல்வேன் (ஆதி) 38.

நிஷ்டானுபூதியிலுதித்த குறி

1. குறிசொல்லக் கேளம்மா குறிச்சொல்லக் கேள்
கோதையர்க் கரசேநான் குறிசொல்லக்கேள்

2. ஆதியில் கந்தமலை பெண்ணினரசே நான்
ஆனந்தக் குறச்சாதிப் பெண்ணினரசே

3. ஆலயங்கள் சுத்திவந்தேன் பெண்ணினரசே யென்னை
அழைப்பார்க ளாருமில்லை பெண்ணினரசே

4. கோவில்கள் சுத்திவந்தேன் பெண்ணினரசே யென்னைக்
குறிகேட்பா ராருமில்லை பெண்ணினரசே

5. தெருவீதி சுத்திவந்தேன் பெண்ணினரசே யென்னைத்
தேடுவா ராருமில்லை பெண்ணினரசே

6. கோல மயிலழகி பெண்ணினரசே யென்னைக்
கூவி யழைத்ததென்ன பெண்ணினரசே

7. அன்ன நடையழகி பெண்ணினரசே யென்னை
அழைத்த விதங்களென்ன பெண்ணினரசே

8. குறிகள் தெரியுமோடி குறத்திப் பெண்ணேநீ
குறிப்பாகச் சொல்வாயோடி குறத்திப்பெண்ணே

9. ஆனைமுகக் கடவுள் கிருபையி னால்நான்
அஞ்சாது குறிசொல்வேன் பெண்ணினரசே

10. வேழமுகக் கடவுள் கிருபையி னால்நான்
வேண்டுங்குறி சொல்லிடுவேன் பெண்ணினரசே

11. கேட்குங்குறி சொல்லிவிட்டால் குறத்திப் பெண்ணேநீ
கேட்டதை யான்கொடுப்பேன் குறத்திப்பெண்ணே

12. நாட்டுக் குறத்தியல்ல பெண்ணினரசே குறி
நன்றாகச் சொல்லுவேன்கேளாய் பெண்ணினரசே

13. ஐந்து கரத்தோனே யெந்தன் குருவே
ஆனைமுகத் தோனே யெந்தன்குருவே

14. தொந்தி வயிற்றோனே யெந்தன் குருவே
துதிக்கை யுடையவனே யெந்தன்குருவே

15. வள்ளிகண வாகுமரா யெந்தன் குருவே
மயில்வாக னக்கடவு ளெந்தன்குருவே

16. சிவனே யுமையவளே யெந்தன் குருவே
தேவிலட்சுமி கோபாலா யெந்தன்குருவே

17. சரசுவதி பிர்மாவே யெந்தன் குருவே
சகலகுல தேவதைக ளெந்தன்குருவே

18. பெண்ணரசி கேட்குங்குறி யெந்தன் குருவேயணுப்
பிசகாமல் சொல்லவேணு மெந்தன்குருவே

19. ஏழை மனதிருந் தெந்தன் குருவேகுறி
இன்பமாகச சொல்லவேணு மெந்தன்குருவே

20. மனதில் நினைத்த குறி முழுமையுமே
வகையாகச சொல்லிவாரேன் குறத்திப்பெண்ணு

21. கேளம்மா பெண்ணரசே நினைத்த குறி
கீர்த்தியுள்ள கன்னியவள் பருவம்வந்தும்

22. மங்கள மாகாத கவலை யொன்று
மணவாள ரின்னுமெனக் குறிப்பறிய

23. தேனேநீ யெந்தனிடங் கேட்ட துண்டு
தெளிவாகச்சொல்லுகிறேன் நன்றாயக்கேளாய்

24. அநேகர்கள் கேட்டதுண்டு பெண்ணி னரசே
அவர்களுக்குக் கிட்டாது பெண்ணினரசே

25. கனவுகள் கண்டதுண்டு பெண்ணினர சேயதில்
கண்காட்சி யானதுண்டு பெண்ணினரசே

26. மணமு முடிக்கவென்று பெண்ணினரசே யிங்கே
மணவாளர் வந்ததுண்டு பெண்ணினரசே

27. ஆர்க்குந் தெரியாது பெண்ணினரசே யவர்
ஆனந்த முள்ளாரம்மா பெண்ணினரசே

28. இராசக் கிரீடமது பெண்ணி னரசே
இரத்தின மாலையது பெண்ணினரசே
29. சாலக்கண் ணாடியது பெண்ணி னரசே
சகலருக்குந் தோன்றாது பெண்ணினரசே
30. அற்புதக்கண் ணாடியது பெண்ணி னரசே
அன்பருக்குத் தோன்றுமம்மா பெண்ணினரசே
31. கன்னிகைக்கு மணவாள ரதுவேயல்லால் வேறு
கலக்கமு முண்டோசொல்வாய் பெண்ணினரசே
32. காரண முடிக்க வென்று கன்னியவளும்
கலியுகத்தில் வந்ததுண்டு பெண்ணினரசே
33. மூட ரறியார்கள் பெண்ணி னரசே
மூர்க்கமுள்ள கன்னியவள் பெண்ணினரசே
34. தன்னை யறியவில்லை பெண்ணினரசே யினித்
தானு யறிந்துகொள்வாய் பெண்ணினரசே
35 கால மிருக்குதென்று தெரிந்து கொண்டவர்
கடுகப்போய் நின்றதுண்டு பெண்ணினரசே
36. தேடித் திகைத்ததுண்டு பெண்ணினர சேயவர்
சென்றவிடந் தூதுவிட்டாய் பெண்ணினரசே
37. கலக்கமும் வேண்டாமம்மா பெண்ணினரசே யவர்
கலங்காத கண்டனம்மா பெண்ணினரசே
38. கலியுகத்தில் துட்டர்களைப் பெண்ணினரசே யவர்
கண்டிக்க வந்தவர்தாம் பெண்ணினரசே
39. அன்பர்களைக் காக்கவந்தார் பெண்ணினரசே யிது
ஆர்க்குந் தெரியுமம்மா பெண்ணினரசே
40. மண்ணுளு மிராசனவர் பெண்ணினரசே யிந்த
மார்க்கங்குறி தோன்றுதம்மா பெண்ணினரசே
41. சமீபத்தில் மங்களங்கள் நடக்குமம்மா யதில்
சந்தேக மேதுமுண்டோ பெண்ணினரசே
42. குறிசொல்லி முடிந்தபின் வெகுமதிகள்
குறத்திப்பெண் பெற்றுக்கொண்டு நடந்தனளே 39.

அருள் தங்கம் பாட்டு

1. பூத்திருக்குஞ் சோலையிலே ஏ தங்கம்—பூங்காவ னத்தருகே
காத்திருந்த பாவனையே தங்கம் கண்டுபிடிக்கவில்லை

2. எதுக்கு வந்தாரடி ஏ தங்கம்—இத்தலங்கள் பார்ப்பதற்கோ
மாதுசிரோன்மணியே தங்கம் மாலையிட்டுப் பார்ப்பதற்கோ

3. வேடிக்கை பார்த்தாயோடி ஏ தங்கம்—விளையாடும் வேளையிலே
வேடிக்கை யாகுமோடி தங்கம் விளையமுள்ள பிரம்மவித்தை

4. கண்டு பிடிக்கவந்த ஏ தங்கம்—கண்ணனது வேலையடி
கண்டு பிடித்தாரோடி தங்கம் கன்னியிருப் பிடத்தை

5. முன்னால் தெரியுமோடி ஏ தங்கம்—மூட வுலகத்துக்குப்
பின்னால் தெரியுமடி தங்கம் பிரியமுள்ள வாசனைகள்

6. திருட ரறிவாரோடி ஏ தங்கம்—தீர்க்கமுள்ள பிரமவித்தை
அறிவுள்ள மானிடர்கள் தங்கம் அறிந்துகொள்ளச் சத்தியுண்டு

7. பார்க்க மறைவுமுண்டு ஏ தங்கம்—பார்திருக்குஞ் சோதியுண்டு
தீர்க்கமுள்ள மாதவர்க்கு தங்கம் தெரிசனங்கள் தோன்றுமடி

8. தேடிப்பிடிக்க வில்லை ஏ தங்கம்—தேசமெங்கும் பார்த்ததில்லை
நாடி யிருக்கையிலே தங்கம் நாதனாக வந்தாரோடி

9. அற்புதக் காட்சியல்லோ ஏ தங்கம்—அவருடைய தெரிசனங்கள்
சொற்பெரிய மாதவர்க்கு தங்கம் சுயரூபந் தோன்றுமடி

10. ஆசையுள்ள கண்ணாட்டி ஏ தங்கம்—அறிவுள்ள சீமாட்டி
பாசக்கடல் கடந்தால் தங்கம் பரமபதம் சேரலாமே

11. எந்தன்குரு நாதா ஏ சாமி—யெனக்குரைத்த காரியங்கள்
அந்தமுடி வல்லவோ சாமி ஆரறியப் போகிறார்கள்

12. புத்திகள் வந்ததையா ஏ சாமி—போதனைகள் செய்ததின்பின்
இத்தனை நாளாக சாமி எடுத்துரைப்பா ராருமில்லை. [டேன்

13. ஆசை யொழித்து விட்டேன் ஏ சாமி—அபிமானம் விட்டுவிட்
பாச மொழித்து விட்டேன் சாமி பரமபதம் சேரவென்றே

14. சாலோக சாமீபம் ஏ சாமி—சாரூப சாயுச்சியம்
நாலு பதவியுண்டு சாமி நற்கதிகள் சேருதற்கே

15. காலங் கலிகாலம் ஏ சாமி—கலிக்குவந்த நாதனல்லோ
பூலோக முய்யுமென்று சாமி பூம்பறைகள் சாத்திவிட்டேன்

16. காணாத காட்சியெல்லாம் ஏ சாமி—கண்டுகொண்டே னிச்சமயம்
பூணாது பூண்டல்லவோ சாமி பொன்னடியைச் சார்ந்துவிட்
[டேன் 40.

கணபதிக் கண்ணி

1. எந்தன்வினை தீர்த்தவனே என்னையாட் கொண்டவனே
சிந்தைதனி லேயுரைத்து சிற்பரக் கணபதியே

2. தந்திமுக மிலங்கச் சதுர்ப்புயங் கள்துலங்கத்
தொந்திவயி றுகுலுங்கத் துதிக்கை யுலாவிவர

3. முக்கண் ணுடையவனே மும்மதத்துக் குஞ்சரனே
சிக்கறுத்த தூயவனே சித்திபுத்தி நாயகனே

4. மூஷிக வாகனனே முத்திக் கனுகூலனே
நேசமுடன் அன்பருள்ளம் நிறைந்தபரி பூரணனே

5. பந்தம் அறுத்தவனே பாச மொழித்தவனே
கந்தனுக்கு முன்னவனே கலிதன்னைத் தீர்த்தவனே

6. வல்லபை மணவாளனே வரமருளுந் தேசிகனே
பல்லாயிரங் கோடியண்டம் படைத்தளிக்கு மைங்கரனே

7. மூவர்களை யுண்டுபண்ணி முத்தொழிலு மீந்தவனே
தேவகுரு வாகவந்து தேவர்களைக் காத்தவனே

8. திரிபுர மெரிப்பதற்குச் சிவனுக்குப தேசித்தவா
அரிபிர மாதிகட்கு மதிதமாய் நின்றவனே

9. விஷ்ணுபுத்ரி பன்னிருவர் வேட்ட திரு மணவாளனே
துஷ்டசன நிக்ரகனே தூயசிஷ்ட பரிபாலனே

10. நீதியில்லாக் கலியுகத்தில் நின்ன டிமை யானதின்பின்
சோதனைகள் செய்யாதே சூட்சமுள்ள என்குருவே

11. வேதங்களுக் கெட்டாத விசித்திரத்தைக் காட்டிவிட்டுச்
சோதனைக்கு மெட்டாது சூட்சமதாய் நின்றுகொண்டாய்

12. எல்லையற்ற காட்சிதந்து எமனுக்கிட மில்லாமல்
பல்லுயிருங் காட்சிகொள்ளப் பலனளித்த சின்மயமே

13. மாகர்த்தன் மாயோகி மாதியாகி யென்றுசொல்ல
ஏகப்பிர்ம வீடளித்த என்னுளொளிர் பரஞ்சுடரே. 41.

பராபரக்கண்ணி.

1. அண்ட பகிரண்ட மனைத்துமே தானாகிப்
பண்டு பழுத்த பழமே பராபரமே

2. பழுத்த பழமென்று பத்த ருனைத்தேடிச
சுழுத்தி நிலையதனிற் சுகித்தார் பராபரமே

3. மேருகிரி யென்னும் விளங்கியபொற பீடமதிற்
சாருநா ளெந்நாளோ சாற்றாய பராபரமே

4. ஆறுதா ரங்கடந்தே யத்துவிதக் கோட்டையுள்ளே
சாரா திருக்கத தகுமோ பராபரமே

5. அன்பத்தோ ரட்சரமு மரியபரி பாஷைகளும்
இன்பத் துடன்காண்ப தெப்போ பராபரமே

6. ஓங்காரத் துட்பொருளை யுறறுணர்ந்து காண்பதற்கு
ஆங்கால மெப்போ வறியேன் பராபரமே

7. பேதமைக ளாலுனது பெருமையறி யாதிருந்தேன்
மாதவத்தோர் கண்டறியும் வடிவே பராபரமே

8. பாத தெரிசனங்கள் பார்க்கவநதால் கிட்டாது
சாதனங்கள் செய்தறிவீர் தவமே பராபரமே

9. இருவினைக ளற்றுநிற்கு மேகாந்த வீடதனைக்
குருவடிவாய வந்தெனக்குக் கொடுப்பாய் பராபரமே

10. ஆடுகின்ற கூத்தை யறிவா ரொருவரில்லை
தேடிநிலை நின்றவற்கே திகட்டும் பராபரமே

11. கற்றுமறி யேனுன் கற்றவரைக் கண்டறியேன்
சிற்றம பலத்திலுறை சிவமே பராபரமே

12. சட்சமயந் தோறுஞ் சமயாதீ தப்பொருளாய்
உட்சமய மான வொளியே பராபரமே

13. தன்குற்றம் தானுணரா தறிவுகெட்ட மாடுகள்தான்
பின்குற்றம் பேசுவதும் பிழைகாண் பராபரமே

14. பின்குற்றம் பேசும் பிழைகள் எழுநரகில்
வன்குற்ற மென்று வருத்தும் பராபரமே

15. சாத்திரங்கள் கற்றாலும் தவவேடம் பூண்டாலும்
சூத்திரங்கள் பாராதார் சுணங்கன் பராபரமே

16. ஈசனருளை யின்னதென்று தானறியாப்
பாசாண்டிகளோடு பற்றேன் பராபரமே

17. தனிப்பொருளைக் காணாமல தர்க்கங்கள் செயதுகொடும்
வினைப்பயனைக் கைகொண்ட வெறியர் பராபரமே

18. படித்தது போதுமென்று பலதர்க்கஞ் செய்வோர்கள்
துடிக்க வருநரகிற் சேர்வார் பராபரமே

19. வேதவே தாந்தமுணர் மெய்யடியார்த தொண்டுசெய்தும்
பாதார விந்தம் படிந்தார் பராபரமே

20. மெய்யடியார்த் தொண்டுசெய்ய விரதங்கள்சற்றுந் தோணாமல்
பொய்யடியார்த் தொண்டுசெய்யப் புகுந்தேன் பராபரமே

21. சிந்தை யறியாத சிவபதத்தைக் காணவொரு
தந்திரமும் யானறியேன் சாற்றாய் பராபரமே

22. பட்டதெல்லாம் போதுமிந்தப் பார்மேல பிறந்திறந்து
கெட்டதெல்லாம் நீயறியாய் கெதியேன் பராபரமே

23. ஆரிடத்தில் சொல்லி யழுது முறையிடுவேன்
வேறிடத்தில் சொல்லும் விதமோ பராபரமே

24. எல்லா வுயிர்களையு மீசனென்றே யுன்னடிமை
பல்காலும் போற்றிப் பணிந்தேன் பராபரமே

25. தன்னை யறிந்தாற் றலைவனருள் கிட்டுமெனப்
பண்ணுமறை சாத்திரங்கள் பகரும் பராபரமே

26. எட்டிப் பிடிக்க விசையுமோ நின்னருள்தான்
கிட்டின வாக்கல்லோ கிடைக்கும் பராபரமே

27. விட்டகுறை தொட்டகுறை விதிகள்வந்து நேர்ந்தாலும்
சிட்டர்பணி செய்யத திறமாம் பராபரமே

28. எத்தனையோ ஜென்ம மெடுத்திறைவ னடிபணிந்தால்
குற்றமற நல்லறிவு குறிக்கும் பராபரமே

29. சுத்த மௌனி சுயஞ்சோதி நாட்டமுள்ள
சித்த ஹிருதயத்தின் சிறப்பே பராபரமே

30. கள்ளக் கருத்துடைய கள்வனென்று தள்ளாதென்
உள்ளம் புகுந்துணர்வை யூட்டும் பராபரமே

31. வஞ்சகத்தை யூடறுத்து மாயா மலக்குரங்கைத்
தஞ்சமென்றே யாட்கொள்வாய் தயையே பராபரமே

32. துன்ப முறுங்காலந் துணையாக வந்தெனக்குன்
அன்பைக் கொடுத்தருள்வா யையா பராபரமே

33. கிள்ளைப் பழுத்துக் கிளைகளொடு மோடுரசம்
அள்ளிப் புசிக்க அருள்வாய் பராபரமே

34. கார்மேகம் போலக் கலங்கி யழுதகண்ணீர்
ஆறாய்ப் பெருக்கெடுப்ப தழகோ பராபரமே

35. பாதந்தைத் தேடிப் பலகால் திரிந்தவெனைச்
சோதித்தல் நன்றோநீ சொல்லும் பராபரமே

36. தொண்டர்களை யாட்கொண்ட சுருதிகளை யாராய்ந்தும்
பண்டுசொன்ன வாக்குப் பழுதோ பராபரமே

37. கல்நெஞ்ச ஞான கபடனென்று தோன்றியெனை
பல்காலுஞ் சோதிக்கப் படுமோ பராபரமே

38. சின்னஞ் சிறுவயதில் தேடிவந்து மாலையிட்டீர்
இன்னும்வரக் காணேன் தயல்பேன் பராபரமே

39. மாலையிட்ட நாள்முதலாய் மறுத்துமுகம் பாராமல்
வேலையென்ன வேலை விளம்பும் பராபரமே

40. பத்துவய தானகன்னிப் பருவம்வந்து நேர்ந்ததென்றால்
சுற்றத்தா ரேசாரோ சொல்லும் பராபரமே

41. கருத்தரித்த காலமுதற் கற்புதவ றாதிருந்தும்
பிரித்துவைத்த கோலமென்ன பிழையோ பராபரமே

42. பாரிலுள்ளோ ரேசிப் பழித்த பழிப்புகளை
நேரிலே சொல்ல நினைத்தேன் பராபரமே

43. பெண்பாவம் வீண்போகாப் பிழைகள்வந்து சேருமுன்னே
கண்பார்வை யிட்டுயிரைக் காரும் பராபரமே

44. சென்றசென்ற காலமெல்லாஞ் சென்ம மெடுத்தெடுத்தும்
பந்த மறுக்காத பாவம் பராபரமே

45. ஏழைசெய்த குற்றமெல்லா மின்பமுட னீபொறுத்து
மாளாப் பிறவிதன்னை மாய்ப்பாய் பராபரமே

46. அன்பர்செய்த குற்றமெல்லா மானந்த லீலையென்று
இன்பங் கொடுத்ததெனக் கிலையோ பராபரமே

47. சரியை கிரியையென்றுந் தவமான பூசைசெய்ய
அறியு மறிவை யருளாய் பராபரமே

48. யோகவழி செல்ல வுறுதியற்ற பாலனுக்கு
ஏகவழி காட்டுவ தெப்போ பராபரமே

49. அஞ்ஞானம் நீங்கி யபரோட்சங் கிட்டுவது
மெஞ்ஞான மென்று வியந்தார் பராபரமே

50. பற்றிப் பிடித்துமுந்தன் பாதநிலை காணமல்
உற்றுற்றுப் பார்த்தே னுரையாய் பராபரமே

51. நிட்டையொடு சாதனங்கள் நியமாதி சங்கையறச்
சுட்டிநீ காட்டில் துறப்பேன் பராபரமே

52. ஆசார முள்ளோ ரறிவுநிலை பூத்தமலர்
பூசா விதிகள் புரிந்தார் பராபரமே

53. சாத்திர வழிநடந்து சத்தியநிலை பூத்தமலர்
ஆத்தி மலரென் றணிந்தார் பராபரமே

54. பந்த மறுத்தும் பலகாலும் பூத்தமலர்
கொன்றை மலரென்று குறித்தார் பராபரமே

55. அன்பைப் பெருக்கி யனுதினமும் பூத்தமலர்
தும்பை மலரென்று துதித்தார் பராபரமே

56. செருக்கறுத்துத் தீனகிச் சென்றவிடம் பூத்தமலர்
எருக்க மலரென் றிசைந்தார் பராபரமே

57. சிந்தை தெளிந்து சிவமாகிப் பூத்தமலர்
நந்தியா வர்த்தமென்று நவின்றார் பராபரமே

58. அவ்வுமுவ்வு மோமென்ற அட்சரத்தை மூன்றிதழாய்ச்
சிவ்வுமவ்வு மென்றுகிள்ளிச செபித்தார் பராபரமே

59. கற்றும்மறி வில்லாதார் கண்ணற்ற பாவியென்று
சுற்றிவரும் பாதையொன்று துறந்தார் பராபரமே

60. கல்லாத மாந்தர் கருத்துக் கிசைந்தபடி
சொல்லா திருந்தால் துயர்காண் பராபரமே

61. பல்லாயிரங் கோடியண்டம் படைத்துவிளை யாடுமுயர்
வெல்லாம்நீ யென்று விதமோ பராபரமே

62. எத்தனையோ சோடி யெனைப்போலப் பாவியுண்டு
அத்தனையும் நீயென்றல் அழகோ பராபரமே

63. பாசங் கடந்துந்தன் பரமாகி நின்றவர்க்கே
ஈசனென்ற நாம மிணங்கும் பராபரமே

64. வேதாந்த வீதிசென்று வெட்டவெளி காண்பதற்கு
நாதாந்த மோனநிலை நல்கும் பராபரமே

65. அட்டாங்க யோக மறிந்த தபோதனர்கள்
நிட்டானு பூதியிலே நிலைத்தார் பராபரமே

66. அடயோக மென்று வறிந்தசிவ யோகியர்கள்
திடயோக மாகச செயித்தார் பராபரமே

67. இராசாங்க யோகநிலை நன்னெறியாற் கண்டவர்கள்
பேசா மௌனநிலை பெற்றார் பராபரமே

68. அம்பிகா யோகமென்று மறைந்தமறை சாத்திரங்கள்
வம்பருக் கெட்டும் வழியோ பராமரமே

69 நேச நிருவிகற்ப நிட்டையது பூண்டவர்கள்,
பாசங் கடந்த பரங்காண் பராபரமே

70. சந்திரகலை சூரியகலை தழைத்தோங்கி நின்றவிடம்
மந்திரகலை யென்று மதித்தேன் பராபரமே

71. பன்முகத் திரைகள் பலவாய்த் தெளியாமல்
சின்முக திரையால் தெளிந்தேன் பராபரமே

72. சிதறா சனங்களெல்லாம் செகமயக்க மாயத்தோன்றிப்
பத்மா சனமிட்டுப் பார்த்தேதேன் பராபரமே

73. அறுபத்து நாலுயோக மல்லவென்று கண்டனஞ்செய்
பருவத்தை யான்தேடும் பதமோ பராபரமே
74. அறியாப் பருவமதில் அன்பைவளர்த் தேதடுத்துச்
சிறியேனை யாட்கொண்ட திலையோ பராபரமே
75. பரியேறிச் சவ்வாரி பற்றித் தொடர்ந்துநின்றோர்
துரியோத ஞதிகளைத் துறந்தார் பராபரமே
76. எல்லை கடந்தா விராவணசம் மாரமென்ற
தொல்லை கடந்த துரியம் பராபரமே
77. ஆருதா ரங்கடந்தா லத்துவித பிர்மமென்ற
சூரசம் மாரநிலை தோற்றும் பராபரமே
78 சூட்சாதி சூட்சமெல்லாஞ் சொல்லாமற் சொல்லுமிடம்
நீட்சுநிலை காணாத நிலைகாண் பராபரமே
79. சஞ்சித கட்டையெல்லாந் தணலா யெரித்துனது
குஞ்சித பாதத்தைக் கொடுப்பாய் பராபரமே
80. ஆகாமி யங்க ளணுவளவுந் தோன்ருமல்
யோகா மிசங்கள்தந்த உறவே பராபரமே
81. பிரார்த்துவ கன்மம் புசித்துமுடி வானவுடன்
சிரோரட்சண மேயுனது சேர்வை பராபரமே 42.

குயிற்கண்ணி.

1. ஆத்தா ளுடன்கூடி அன்புடனே வாதாடிக்
கூத்தாடி நின்ருனடி ஏ குயிலே கோபுரத்தின் வாசலிலே
2, அடியார்க் கெளியவண்டி ஆண்டிபர தேசியடி
துடியாகப் பேசானடி ஏ குயிலே தொல்புவிக்கி ராசனடி
3. மக்கள் பகுத்துடையோன் மாதவத்தோர்க் கன்பனடி
தக்க பவுசுடையோன் ஏ குயிலே தானாகி நின்ருனடி
4. அன்று புரமெரித்தே அன்பர்களைக் காத்தபிரான்
என்று மிருப்பானடி ஏ குயிலே ஏகாந்த நாதனடி
5. பத்தர்களைச் சோதிக்கப் பாவனைகள் செய்திடுவான்
முத்தி கொடுப்பானடி ஏ குயிலே மூர்த்திபரஞ் சோதியடி

6, சித்துவிளை யாட்டைத தெரிவா ரொருவரில்லை
பத்தாறி வாரடி ஏ குயிலே பலவேசக் காரனடி

7. ஆதி யனாதி யென்றும் ஆத்மா வனாத்மா வென்றுஞ்
சோதி சொரூபனடி ஏ குயிலே துரியா தீதனடி

8. நாதாந்தம் விந்துவென்றும் நாதாக்கள் சூட்சமடி
நாதாந்தம் விந்துவேது ஏ குயிலே நாத னிருப்பிடமே

9. காணக் கிடையாது கண்டாலும் வாராது [வாய்க்குமடி
தோணப்படுமோ சொல்வாய் ஏ குயிலே தொண்டருக்கு

10. எல்லா மறிந்தவர்க ளேதுமறி யாதவர்கள்
சொல்லா லறிவாரோடி ஏ குயிலே சோதி சொரூபநிலை

11. தொண்டர்பணி செயபவர்கள் சூட்சாதி சூட்சமெல்லாங்
கண்டு தெளிவாரோடி ஏ குயிலே காணாத காட்சியெல்லாம்

12. மாதா பிதாவவனே மற்றதெல்லாந் தானவனே
சாதனமில் லாதவர்க்கு ஏ குயிலே சன்னதி தோன்றாதடி

13. உலகம் படைத்தவனு முயிர்கட்டோறு நின்றவனும்
பலபேதஞ் செய்துவைததான் ஏ குயிலே பரமகருணாநிதியே

14. வேதங் களுண்டுபண்ணி விதியை விதித்தவனும
பேதங்கள் செயதுவைததான் ஏ குயிலே பேரின்ப வீடடைய

15. சாத்திரங்க ளுண்டுபண்ணிச சமயங்கள் வேறுபண்ணிச
சூததிரங்கள் செயதானடி ஏ குயிலே சொல்லமுடி யாதபடி

16. ஒன்றுபல வானவனு முயிர்களைரட் சிப்பவனும்
மன்றுள் நடம்புரிநதான் ஏ குயிலே மார்க்கத்தை யாரறிவார்

17. பித்தம் பிடித்தவண்டி பேராசைப் பட்டவண்டி
பித்தம் பிடித்தகதை ஏ குயிலே பேரின்பங் காட்டவல்லோ

18. பேராசை யேதுக்கடி பேரின்ப வள்ளலுக்குப்
பாராதி யண்டமெல்லாம் ஏ குயிலே பத்தரைக் காக்கவல்லோ

19. சொல்லத தொலையாது சொன்னதினால் கிட்டாது
எல்லையற்ற சோதியது ஏ குயிலே எங்கு நிறைந்தபொருள்

20. ஆடுகின்ற நாகமது ஆடி யொடுங்குமிடம்
தேடினால சிக்காதடி ஏ குயிலே தெளிவுவந்தாற் போதுமடி

21. ஆசை யொழித்துவிடு அபிமானம் விட்டுவிடு
பாச மொழித்துவிட்டால் ஏகுபிலே பரமபதம் சேரலாமே 43.

அத்துவித முறைக் காவடிச்சிந்து

1. என்னைத தழுவிவந் தென்னையாண்டாய்—சம்போ
என்னையாண்டாய—முன்னு—ளென்னையாண்டாய்
ஏழை பரதவித்து மிரங்காதென்

2. சின்னஞ் சிறுகுழவி யறியாதே—யாதுங்
குறியாதே—இது—தெரியாதே
திகைக்கும் பருவந்தேடி மாலையிட்டீர்

3. அன்னை பிதாவுமெனை யகன்றாரே—வாழ்வு
புகன்றாரே—பல—ரிகழ்ந்தாரே
யாரிடஞ் சொல்லியான் முறையிடுவேன்

4. பின்னை யொருவர்துணை வேறுமில்லையே—யாதுங்
குறைவில்லையே—துயர்—தீரவில்லையே
பிரியமில் லாதிருக்கும் பிழையறியேன்

5. திருவே யருவுருவே செழுங்கனியே—மறை
பழங்கனியே—அன்ப—ருளங்கனியே
தெவிட்டாத தெள்ளமுதே தேன்பாகே

6. மருவி மறைகளுன்னைக் காட்டியிட—தொண்டர்
கூட்டியிருக்க—நெறி—பூட்டியிருக்க
மணியோசை நாதம்விந்து கீதம்பாட

7. குருவாய்வந் தென்னையாண்ட கோலமலைவேறோ—மந்ர
மூலங்கூறோ—இந்ர—ஜாலம்நீரோ
குறைகளெல் லாமகற்றிக் கழல்தருவீர்

8. இருவினைப் பற்றறுத தேகமாக்கி—மாயா
மோகம்நீக்கி—அரு—ளாகநோக்கி
இன்பவீ டடைவது மெந்தநாளோ

9 கருணைப் பெருங்கடலே கண்மணியே—சிந்தை
யுண்மணியே—தொடர்—பண்மணியே
கைவிடுதல் முறையோசொல கபடறியேன

10. சிறுமைப் படுதல்நன்றோ தெளிவறியேன்—தேடும்
வழியறியேன்—காணு—முளவறியேன்
செப்பக் கணக்குமுண்டோ தெரிவீரே

11. பெருமையென் னுலைடுத்துப் பேசப்படுமோ—முன்
னுசைவிடுமோ—சந்—தோஷங்கூடுமோ
பிரிந்தா லுயிர்விடுவேன் கணந்தரியேன்

12. அருமைக்கண் ணுளாவெந்தன் ஆண்டவனே—தில்லைத்
தாண்டவனே—அருள்—பூண்டவனே
அன்பின்மய மாய்க்கலந் தடிமைகொள்வீர். 44.

சிவயோக நடனக் காவடிச் சிந்து.

திரிபுர தகன மறிவ துயர்வது கண்ணே—அதன்
பெருமை புகல்வ தரித ரிதடி—பெண்ணே

1. சென்னிமேற்க ரங்குவித்து நன்னிலையி லேயிருத்திச்
சின்மயவி லாசனென்று போற்றிடு—சஞ்சித
கன்மவினை தீரவென்று மேற்றிடு
திகழு முக்கனி யவல்ப ருப்பொடு கடலை யெள்பொரி பருகுமற்புதம்
சித்திவிநா யகனிருதாள் சேறிடு—என்றும்
பத்தியே தொழுதுநின்று தேறிடு

2. அறுபத்து நாலுயோகங் குருமூர்த்தி சாதனங்கள்
ஆகமப்ப டியுணர்ந்து காரடி—கற்ப
திரேகசுத்தி வாசிசுத்தி யாமடி
அண்ட பிண்ட சராசரங்களு மொன்று கூடிவி ளங்கி நின்றிடும்
அற்புதவி நோதமிந்ர சாலமே—வேத
சொற்படிந டந்தாலனு கூலமே

3. நிட்டைபுரி மாதவர்கள் தத்வநிலை யாலுணர்ந்து
நிட்களசொ ரூபமொடு கூடினூர்—சந்ர
புட்கரணி தீர்த்தமதி லாடினூர்
நிருவி கற்ப சமாதி பெற்றிடு மடியர் பொற்பத மேபி டித்திடு
நிட்டைநிலை பூரணம தாகுமே—முன்
விட்டகுறை தானேவந்து சேருமே

4. செம்பொன்மணி மாடநடு தம்பமதி லேவிளங்குஞ்
சிற்சபை நடனமிது தானடி—மூல
தற்பரனென் றுடுவது பாரடி
தித்தி மத்தள மொத்தி சைப்பட தித்தி த்திய ததிங்கிண தோமெ
சித்துவிளை யாடலிது வாமடி—பார்க்க [னுஞ்
மெத்தவும்ப்ர யாசையென்று கூறடி

5. காரணகு ருவைக்கண்டு பூரணவ டிவங்கொண்டு
ககனவட்டமீ தேறிநின் றிடுவாய்—குளிகையுண்டு
மௌனசித்திக ளேபொருந் திடுவாய்
கனக சபைதனி லமரர் முனிவர்கள் ரிஷிகள் பலரொடு தொழுதுவரு
கண்டபடி நீயிருந்து காணடி—யார்க்கும் [முறை
விண்டுசொல்லக் கூடாதென்று பூணடி. 45.

காவடிச் சிந்து

1. வந்த வரவைமறந் திந்தவீடென்—னமது
சொந்தவீடோ—பாச—பந்தவீடே—இது
வல்லவென் றிருவினை மாற்றத்தெளிவாய்

2. முந்தநீ தேடும்வகை வந்துகூடி—விரைவொடு
சொந்தமாடி—மிகவு—மெலிந்துவாடி—பின்னும்
உறவு கலந்துகொண்டு மதிகேடாய்

3. இந்தவி தம்பிறந்து மிறந்தோமே—விதி
மறந்தோமே—நிதி—குறைந்தோமே—சுத்த
ஏகாந்த வீடதனிற் றனியாமல்

4. அந்தரத்தி னடமிடுந் தந்திமுகவன்—பதம்
சிந்தனைசெய்வாய்—தொடர்—பந்தமறுமே—நாளும்
மனதில் மெழுகதுபோ லுருகிநிற்பாய்

5. கொல்லான்பு லால்களையு மறுத்தாரே—மோகம்
வெறுத்தாரே—பாச—மறுத்தாரே—காங்
குவித்துயிர் களெல்லாந் துதித்தாரே

6. கஞ்சா வபினரக்கு கழித்துவிடு—வெறி
ஒழித்துவிடு—அறி—வழித்துவிடு—மென்று
கற்றோர்கள் சொன்னமொழி கருத்தில்வைப்பாய்

7. கள்ளும் புகையிலையு மருந்தாதே—கதி
பொருந்தாதே—துன்ப—முறும்போதே—சற்றும்
கனவிலு நினைத்திடா துறுதிகொள்வாய்

8. பொய்கொலை களவுகள் மறந்திடுவாய—மெய்யைப்
பொருந்திடுவாய்—அருள்—சுரந்திடுவாய்—ஐயன்
பொற்பாதங் கண்டுமிகத் தெளிந்திடுவாய

9. ஐயையோ பேய்மனமே யலையாதே—பாவந்
தொலையாதே—தேகம்—நிலையாதே—பிர்மம்
அகத்திற் குடியிருப்ப தறியாமல்

10. பொயயோமெய் யோவென்று புகலாதே—மெய்யை
அகலாதே—தெய்வம்—விலகாதே—பதம்
பொருந்த வருந்தவங்கள் செய்யநினைப்பாய்

11. கூலிப் பலபசனைக் கூட்டமுடனே—தெய்வ
நாட்டமுடனே—தவ—வாட்டமுடனே—செயதுங்
குணமில்லை யென்றறிஞர் தெளிவுசொன்னார்

12. மந்திரங்கள் செபிப்பது மதியுமில்லை—நல்ல
விதியுமில்லை—பர—கதியுமில்லை—யோக
மௌன நிலையினின்றோர் பெரியோர்கள்

13. வாசனை மலரெடுத்தும் பூசைமுடிப்போர்—பல
வேடந்தரிப் போர்—கபட—மாகநடிப்போர்—மனம்
வஞ்சகத்தி லாழ்ந்துநிற்கு மபங்காதே

14. வாதம்பரச வாதமென்று மலைக்காதே—பணம்
தொலைக்காதே—பாவம்—நிலைக்காதே—மாயா
வாதமென்று தெரிந்துகொ ளதிவாதி

15. கற்றவர்கள் பணிசெய்யப் பத்தியுறுமே—யோக
சித்திதருமே—விதேக—முத்திபெறுமே—இனிக்
கண்ணாடி போற்றெளிவு காண்பாய்மனமே

16, படிக்கும் படிநடக்கப் பதிந்துகொள்வாய்—நிட்டை [நிதப
புரிந்துகொள்வாய்—சூக்மந்—தெரிந்துகொள்வாய்—
பரமாநு சுகம்பெற்ற பண்பிதாமே. 46.

---

1. ஆதியி லேதிரு நான்மறை யேசொலு
மற்புதங் கேள்மனு நீதியே—அதன்
சொற்படி யேநட வீதியே
அந்த ரங்கமெ னும்ப ரம்பொருள் கண்ட தொண்டர்ப தம்பணிந்திடு
மத்விதங்கை கூடுமடி வாதியே—அருள்
சித்சுகசு யம்பிரகாச சோதியே

2. வேதவி திகள்தொடர் பாவந்தொ லையுமென்று
விரதத்தைக் கோரடி மனமே—தான
தவநிட்டை சேரடி தினமே
விடியு முன்நதி தனிலே முழ்கிவி நாய கன்பத மேபணிந்துநீ
வெந்நீர் ஸ்ஞனபானந் தள்ளுவாய்—பூசும்
வெண்ணீ றவிழ்தமென்று கொள்ளுவாய்

3. சித்தர் பதினெண்மரும் தந்வம் மருந்தென்றும்
செப்புங் கலைகளுணர் மயிலே—அதன்
அர்த்த மவிழ்தமல்ல குயிலே
சித்தர் பாஷை கருத்து வேறெனுஞ் சுக்ர வாரவி ரதத்திலேபிடி
தெய்வமொன் றேயென்று முடிவாய்—கண்டு
தேவதா பிரார்த்தனை விடுவாய்

4. தன்னுயிர் போலவே மன்னுயிர் காப்பதும்
சத்திய மாய்த்துரிய மலையே—தனி
நித்திய வாழ்வது நிலையே
தத்து வாதி குதர்க்க போதைகள் இஷ்ட மாமிச பட்சமின்றிவிடில
சாஸ்வத நிஷ்டானுபூதி தருமே—நிர்மல
சற்குருகை தன்யவீடு பெறுமே

5. சப்தரிஷி முனிவர் சித்திபெற விரும்புஞ்
சாதனம் நான்காக வகுத்தார்—ஞான
சட்கசம் பத்தெனத் தொகுத்தார்
சமத மாதிகள் விடல்ச கித்தல் சமாதி யோடுசி ரத்தையார்வகை
சாதிக்க லாமடி கிளியே—இதில்
சலனங்கூ டாதடி பளியே

6. பிர்மவித் துவரன் வரிட்டன் நான்காய்
பேசும் சீவன்முத்தர் வழியே—தவம்

பிரிவுணர்த் தாரந்த வெளியே
பெத்த முத்தி யிரண்டி லும்பிச காது நித்திய வாழ்வு பெற்றிடு
பெருமை யறியலாமோ மணியே—அருள்
பெற்றோ ரறிவாரடி பணியே. 47.

பல்லவி

சக்கரம் வந்தது பொய்யா—தனு
செப்படி சென்றது மெய்யா

அநுபல்லவி

சக்கரம் வந்தது மெய்ப்பொருள் கண்டவர்
பக்கலில் நின்றுவில் லெப்படி சென்றது (சக்கரம்)

சரணம்

1. முக்கோண சக்கரத் துள்ளே—யொரு
சட்கோண வட்டமு மாகி
எட்கோணத் துள்ளுரு மாறி—யிருந்
தைக்கோணத் துள்ளுரு வாகி
ஏகாட்சர மாகத்திரு பாகத்தினி லேயுமை
இடது பாகத்தி லமைந்தாள்—கங்கை
சடாபா ரத்தி னுழைந்தாள் (சக்கரம்)

2. நாற்பத்து முக்கோண மேரு—தன்னை
நான்குவி தமாகப் பாரு
ஆர்க்குந் தெரியாதவ் வூரு—அதை
அடுத்துப் பார்ப்பதெவ் வாறு
அஷ்டாட்சர மாகிப்பல திஷ்டாந்திர மாகிப்பொன்
னம்பலத் தாடிடும் நடனம்—இதை
யும்பர்கள் காண்பது மரிது (சக்கரம்)

3. அகரமென் பதுவச்சு வாகும்—ஆதி
உகரமென் பதுமுந்நூ யாகும்
வகரமென் பதுசட்ட மாகும்—அதில்
நகரமென் பதுகால்க ளாகும்
மகரக்கொடி யசைவத்திரு சிகரத்தினி லமையத்தனி

வாசிக் குதிரையைப் பூட்டி—பிர்மம்
ஓசைப் படாத மோட்டி (சக்கரம்)

4. மூலாதா ரத்தெழு கனலைக்—காலால்
மூட்டிவைக் குங்கருத் துணர்ந்து
மேலேவா சியைநுழை வித்து—மகா
மேருவை வில்லாக வளைத்து
விண்ணோர்களு மதிரும்படி மண்ணோர்களுஞ் சிதறும்படி
வீறிட்டா திசேட ஞனாய்—வில்லில்
கூறிட்ட பாணங்கள் பாராய் (சக்கரம்)

5. ஒன்பது வாயிலுக் குள்ளே—ஒரு
மந்திர மாகவே யிருந்து
அன்பத்தோ ரட்சர மாகிப்—பின்னு
மாறுதா ரத்தையுங் கடந்து
அட்டகுல பர்வதமும் சப்தகடல் சேறுயிட
யானைபரி வீரர்படை சூழத்—திரிபு
ராதிகளும் புன்சிரிப்பில் மாள (சக்கரம்)

6. காமன் எரிந்ததும் பொய்யா—முனி
கடல்நீ ருண்டது மெய்யா
இராமர் வந்ததும் பொய்யா—இலங்கை
இராவணன் மாண்டது மெய்யா
சீதையைச் சிறைமீட்க அணைகட்டிக் கடல்தாண்டிய
இராகவன் லக்மண ரோடு—படை
வானரர் வந்தது மெய்யா (சக்கரம்)

7. பாண்டவர் வந்ததும் பொய்யா—அழியாப்
பத்தினி துரோபதை மெய்யா
மாண்ட படைகளும் பொய்யா—மகா
பாரத மென்பது மெய்யா
மாயாவரி கிருஷ்ணன் மகாபாவி துரியோதன்
வஞ்சகத் தையொழித் தானோ—ஐவர்
நெஞ்சகத் தேகளித் தானோ (சக்கரம்)

8. ஆலத்தை யுண்டதும் பொய்யா—தேவ
ரமிர்தங் கடைந்தது மெய்யா

சூரன் மாண்டதும் பொய்யா—சுப்ர
மணியர் வந்தது மெய்யா
சூட்சாதி சூட்சமொடு காட்சிப்ர மாணங்கள்
சொல்லவுங் கூடுமோ நாவால்—அதற
கெலலையு மில்லையே பாவாய் (சக்கரம்)

9. தேவர்கள் வந்ததும் பொய்யா—பதினெண்
சித்தர்க ளானது மெய்யா
மூவர்கள் வந்ததும் பொய்யா—முனி
யோகிய ரென்பது மெய்யா
மூவரொடு மாணிக்க வாசகர்திரு வாசகமும்
முடித்ததே வாரமும் பொய்யா—அதில்
வடித்ததே னுண்டார் மெய்யா (சக்கரம்)

10. மாசற்ற தேவமா தாவாய்—மரி
யாளென்னுங் கன்னிவ யிற்றில்
ஈசா னபியெனப் பிறந்து—நாதன்
எருசலேம் தேசத்தி லமைந்து
ஏசுகி ருஸ்துவெனும் நாமங்கள் சூட்டியே
எங்கும்பல வற்புதங்கள் காட்டிச—சீட
ரங்கம்பன் னிரண்டுகள் நாட்டி (சக்கரம்)

11. மக்கா நகரத்தில் வந்து—நபி
மையமா தீனத்தி லமர்ந்து
லட்சத் திருபத்து நாலா—யிரம்
நபியின்னல் முஹம்மது நபி
சல்லலாகு அலைகியுசல்ல மவர்கள் வந்து
நாட்டில் கொடிகட்டி நீதி—செயத
பாட்டினைக் கேட்டதும் பொய்யா (சக்கரம்)

12. கலியு கத்தினி லையா—அன்பர்
காட்சிகள் கண்டதும் பொய்யா
பலிகொ டுப்பது மெய்யா—பல
கலைகள் சொன்னதும் பொயயா
பர்வதத்தொழி லேமுக்கிய மூர்கிப்பலர் கூடிசசெயும்.

பக்குவம் நீயறி யாயோ—அன்பர்
மிக்க துயர்தெரி யாயோ (சக்கரம்)

13. பாரிலுள் ளோர்செய்யும் வேலை—பல
மோசங்க ளாகுதுன் னாலே
ஆரிடஞ் சொல்லியா னழுவேன்—அன்பர்
கோரிய காரிய முடிய
ஆதிமுத லேசெப்பிடும் வேதங்கள் யாவையும்
அன்பர் மிகநம்பிக் கெட்டார்—அதை
உன்புற மேசொல்லி விட்டார் (சக்கரம்)

14. பாரில் வருவதாய்க் காட்டி—எங்கும்
பத்திரி கைகளை நாட்டிக்
கூறிய சாத்திரம் பொய்யா—சமய
குரவர் வாக்குகள் மெய்யா
கூறிடும் வாக்குகள் பொய்யாகி விட்டாலும்
குற்ற முனைச்சொல்வ தாரு—இது
மெத்தப் பயித்தியம் பாரு (சக்கரம)

15. மானிடச் சட்டைநீ சாத்தி—இந்த
வையகத் தில்வரும் நேர்த்தி
ஏனுனக் கிந்த வேமாத்து—அன்பர்க்
கிடுக்கண்கள் செய்வதுன் கூத்து
எக்காலமு முன்லீலைகள் தப்பாதென வேகற்றவர்
ஏங்குவ ரோவிது பார்த்து—பின்
வாங்குவ ரோசிறு வூத்து (சக்ககம்)

16. அன்பரைக் காக்கின்ற லீலை—என்றும்
நம்பினோ வர்க்கிது பாலே
உம்பர்க்கு மெட்டாத வேலை—கொடுந்
துன்பத்தை நீக்குவ தாலே
ஒருகாலமு மறவாமலே யுறவாடிட வினைபோகுமென்
னுள்ளந் தெளிந்துநிற் பாரே—பார்த்துத்
தெள்ளிய தேனுண்டு தேர்வார் (சக்கரம்)

17. உன்னையான் விடுவதே யில்லை—உந்தன்
அன்பர்க ளுக்குவெகு தொல்லை

என்னைநீ விடுவதே யில்லை—என்று
மென்செய்கு வாயுறுதிச் சொல்லை
இனிமேலொரு கணமாகிலு மிறையேமனம் பொறுக்கேனென
எண்ணித் திருவருள் தாராய்—வரம்
நண்ணிக்கொ டுப்பதெவ் வாறாய் (சக்கரம்)

18. கண்ணன்பிர மாருத்திர ரொடுங்கக்—கதிர்
விண்ணு மதிகோள்கள் நடுங்க
மண்ணுலகம் பாதாளம் நொருங்க—வரைஎட்
டெழுகடல்திக் குப்பாலகர் நெருங்க
மகமேருவும் பொடியாகவே சிதறும்படி கணையேவிட
வல்லவ னேகொடு பாணம்—இப்போ
தில்லையென் றல்விடுவேன் பாணம் (சக்கரம்)

19. தந்தாலிப் போதர வேண்டும்—தாமிச
மென்றாலிப் போவர வேண்டும்
பந்தாடு வேன்பாரா யண்ட—பகி
ரண்டமொன் றாகவே குலுங்க
பரிசுத்தர்கள் தவிரப்பல வேந்தர்படை வீரர்களும்
பாரினுள் லோபிகள் மாளக்—கொன்று
ஆறிலொரு பங்குதிறை வாழ (சக்கரம்)

20. வச்சிர மணிமகுடந் தரித்து—எதிர்த்த
மன்னரனை வோர்களையுஞ் செயித்து
பட்சமுள் ளோர்களையா தரித்துப்—பதி
னெட்டாயு தமுங்கையி லெடுத்து
பாரமது தீர்த்துமறு நீதிக்கொடி நாட்டிடப்
பன்னிரண் டுவருடஞ் சுற்றி—வந்து
பராபவ வருடத்தில் வெற்றி (சக்கரம்)

21. நந்தன வருடமுதற் பூட்டி—மதுரை
நகர்வாசிக ளனைவோரையுங் கூட்டித்
தந்திரமா யற்புதங்கள் காட்டி—எங்குந்
தபசீலர்கள் துணையாகவே நாட்டி
சதுர்வேதமு நிலையாகவே தரைமீயங்கணு முறுதிப்படச்

சாற்றுமறை நீதிகளும் பொய்யா—தமியேன்
வாக்குமன மொன்றுனது மெய்யா (சக்கரம்) 48.

மதுரைக் கடம்பவனநாதர் கலியுகச் சிந்து

1. சீரிலகும் கடம்பவன க்ஷேத்திரத்தின் மகிமை
செழிந்தோங்கி நடந்துவரும் சிறப்புகளைக் கேளாய்
காரிலகுந் தென்மதுரை வடதிசையில் வாழுங்
கணபதியைக் கைதொழுத காரணங்கள் சொல்வேன்

2. ஆதிமுத லின்றுவரை யுலகமதில் வழங்கும்
அறுபத்துநால் திருவிளையாட் டாடியதோர் நகரம்
சோதிமக மேருதனைச் செண்டதிரு லடித்த
சூரஉக்கிர பாண்டியனால் துலங்கிவந்த நகரம்

3. சங்கத்தார் கூடிநின்று வழங்கிவருஞ் சமயம்
சகலருக்கு மிடங்கொடுத்த சாத்திரங்கள் பாராய்
அங்கயற்கண் மீனாட்சி தவப்பயனு லுதித்த
அற்புதங்க ளென்னசொல்வே னாலவாயின் மகிமை

4. பிட்டுக்கு மண்சுமந்த எல்லையதும் விளங்கப்
பீடுபெறு கணபதியும் பூரணமா யுதித்தார்
எட்டுத் திசையறியும் புண்ணியர்கள் கூடி
ஏகாந்த மாக்கிவைத்த வின்பமது பாராய்

5. சாத்திரங்கள் பார்த்திராச விருட்சவேம்பு தன்னைத்
தபசிலர்கள் கூட்டிவைத்த சதிரான எல்லை
நேத்திரம்போல் விளங்கிவரும் சமபத்தில் தெற்காய்
நேராகப் பாற்கடம்பு தோன்றினது முண்டு

6. அன்றுமுதல் அடியார்கள் கூட்டமது கூடி
அன்புடனே சிவலிங்க மமைத்தகதை சொல்வேன்
கந்தனுக்கு மூத்ததொரு ஐங்கரனுங் கூடிக்
கடம்பவன நாதரென்று காரணப்பே ரிட்டு

7. கலியுகத்தில் நீதிக்கொடி நாட்டவந்த வேத
காரணங்கள் யாராலுங் காணமுடி யாது
பலிகொடுக்க வந்ததொரு பாரதப்போ ரென்று
பரமசிவ னுரைத்தகதை பாரிலுள்ளோர் கேளீர்

8. ஐயாயிர மாண்டுக்குமே லதிசயங்கள் மெத்த
அறுபத்தைந்தாந் திருவிளையாட் டாடவந்த மகிமை
பொய்யேது மில்லையடா வுலகமது வுய்யப்
புண்ணியர்வந் தவதரித்த புதுமையென்ன சொல்வேன். 49.

பல்லவி

சித்தந் தெளிந்திடு தேனே—விதேக
முத்தி பொருந்திடு மானே

அநுபல்லவி

சிற்பரசின் மயமாகிய சற்குருவின் பதம்நாடெனச் (சித்)
செப்புமறை நீதிவழி சாரு—நெறி—தப்புவழி கூடாதென மீறு

சரணம்

1. சத்வகு ணங்களைப் பூட்டி—புபிர்
சித்ர ரதமொன்று கூட்டி
அத்துவி தக்கொடி நாட்டித்—தவ
ரத்ன மணிமுடி சூட்டி
அஷ்டதிசை எங்கும்புகழ் சட்டபரி பாஷையொடு
அமைந்த சூதகிரம் பாராய்—நீதி
விளைந்த விசித்திரம் நேராய் (சித்தம்)

2. தூலசூக் குமமெனுங் காடு—வெட்டிப்
பாதை தெளிவுறக் காட்டி
நால்வகைச் சேனையுங் கூட்டிப்—பரி
யானை ரதங்களு மோட்டி
நட்டனடு வானதிரு பட்டணமுஞ் சேரிலொரு
இரத்னமக மேருகிரி தோணுந்—தொண்டர்
நிஷ்டை புரிவதாய்க் காணும் (சித்தம்)

3. சத்துச்சித் தானந்த போகந்—தனை
யுற்றுணர்ந் தாலல்லோ யோகம்
நித்தியாநித் தியவஸ்து விவேகம்—பர
தத்வானுட் டானத்தின் யூகம்
நிஷ்களநிர் மலசாக்கர சொரூப்பனசார் பினையுற்றிட

நேசமொடு கூடிவிளை யாடும்—துரிய
பாவனைகள் வந்துதை கூடும் (சித்தம்)

4. நீரும்நெருப் பாரெனவுங் கூறு—பரி
பாஷைகளும் வேறெனவு மோரு
ஏறுமயிற் பாலமுணர்ந் தேறு—சுவர்க்க
ஏழுநிலை மாடமது பாரு
இகபரனற் கதியேதரு குருபரனிர்த் தனமாடிடும்
ஏகசிம் மாசனத் தோடு—நிலை
யாருந் துறைகண்டு கூடு. (சித்தம்) 50.

அருட் கும்மி

1. பசுமைக் கிளியே பசுங்கிளி யேகண்ணே
பாசமுள் ளவெந்தன் மாதுகன்னி
இசையுள் ளநவ ரத்தின மேயெனக்
கிங்கித மேயென்முன் வந்திரடி

2. ஆசையுள் ளமணி பெட்டக மேயெனக்
கன்புள்ள மாதவ சுந்தரியே
பூசை புரிந்திட வந்தா யோசெழும்
பொற்கொடி யேயென்முன் வந்திரடி

3. தேனேகற் கண்டேசெம் பூங்கனி யேமிகுந்த
தித்திக்குந் தெள்ளமு தேரசமே
மானேமட மயிலேவன்ன மேபொன்னே
மரகத மேயென்முன் வந்திரடி

4 ஆணிப்பொன் முத்தேதய லங்கிர்த மேயென்று
மசையா மணியே கருவேலமே
மாணிக்க மேயெனக் கின்பமுள் ளமணி
மந்திர மேயென்முன் வந்திரடி

5. சந்தேக முள்ளவென் கண்மணி யேயெனச்
சற்றேறப் பிரிபாகக வலைபுள்ளாரா
உந்தன் கவலைபய நீக்கவல லோநல
உபாயங்கள் சொல்கிறேன் கேளுமின்னே

6. ஆதி முதலிது காலம் வரையி
லடைந்திடும் பேர்க ளனேகமுண்டு
சோதிமெய்ஞ் ஞானசொ ரூபத்தைக் கண்டதோர்
சூட்சத்தைக் கேளடி பெண்ணரசே

7. கூடி யிருக்கச் சகியாண் டியவன்
கூட்டத் துடனுமி ருப்பாண்டி
நாடி யிருக்கு மடியார் தமக்கவன்
நாட்டத்தைக் காட்டி நடித்திடுவான்

8. அன்பரைக் காக்கு மருளுடை யோனவ
னானந்தங் காட்டி மறைந்திடுவான்
துன்ப மிகவுங்கொ டுப்பாண் டியவன்
தோழமை யான துணைவனடி

9. ஆசார மாக விருந்திடு வானவன்
அனுசா ரத்தையுஞ் சார்ந்திடுவான்
பூசை புரிகின்ற மெய்த்தவத் தோருக்குப்
புகழ்கொ டுக்கின்ற தீரனடி

10. பாசக் கடலைய றுத்திடு வானவன்
பாசாங்கு செய்திடுங் கள்வனடி
கூசாமல் தூது நடந்திடு வானவன்
கொள்ளை யடிக்க வல்லவண்டி

11. கோட்டை யிடித்து நுழைந்திடு வானவன்
கொத்தள மேறிக் குதிப்பாண்டி
வீட்டினுக் குள்ளேநு ழைபவ னுரென்று
விசாரணை செய்யுந் தலைவனடி

12. சொல்லத் தொலையாத வற்புதத் தானத்தைச்
சொல்லவும் நாவுண்டோ தோகையரே
எல்லை யற்றபரஞ் சோதி யடியவ
ரெங்குநி றைந்தப்ர காசனடி

13. கான மயிலை கருங்குயி லைகீ
கனவு கண்டதும் பொய்யாச்சோ

ஊனக் கண்ணுக்குத் தோன்றா தேயதை
யுற்றுணர்ந் தாலே தெரியுமடி

14. ஒன்பது வாயிலி னூத்தைச் சரீரத்தை
யுள்ளநா ளெல்லாஞ் சுமந்தலைந்து
நன்றுதீ தென்று தெரியா மல்நீ
நாடெங்குஞ் சுற்றினு லாவதென்ன

15. கள்ள மனதைக் கசடறுத் தந்தக்
கள்ளனைக் கண்டு பிடியாமல்
வெள்ளம் வரும்போ தணைபோடக் கூடுமோ
மெல்லிய நேசற் றுணர்வாயே

16. சிந்தை தெளிந்துமே பார்த்தா யானல்
தெரிசனங்கள் தோன்றுமடி
சந்தேகப் பதங்கள் வேறுமுண் டோநீ
சாயுச்சி யங்கள டைவதற்கு 51.+10=61.

நெஞ்சினுக்கு உபதேசம்

விருத்தம்.

அன்பினைப் பெருவா யாகில்
அதர்மங்க ளனைத்தும் நீங்கித்
துன்பமுந் தவிர்ந்து போகும்
துயரமிங்குண்டோ சொல்வாய்!
வன்பனய் உலகிற் றேன்றி
வாழ்வு நாள் முழுதும் செய்த
கன்மங்கள் வந்து சூழ்ந்த
காரணமறிவாய் நெஞ்சே! 61-a.

விருத்தம்.

(1) பூரணத்திற் பூரணமாய் எங்கும் நிறைந்து
ஆனந்தம் பொங்கி யூறும்
காரணனே யெனையிங்கே யழைத்தவகை
இன்ன தெனக் கருத்திற் கொள்ளேன்
தாரணியோர் செயலதனை நீயறி வா
யானறியச் சக்தி யுண்டோ
வாரணமா முகத்தானே வந்துநீ
ஆட்கொள்வாய் மறந்திடாதே

(2) மறந்துவிட்டா யின்றுவரை
அநுதினமும் பாலூட்டி வளர்த்ததாரு
கறந்து கறந்தாவின் கன்றுக்குப்
பாலூட்டுங் கதையைப் போல
சிறந்தெனை நீவளர்த்து விட்டாய்
செல்வனே யினிவேறு சிந்தையுண்டோ
பிறந்து பிறந்துழல்கின்றேன் பிறப்பறுக்க
அருள் செய்யும் பேரூரானே

(3) பலவழியாய் நின்றுகொண்டு
பலவழியாய் காட்டுகின்ற பரமநாதா
கலைபலது மாராய்ந்து உன தடிமை
உறுதி கொண்ட கருத்தின் வண்ணம்
நிலைபலதும் தெளிவித்தாய் ஒன்றெனவும்
வழிகாட்டி நீநானென்று
அலைவிலாமனதாக்கி யுலக மெச்சும்
அரசு செய்ய யடிமை கொண்டாய் 61-b.

அத்துவிதானந்தக் கும்மி

கும்மியடி பெண்கள் கும்மியடி குரு
பாதம் நாடியே கும்மியடி

அம்மையு மப்பனுங் கூடியிருந்த
வதிசயங் காணவே கும்மியடி

1. அப்பனென் றோர்சொல் சுருதி ரகசியம்
ஆத்தாளோ சித்து சடமாசசு
செப்ப வொண்ணாதவ ரூபவெ ளிதனிற்
சிற்சபை யொன்று சமைந்ததடி

2. நாதாந்த மோனந டனசபைக்கு
நடுவே மகாமேரு கம்பமொன்று
வேதாந்த வாலைபுவனை திரிபுரை
வீதி மனோன்மணி வாசல்களும

3. ஓங்காரத் துட்பொருள் பீசாட் சரமா
யுகார மகார மகாரமிட்டு
ரீங்கார மானச பைதனி லேசிவம்
சத்தியொன் றான துபாயமடி

4. மூக்கோண வட்டப் பிறையொன்று சாத்தியே
முன்னணி பின்னணி தான்துறந்து
விற்கோண மாகவே வேதாந் தவீதி
விளங்குஞ் சதாசிவ மாளிகையும

5. சந்ர கலையென்றும் சூர்ய கலையென்றுந
தற்பர மாலைசு ழிமுனையும்
நந்திகொ லுவென்றும் நாதவிந தென்றும்
நவரத்ன மானகொலுச்சபையில

6. மண்டல மூன்றாக ளுண்டாக கிவேக
வாசிக் குதிரையைக் கட்டிவைநது
விண்டுசொல லாதவி டந்தனி லேவிளை
யாடல் புரிநததைக் கேளுங்கடி

7. பிருதிவி யப்புதசே யுவாயு வாகாயம்
பிராண னபான தசவாயு
சோத்திரம் தொக்குசட் சுசிங்குவை ஆக்ராணம்
சுததசச நாடிக் கூட்டங்களும்

8. வாக்குப் பாதம்பாணி பாயு ருபத்தம்
மகிழ் நவத்துவார வாசல்களும்
ஆக்கிய ளித்துத் துடைக்கின்ற முத்தொழி
லாதிவ குத்தகி றங்கேளாய்

9. சத்த பரிசரூ பர்ச கந்தமும்
தன்மய மாக்கிய சாலவித்தை
சுத்தம சுத்தம்ரெண் டுண்டாக் கிமாயா
தொல்புவி யாளவ குத்தகதை

10. நல்வினை தீவினை சுவர்க்க நரகமும்
நான்கு பதவியு முண்டாக்கி
கொல்ல யெமனையுங் கூற்றுவ னைக்
கோலங்கள் செய்த தபாரமடி

11. ஆறுதா ரமுதல் மூலாதா ரந்தொட்
டடுக்கடுக் காக வமைத்துவைத்து
மாறுதி ருந்துமுன் கம்பத்தி லேறிய
வல்லவன் கூத்துவி னோதமடி

12. சூத்திரப் பாவையொன் றுண்டாக் கியதில்
சூக்கும மாகவி ருந்துகொண்டு
சாத்திர வேத சமய நெறிகளுந்
தத்துவந் தொண்ணூற் றாறுங்கயிறாய்

13. அன்னபி ராணமனோமய விஞ்ஞான
மாதார மானந்த மாஞ்னும்
வின்னப்ப டும்வாத பித்தசி லேக்மமும்
மேல்நாடி ரெண்டுத னிப்பீடமும்

14. பத்திப் பிடித்தந்த ரேசகத் தில்வாசி
பன்னிரன் டங்குலம் பாயவைத்து
வெந்தியாய் நான்குக ளிந்தெட்டுப் பூரக
மேவிய கும்பகஞ் சார்ந்திடவே

15. அகர முதலவ் வெழுத்துக்கு நூல்சுத்
தறுபது நாழிகை யோடுவது
பகருமி ருபத்தோ ராயிரத் தறுநூறு
பாயும் சுவாசந்த னிலிருந்து

16. ஏழு வகைத்தோற்ற மெண்பத்து நான்குநூ
றுயிரஞ் சீவபே தாதிகளும்
சூழப்பிர்ம் மாண்டங்க ளாக வகுத்த
துறவுகள் மாயையின் கோட்டையடி

17. எங்கெங்குந் தானுயி ருந்தர சாட்சிக
ளெப்படி செங்கோல் செலுத்துவது
அங்கங்குந் தன்னை யறியாம லேபூத
சாட்சியாய் நின்றது மூலமடி

18. எண்ணத் தொலையாத அண்ட சராசர
மேகமாய் நின்ற பரஞ்சோதி
கண்ணற்ற பாவிகள் கெட்ட ரகசிய
காரணம் யாவ ருரைக்கவல்லார்

19. மும்மல மாணவ மாயைகன் மங்களும்
முக்குண முப்புரந் தானாகி
அம்பல மாகிய வாணவக் கோட்டை
யலங்காரஞ் செய்தது பாருங்கடி

20. இராசத தாமச சப்த குணங்களும்
நானென்ற ராட்சதப் பூண்டாகிப்
பாசம் படர்ந்து கொடிதளிர் பூகாய்
பழுத்துச் சொரிந்தது பாவியர்மேல்

21. இராகத் துவேஷங்க ளெட்டோ டுபின்னி
நன்றாய்ப் படர்ந்துவளர்ந்தேறி
மோகித்த போகங்கள் யாரா லுஞ்சொல்லி
முடியா தென்றேப ழமொழிகள்

22. மந்தம னம்புத்தி சித்தம கங்காரம்
மாயாதி பூதபொ றிபுலன்கள்
ஐந்துவி தமலர்க் காய்க னியாகி
அகண்டமு மானத ளவில்லையே

23. இத்தனை கோலமு மித்தையென் றேகண்
டிகபர மிரண்டையுந் தான்கடந்து

அத்தன் திருவடி சாரா மலின்று
ஐயப் படுவ தறியாமை

24, அன்னை வயிற்றிற் பிறந்து மிறந்து
மனேக சென்மங்கள் தவமிருந்தும்
தன்னை யறியச தாநிட்டை யாயோக
சாதனஞ் செய்து முணராமல்

25. கன்னல் மொழிபேசும் வன்ன மயிலேயுன்
காரண மெல்லாந்தெ ரிந்துகொண்டேன்
சின்னுபின் னமாகச் செய்ததோர் தீவினை
செப்பக் கணக்குண்டோ தேவியரே

26. அன்ன நடையுள்ள பெண்ணர சேயுந்த
னன்பின் வழிசெல்லப் பாடுபட்டேன்
முன்னும் பின்னுமாகத் தானலைந் துகெட
மோசங்கள் செய்தாயிம் மாநிலத்தில்

27. பெண்ணர சேயுனை நம்பிக்கெட் டகதை
பேசவா திசேட னல்முடியா
மண்ணுல கத்தாரும் விண்ணுல கத்தாரு
மாண்டார்க ளுந்தன் மயக்காலே

28. நம்பிக்கை மோசங்கள் செய்ததி னலுனை
நம்பவொண் ணுதடி கோதையரே
தும்பிக்கை யானைமு கவன ருள்வந்து
தோன்றி ததிபர மானந்தமாய்

29. ஒற்றைக்கொம் பன்கழல் கண்டுகொண் டேனடி
யுத்தம மானவ ழியேகப்
பற்றுகள் விட்டுப் பரத்தை விரும்பியான்
பற்றறப் பற்றுமி டந்தனிலே

30. அத்துவி தவுண்மை யாரறி வாரடி
அற்பம தல்லவே ஆரணங்கே
சித்தந் தெளிந்து சிவமா னலருள்
செல்வம்வந் தெய்திடுஞ் சீரடைய

31. பொல்லாத மாயைதனைக் கடந் தால்பரி
பூரண மாகுமென் றேதெரிந்து
எல்லா முணர்ந்த பெரியோர்கள் பற்றி
யேக வழியாகத் துறந்தார்கள்

32, அங்கத்தி னுள்ளும் புறம்பும் பரிசுத்த
மானமெய்ஞ் ஞானி பதமபணிந்து
இங்க ளணிதில்லை வான நடம்புரி
சேவடிக் கற்பணஞ் செய்துவிட்டேன். 62.

பல்லவி.

தூங்குகின் றாயோ கணேசா—தூங்குகின் றாயோ

அனுபல்லவி

ஓங்கி வளர்ந்த விருட்சத் தடியில்
உல்லா சத்துடன் வீற்றி ருந்துநீ (தூங்கு)

சரணம்

1. பாழுல கந்தனில் நீதியே யில்லை
பஞ்சமா பாதகர் செய்கின்ற தொல்லை
ஏழைகட் கிங்கே யிருப்பிட மில்லை
என்செய்வே னோருத்த ரஞ்சொல் லேநீ (தூங்கு)

2. நம்பிக்கை யாகவே பங்கி கொடுத்தான்
நாணயக் கள்வ ரிருவர்கள் தானே
வம்புத் தனஞ்செய் சிதம்பரஞ் செட்டியின்
வார்த்தையை நம்பியே சர்ச்சி கொடுத்தான் (தூங்கு)

2. ஊழ்வினை யென்றே அரிகர புத்திரன்
உள்ளந் தெளிந்தா னுனக்கப யமென்று
தாழ்வை யடைந்தவன் பெண்பிள்ளை வந்துன்
சந்நிதா னந்தனில் தாபதஞ் சொல்வதேன் (தூங்கு)

4. அன்பெனு மரிகர புத்திர னுக்கிந்நாள்
அப்பீலில் விடுதலை யாமென் றுரைத்தாய்
துன்பமில் லாமன தாயோர்மை கொண்டு
துரைத்தனத் தாராலைக் கோர்ட்டி லப்பீல்செய்து (தூங்கு)

5. நின்செய லால்பிரஞ்சுத் துரையுத வியாலே
நீதமுள்ள பார்த்த சாரதி தானும் வந்துற்று
என்செய்தாய் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்புத் தனைநீக்கி
இரங்கினு யேழைத னைக்கிரங்கி நின்றாயே. (தூங்கு) 63.

உபதேசம்.

1. ஒப்பற்ற செய்கைகளவை யாரானும்
உலகத்திற் செய்யாதே உண்மை சொன்னேன்
தப்பிதங்கள் வந்துவிடும் நமனுக் காளாய்த்
தாங்காத வறுமைவந்து தவிப்பா யப்பா
முற்பிறப்பிற் செய்தவினைப் பாக்கிக் காக
மூட்டிவிட்டா னீசனவன் புவியின் கண்ணே
இப்பிறப்பி லதையறிந்து நடவா விட்டா
லெமன்கையிற் சிக்குவது திண்ணந் தானே

2. கங்கைதனில் நீராடிக் காசாயங்கள் தரித்தவர்போல்
அங்கமுழுதும் நீறணிந்தே அரனைத்தொழுதங் கடியணிந்தே
எங்குந்தொழுவர் கண்மூடி யிருப்பர்மௌனஞ் சாதிப்பர்
மங்கைதிருடுங் கள்ளரப்பா மாயவலைக்குள் சிக்காதே

3. அங்கவன்செய்த நன்றி யறிந்துநீ நடந்தாயாகில்
பங்குமுன் செய்தபாவம் பினித்தொட ராதுகண்டாய்
பொங்கமா யிச்செனமத்தே புரிந்திடுந் தபசினாலே
சங்கரன் பாதஞ்சேரத் தாமத முண்டோநெஞ்சே

4. ஆடுகின்ற கூத்தெல்லா மரன்கூத்தே யல்லாது யவனி மீதில்
தேடுகின்ற பொருளெல்லா முன்னதென மதிக்கின்றோம்
[தேகம் பொய்யே
நாடுநகர் பொருளெல்லாம் நம்மைவிட்டு மகலாதோ நமன்வந்
[துற்றால்
ஓடுகின்ற ஓட்டமல்லால் பாழ்மனமே எனக்கிங்கே ஒருக்கா
[லுண்டா

5. ஆசைகொண்ட பாழ்மனமே வகிலமதி லேன்பிறந்தோ மய்
[யன்பாதம்
நேசமுடன் விரும்பிமுன்னாள் செய்வினையை யகற்றுங்கால்
[நித்தம் நித்தம்
பூசனைசெப் வதுமன்றிப் பேதாபே தம்நீக்கிப் புலன்கள் யாவு
பாசமற நீக்கிப்பே ரின்பானு சுகமடையப் பகுத்த வாறே [ம்

வண்ண விருத்தங்கள்.

தானதன தனதனன தானதன தனதனன
தானதன தனதனன—தனதானா

1 சீவனென தெனமனம்வி டாமலது தொடரவினை
சேரும்வகை யாவதென—வறியேனான்
சீறுமல மாயையொடு கூடிவிளை யாடுமெனைத்
தேடிமதி யாவர்சொல—வருவார்கள்
பாவியெனு மோர்குறைக ளிதிகெட யார்செய்தது
பாலனெனை யேதொடர—வழியேது
பாவமிது வோமுன்செய்த பாவமென யாரறிவர்
பாரிலுளோ ரேசுவது—முறையோசொல்
காவுகொடு வோர்கள்வினை காலனணு காதபடி
காலனைக்கா லாலுதைத்த—கருணேசா
காமன்கணை யாலுருகி நாவுதடு மாறியிது
காலம்வரை யானுழல்வ—தறியாயோ
யாவுமறி யாதவனை யாவரறி வர்களிது
யானுமறி யேனெனது—குறைதீராய்
யாதுமறி யேனுனது பாதமதை நாடும்வகை
நாதனை யெனக்கருள்செய்—குருநாதா. 65.

தானத் தனதன தானத் தனதன
தானத் தனதன தானத் தனதன
தானத் தனதன தானத் தனதன—தனதானா

2. கானற் சலமென வேயுற் றிடுசக
மாயைக் குழுமல வாதைப் படுவது
காமக் ரோதலோப மோகத் தொடுபுனல்—கருவாகிக்
காருற் றிடுகுழல் மாதுட் புகவெய்த
காலத் திரயமது யார்செப் பிடுமுறை
காதற் படுமாக வாயிக் கடமது—வெளியாகி
ஈனப் படுசிறு வாலைப் பர்வமதி
லேகற் றிடுகல்வி யேதுக் குதவிசொ
லேகப் படுமன தாகித் தெளிவது—மெந்தநாளோ
ஏனிப் படியுற வாகிப் பிரணவசொ
ரூபத் தினிலய மாகிக் கொளுமடி
யார்கட் கின்பமுற யேவர் பணிசெய—வருள்வாயே
ஞானக் கிரிவல மேகச் சொலுமொழி
யானெனப் படியறி வேனக் காலமதில்
ஞானக் கனியென வேயுட் புகவலம்—வந்துநேரே
நாதக் கனிதனை யெபெற் றிடுமத
வேழச் சுவைதனை நாவிற் பெய்தருள
நானிப் படியுற வாகக் கண்டதுவும்—நிசமாமோ
மோனக் கனிபெற ஞானக் குறவனு
மோகித் தொருமையி லேறிக் கனலொளி
மூளக் கிரிவல மாகிக் கொண்டகனி—யிதுதானோ
மோகப் படுமடி யேனுக் கருள்செய்த
மூலக் கனிருசி யார்செப் பிடவலர்
மோகித் தெழுமடி யார்கட்கினியகனி-இதுதானே 66

தானதா தந்ததன தானதா தத்ததன
தானதா தத்ததன தானதா தத்ததன
தானதா தத்ததன தானதா தத்தன—தனதான

3. ஆராதா ரத்தின்வழி மூலாதா ரக்கனலை
ஆவியோ டொத்துநிலை நாதவிந் துக்கனியை
ஆசையோ டொத்தமரர் மூவர்தே டிசசிறிது—மறியாத

ஆதியாய் நித்யபர மேவவே யுத்தமர்க
ளாகிகா யப்பொருளை நேயமாய்த் தத்தங்கொடுத் [கள்
தானதோர் சற்குருவின் பாதமே நித்யமென—அடைவார்

விபமே சத்யமெனச் சோரனு கிப்ரபல
வேசிபோ விசைையுள மோகனு கித்திரிந்து [ரோ
வேதபா டத்தின்மொழி நீதியாய்க் கற்றுணர—வறிவா

வேதமே சத்யமென நீதியாய்க் கற்றுணர
விவேகமே பெற்றுய்வகை யாவர்போ திப்பர்சொலும்
வேதவே தத்துவிகள் நீயலா துமறுணர—அறிவாரோ

காரணு கர்த்தனன்றி வேறலா துத்தமர்கள்
காணவே செப்புமொழி யாவர்சோ திக்கவலர் [நாதா
காமியேன் செப்புமொழி யாவர்தா னெப்புவர்கள்—கண

காலகா லத்திலெனை மாலைகூ டக்கங்கணங்
காதலாய்க் கட்டியினிச சேர்தலா லட்டியென்ன
காதலி பக்குவமில் லாததோ கறபுநிலை—தவறோசொல்

பூரணு னுக்ரகம்வைத் தானுவா யிப்படிப்பொ
றுமையேன் வைப்பொருத்திப் போதமோ யிக்கருத்துப்
பூவையா ளுக்கிசைத்த பாவமோ வெக்கருத்து-மறியேனே

பூவின்மே லிப்பிறப்பு நீதமோ கற்றவற்குப்
பூதபே தத்தின்வகை யாதியா லிசசெனிப்பின்
போதமே சிக்கறுத்துன் பாதமே நித்யதத்வ—மருள்வா
[யே 67.

தனனு தனதன தந்த தனத்தன
தனனு தனதன தந்த தனத்தன
தனனு தனதன தந்த தனத்தன—தனதானு

4. மனமே யருள்பெற வஞ்சக மற்றுநல்
வழியே கவுமொரு மந்ர மிருக்குதம்
மதுவா மிர்தமதை நெஞ்சில் நினைப்பது—மரிதாகி

மனையா ளொடுதினம் நின்று சுகப்படு
மதனு மிர்தமதை யுண்டு களிப்புறும்
மயலா னதுபெரி தென்று நினைப்பது—முறவாமோ

வினையா லிதுசடம் வந்த தெனப்பட
விரிவா யந்தணர் மறைபல செப்பிடும்
விதமே நடைபெறு குங்கன வுத்தம—ருறவாகி

விரைவாய் மங்கைய ருறவுக ளற்றினி
விலகா திருமௌ னந்தனி லிக்கணம்
விடையா திகள்பல வுந்துக ளற்றுநன்—னிலையாகி

கனவா யுருசெக மின்றென நித்திய
கருணு நிதிபதம் நன்றென வுட்கொளுங்
கதிரோ னொடுமதி சென்றிடு மட்சர—வழியேகி

கனகா பீடமதில் நின்று நடித்திடு
கரிமா முகனடி சென்று துதித்திடு
கணநா தவொலிகள் கிண்கிணி பற்பல—இசைபாடும்

நினைவே யதிலுரு கும்படி வைத்துநன்
நியமா திகள்தனை நெஞ்சி லழுத்தியந்
நெறியே கடைப்பிடி பந்தம சற்றிவிண்—ணொளியாகி

நிழல்போ லதினிடை யன்புமி குத்திடில்
நெடுமா லயனொடு வும்பர்கள் மெச்சுவர்
நிர்வா ணசகஜ நிர்மல சாக்கிர—நிஷ்டையாமே. 68.

தனதான தத்ததன தனதான தத்ததன
தனதான தத்ததன தனதான தத்ததன
தனதான தத்ததன தனதான தத்ததன—தனதான

செகசால வித்தையென நடிகோல மெத்தவுள
திருவாச கத்தையொரு மனுவாக வுற்றெழுதுந்
திருவாச கத்தில்மன மொருவாச கப்படுவ—துரையாயோ

திருவா யுதித்துருகு மணிவாச கத்தினுறை
தெளிவா ருளத்திலரு மறையே யெனப்புகலத
திடமா யருட்குரவ வடிவா யுரைத்தமொழி—யறியேனோ

பகையா யெனைக்கைவிடல் முறையோ வுனக்கபயம்
பரிபாஷை செப்பவுன தடியா ரெனசசுந்தரர்
பரிபாக அப்பரொடு திருஞான மெய்க்குரவ—ரெனுமூவர்

பறைபோட விப்புவியில் மறைநால்வர் செப்புமொழி
பணியாக முற்றுநவ மணியா யிழைத்துனது
பரிபாக பக்வமதில் வருவோர் தமக்குதவு—மணிமார்பா

வகையான பொக்கிஷமுன் னருகே யிருக்கநல
மறியாத பக்குவனை யெளியே னெனக்கருதி [யேது
மனநோக விட்டிடுதல் தகுமோ வெனக்கொருவர்—துணை

வரும்வேதை யத்தனையும் பொறுக்கே னினிச்சிறிதும்
மகவான விக்குழவி பரிதாப முறறுருகல்
மனமோ வுனக்குருக விலையோ திருக்கருணை—யிதுநாமோ

நகையா திருக்கும்வழி யெவர்தா னுரைக்கவலர்
நயமா யுரைக்குமுறை செவியோ துறக்கவிலை
நறுமா தவத்தினர்கள் பதமே தொழச்சிறிது—மறியேனே

நடுவர்க வைத்தபொரு ளுனதோ வெனகருமது
நடுவான பொற்சபையி லுறைவோர் தமக்குமது
நமனார் தமக்குமிலை பகைவோர் தமக்குமிலாப்—பொருள்
[தானே 69.

தானதத்த தத்ததத்த தானதத்த தத்ததத்த
தானதத்த தத்ததத்த தானதத்த தத்ததத்த
தானதத்த தத்ததத்த தானதத்த தத்ததத்த—தனதான

6. மூலவித்தி னைப்பரப்ப வேரறத் திருத்திவெட்டி
மூவகைப் படுத்தியுச்ச மாநிலத்தில் வித்தையிட்டு
மோனவித் தெனத்தளிர்த்து வானம்விட் டிறக்ருசுந்த—
[சலமோடி

மோகனப் படக்குளிர்ச்சி யாய்வளர்த்த கொப்புமுட்டி
மூலவட்ட சக்கரத்தி னுடலுற்ற தைப்பிடித்து [வாகி
மூதுணர்த்தி வித்தசித்ர கூடமட்டு முட்படுத்தி—நிறை

வேலதைத் தொடுத்துவிட்டுச் சூரரைப் பிளக்கவெற்றி
வேல்மயில் குகனடத்தி வேகமுற்றிடத் துரத்தி [யாகி
வீரமுற் றவுணர்சுற்றம் மாளவெட்டி வெற்றிபெற்று—நிலை

வீடுபெற்றிடப் பகைத்த சூரரைச் சிதைத்துநித்ய
வீடளித்த சித்திபுத்தி நாயகத்தை நித்தநித்தம்
மேவினர்க் கசசமுற்றுத் தாள்பணிக் கிச்சையுற்றுப்

ஓலமிட் டுரைத்தலுத்த பாலருக் கனுக்ரகித்த [பொறையாகி
ஓர்மையைப் பிடித்தசுத்த மாயைச சடக்கறுத்தே
ஓமெனக் கருத்துள்வைத்துள் ளோசையைக் கலக்கநித்த—

ஓரெழுத்து னூற்பவித்த காலசித்ர குப்தனுக்குள் [முறவாடி
ஓர்படத் துளெக்கணக்குஞ் சீர்திருத்த வொப்புவித்தே
ஓர்நிமிடத் துக்கடத்துள் பாரெனத்திரட்டிவைத்த—குரு

நூலருக்கும் காரணத்தர் பூப்புவர் சுவர்க்கமட்டும் [பாராய்
தூலமுன்கன் மஞ்சலித்தெல் லாஞ்சலித் துரப்பிநிற்கச
சூழ்வினைப் படம்பதித்த தீவினைப் பயன்செலுத்து—
[முறைதானே

தூய்மையுற்ற நிற்குணத்தின் வாய்மையுற்ற திற்றொடர்ச்சி
சோர்வறக் கடைப்பிடித்தென் னுளமச் சுகக்கடற்குட்
சோதியிற் கலக்கநிர்த்த மாடுபொற் பதத்திலயிக்ய—
மிதுதானே. 70.

தனதனன தந்ததந்த தனதனன தந்ததந்த
தனதனன தந்ததந்த தனதனன தந்ததந்த
தனதனன தந்ததந்த தனதனன தந்ததந்த—தனதான

1. மதியொடு புனைந்தகங்கை மகுடமணி கொன்றைதும்பை
மலையரச னன்றுதந்த மதனவிழி கொண்டசுந்ர [யாமல்
மனைவியொடு சென்றமர்ந்த மரபையறிகின்றதந்ர — மறி

மனலகிரி கொண்டுசிந்தை மகிழ்வொடு திரிந்துபெண்கள்
மயலது சுழன்றுபொங்கி மருவியது பின்றொடர்ந்து
மல்மதி விடைந்துநொந்து மகவுபடு துன்பமென்றும்—வில

பதிதனிலுரைந்தவன்பர் பவமது கடிந்துவுந்தன் [காதோ
பதமிசை படிந்துவிந்தை பகர்திரு மந்ரமெந்தன்
பவக்கடல் கடந்துவந்த பரவுணர்வு கொண்டுதங்க—முடி

பலவித குணங்களைந்த பருவமது மிஞ்சுகின்ற [யாதோ
பரிதிமதி சென்றிலங்கு பர்வத மெனப்புகன்ற
பரமநிலை கண்டதொண்டர் பணிவிடையி லன்புகொண்டு—
தவறாமல்

துதிபெறு குணம்பொருந்தத் துணிவுபெறு சிந்தைதந்து
துறவுகள் பதம்பணிந்து துகளறு தலம்புகுந்து
துணையென வறிந்துணர்ந்து துரியநிலை சொந்தமென்று
—அருள்வாயே

துவிதமொ டிருந்துகந்த துயர்கள்பல வுந்தவிர்ந்து
துரிதமுள சந்ரவிம்பச் சுடர்தனி லழுந்திநந்தி
துஜகருட கம்பமென்ற துருவநிலையந்தமென்று—மறியே

கதிபெறவு மன்றுநன்று கணவனை யறிந்தமங்கை [ஞே
கருதியவள் சென்றணைந்த கலவியில் நயந்துகொஞ்சுங்
கனியமிர்த முண்டவஞ்சி கனவிலுமறந்து நெஞ்ச—மயர்

கபடமன வஞ்சநெஞ்சக் களவுகொலை தஞ்சமென்ற [வாளோ
கயவரை மறந்துஅஞ்சிக் கசடறமொழிந்தவிஞ்சைக்
கருணைபொழி மந்ரமொன்று கடைப்பிடி திருந்தவென்றும்
[—நிலையாமே 71.

தனதான தத்ததன தத்தத் தனத்ததன
தனதான தத்ததன தத்தத் தனத்ததன
தனதான தத்ததன தத்தத் தனத்ததன—தனதான

8. முடிவான முப்பொருளை முத்திக்கு வித்தகனை
முறையே கருத்துட் டிருத்தப் பழுத்தொழுகு
முதலான நற்கனி வடித்துத் தனித்தரசம்—பருகாமல்

மூலமாதர் பட்சமதி லிச்சித் திருப்பதுவு
முறையோ நமக்குப் பழிப்புச்சொ லித்தனையு
முதவா தெனப்பகர்வ தைப்பற்றி நிற்பதுவு—நலமாமோ

பிடிவாத முற்றுப் பொருள்பெற்ற சித்தரடி
புரையோடு நற்றிப் பிடிக்கக் கிடைக்குமருள் [னே
பொதுவான சித்தும் பலத்தைக் குறிக்கும்வழி—இதுதா

புலவோர் தமக்குட் களிப்புற்ற சிற்கசன
பரமேவ நித்யத்வ நிற்குண மிகுத்திலகு
புலியா சனத்தைத் தரிக்கும்பரி பக்குவமது—வெளியாகும்

கொடிதான துஷ்டருட னிஷ்டமது நீக்கிப்போய்
கொலைகாம கட்களவு சற்றுமில தித்தனிமை
கொழுவா யுனக்குநிக ரித்தல மிருப்பரெனப்—புகல்வாரோ

குரவோர்கள் பட்சமது கிட்டப் பரத்வநிலை
குணமாகு முற்சனன வித்தைக் கொளுத்திவிடுங்
குறைவேது நிற்சலன முற்றுப் பிறப்பறுதல்—தெளிவாகி

படியேற வுச்சிவெளி சித்திக்கு நற்கருணை
பரபோக மிச்சிப்ப தெத்தனை தவத்தினர்கள்
பரையேக சிற்சபை நடிக்கக் கருத்துருவ—மதைநாடு

பரநாத கொர்ச்சிதமும் பற்பல விதத்தொனியும்
பரிதாப முற்றுணரு முத்தமர்க ளுக்கிசையும்
பலகாலு முத்திநெறி கைக்கொளுவ திப்படியென்—றுணர்
[வாயே 72.

தனதானன தந்த தனந்தன
தனதானன தந்த தனந்தன
தனதானன தந்த தனந்தன—தனதானு

9. அறமேபொரு ளின்பம் விளைந்திடு
மதுவேபெரி தென்று நினைத்திடில்
அறிவோடருள் வந்து பொருந்திடு—துணையாகும்

அணுவேனு மறந்திடில் நம்செய
லறியாமை யெனும்பெயர் கொண்டிடு
மனைவோர்களும் நிந்தனை யும்புரிந்—திகழ்வார்கள்

குறமாதை யணைந்திடு சம்பிரம
குகவேள்துணை தந்தி முகன்பதம்
குறியாக வணங்கிடு மன்பர்க—ளடிசாருங்

குழல்சோரிட நின்றிடு மங்கையர்
குயில்போலிசை யுங்குர லின்புறுங்
குணமோடு செறிந்து மயங்குத—லுறவாமோ

பரமேயுற வென்று துறந்திடில்
பவமானது வெந்து தணிந்திடும்
பகர்மாமறை சங்கை தெளிந்திடும்—விரைவாகப்

பனிமாமதி செங்கதிர் தங்கிய
பதிமேல்நட னம்புரி கின்றது
பணிபாத சிலம்பு கலீர்கலீ—ரென்றுபாட

மறையோர்தொழு மம்பல முந்திரு
மகமேரு வெனுஞ்சுழி கண்டவர்
மனமானது செந்தழல் கண்படு—மெழுகாகும்

மெள்ளனுதிக ளுந்திற மென்றிட
மணிமேடையி லன்பு சுரந்திடும்
மதுவாமிர்த முண்டு சுகம்பெறும்—வழிதானே. 73.

தான தத்ததன தான தத்ததன
தான தத்ததன தான தத்ததன
தான தத்ததன தான தத்ததன—தனதானு

10. ஆதி யிற்ககன சோதி முச்சுடர்க
ளாவி யிற்பொதிய தேயு வப்புவொடு
வாக மத்தின்வழி நீதியிற் பிருதிவு—சமனாக

ஆலி னிற்றுயிலு மால்தனக் குமரு
காவெனப் புகலு மோத கப்பிரிய
ஞான விக்கினவி நாய கத்தினடி—மறவாமல

ஓதி வைத்தகுரு மூல மித்தனையு
பாயம் வைத்துமுணு ராதிருப் பதுமுன்
னுள்வி தித்தவிதி தானெனப் பகர்வ—தறியாமை

ஓர்மை கெட்டமன மேயினிச் சொல்வ
தூக மற்றசெய லேவெனக் கருதி
யோக நிட்டைபுரி மாத வத்தினர்க—ளடிசேரும்

வீதி யிற்சரச மாய்மய க்கவரு
மேல்மி னுக்கியிந்த சால வித்தைசெய்மின்
னார்க ளிச்சையைவி டாதி ருப்பதுவு—முறைதானோ

வீணு ரிப்படிய னேக மிப்புவிவி
வேக மற்றுமலை வார்க ளிக்கரும
மேன்மை யைத்தரவொ ணாதெ னக்கருதி—விடுவாயே

நீதி யைப்பெறவி சார முற்றுநெறி
யாய்ந டக்கமறை யோர்கள் சொற்படிநல்
நியம நிட்டைதவ ருதிருப் பவர்கள்—துணையாகும்

நீள்பி றப்புயினி யேது நற்றவ
நிராம யப்பொருள்கை கூடு மிச்சமயம்
நேசம் வைத்துநமை யாதரித் திடுவர்—பெருமானே. 74.

தனதன தத்தத் தனத்த தானன
தனதன தத்தத் தனத்த தானன
தனதன தத்தத் தனத்த தானன—தனதான

11. கதிரொளி பெற்றுக் கழுத்தி லேயணி
கனக மிழைத்துக் கோர்த்த மாமணி
கருமுகி லொத்துத் திகைத்த நீள்குழ—லொடுசோரக்

கலவி விளைத்துப் பருத்த மாநகில்
தனைவரு டிக்கொண் டணைத்து நாவில்தன்
கனியமிர் தத்தைப் பருகி யேமதன்—கணையாலே

பதிசய னத்திற் குவித்த மாமலர்
பரிமள மிட்டுக் களிக்கும் வாசனை
பலதொழி லெட்டிற் குறித்த லீலைகள்—தவருமல்

பகவ னிடத்திற் சுகித்த பார்வதி
பரவச முற்றுத் தனித்த வோருரை
பகருவள் புத்ரப் பலத்தை யேபெறச்—சிவனாரும்

சதியுட னொப்புக் கொடுக்க வேகண
பதியும் வயிற்றிற் செனிக்க நாடினர்
சலனமு மற்றுத் தவத்தி லேயிரு—வருமாகத்

தபசு முடிக்கத் துதிக்கை கோடொடு
தளதள னெக்குஞ் சரத்து மாமுகன்
தழுவி யெடுக்கப் பருத்த பேழையின்—வயிறாக

மதிவத னத்தைக் குறித்த பார்வையள்
மகவினை முத்தங் கொடுத்த பால்தனை
வயிறு நிரம்பப் புசிக்க வேயிவ—ளரனோடும்

மடிதனில் வைத்துச் சிரித்த கோலமு
மகிழொடு பெற்றுக் களித்த பாலகன்
மலரடி பற்றக் கதிக்கு நேர்வழி—புரிவோனே. 75.

தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
தனதத தந்தன தனதன தனதன—தனதான

12. திடதுற நின்றிடு குறமகள் குரலிசை
திணைப்பு னந்தனில் மயிலொடு குயில்களுந
திகைதது நின்றது நமதுற விதுவென—முறைகூற

திருக்கு முந்தையி னருகினில் வரவரச
சிறப்பு டன்பணி கலைகளு மசைவுறத
திருக்க ரங்கவு ணெரிகிற சுழலொடு—குழலாட

உடுக்கை வென்றிடு மிடைதுவ ளயெறிகல்
லொலிகி ளம்பவு முணவுகொள் பறவைக
ளுரதெ ழும்பியே யவரவர் கிளையொடு—மறைவாக

ஒருதத ரின்றியே பரணிந னிலுலவி
புரைதத பண்களு மதிவத னமுமிவ
ளுருக்க முந்திரு விரைகுல மெனமயில்—குயிலோடு

நடுக்கம் வந்திரு கிளைகளும வழிசெலும்
நடக்க வின்புற ரகசிய மறியுநா
ரதபர வுஞ்சர வணபவ னெடுவிள்ள—மயலாகி

நரைக்கி ளம்பிய வயனொடு புனமதில்
நடிக்கும வஞ்சியி னருகிவர் பசியென
நகைக்க வுண்டிடு மதுவொடு விரவிய—தினைமாவைக்

கொடுத்த பைங்கிளி கரமதில வளையல்கள்
கொடுக்க வுமபல திணுசுக ளுடன்வரு
குகப்ர வும்பல வடிவுட னுரைசெயது—முடியாமல்

குறித்த தந்திமு கவனடி தொழுதிடக்
குலத்தி லுஞ்சிறு துணைவனை னவுருகிக் [76.
குறப்பெண் மங்கள முடிவுசெய தருளிய—பெருமானே.

தத்தத் தனத்ததன தத்தத் தனத்ததன
தத்தத் தனத்ததன தத்தத் தனத்ததன
தத்தத் தனத்ததன தத்தத் தனத்ததன—தனதான

முத்திக் கொருத்தலவ ரத்னப் பதககமணி
முற்சித் திபுத்தியிரு கக்கத் திடுக்கியபின்
முக்கற் பிதப்பிரமன் பக்கத்தில் வைத்தசரஸ்—வதியாளை

முற்பாற் கடற்றுயிலும் விட்ணுக்கு லட்சுமியும்
முத்தர்க் குருத்துடைய ருத்ரர்க் கருட்பார்வதி
முக்கட் பரமேசர் சித்தப் படிக்குமகேஸ்—வரியாளும்

சித்ரச் சபைக்கருகில் நிர்தப் படக்கருதி
சித்தர்க் கொப்புவமை யற்றுக் களித்திலகு [யாகிச்
சித்தம் பலச்சதா சிவத்திற் கோர்த்தமனோன்—மணி

சிற்சத்தி பெற்றகுக னுக்குப் பரத்தியொடு
சித்துக் குறத்தியிவர் கட்குப் பறக்குமயில்
சித்திக்கு முத்திதரு மத்திக்கு மூஷிகவா—கனமூர

உற்பத்தி செய்பிரம னுக்குப் பருத்தனமு
மொத்துக் களிக்குமரி பட்சத் தினிற்கெருடன்
ருத்ரர்க்கு மற்றயிரு வர்க்குத் தனித்தரிஷ—பமுமேகம்

ஒப்பற்ற சத்திகளு முட்பட் டிருக்கவுமை
பெற்றுக் களித்தமுத லுக்குப் பருத்தவய
துற்பத்தி யைப்புகல வெப்பத் தருக்குமுடி—விலனுகி

சர்ப்பத்தை முற்சிற் றிடைக்கச் செனப்பணிகொள்
சர்ப்பத்தி னிற்சயன முற்றுச் சிறக்குமரி [னே
சர்ப்பத்தி னைச்சிவனு மொத்துக் கழுத்திலணி—வதுமே

சற்சித்தி புத்தியுமை லட்சுமிக் கொப்புடைய
சட்டத்தை மெய்ச்சுருதி கற்பிக்கு மர்த்தமது [77.
சர்ப்பக் குணத்தைவிடு வித்துப் பரத்திலுறை—தவமாமே

தான தனந்தன தந்த னந்தன
தான தனந்தன தந்த னந்தன
தான தனந்தன தந்த னந்தன—தனதான

14. இரேசக பூரக கும்பி கந்தனி
லேயெழு வாசியில் நின்றி லங்கிடும்
நேர்மையை யாரறி வாரிச் சகந்தனில்—மனமேகேள்

நீள்சடை மேலணி கங்கை யும்பிறை
மாதுமை யாளொடு சென்றி டும்பர
னேசம தேதுணை யென்று நம்பிடு—வெளியாகும்

பாசமெ னுந்திரை யால்ம றைந்திடு
மாசையெ னுங்கட லேக டந்திடு
பாகமும் வந்திடு மோவெ னுந்திகி—லடையாதே

பாவம கன்றிட வேபு கன்றிடு
நீதியெ னும்படி யேந டந்திடு
பார்பெ ருங்கட லேக டந்திடப்—படகேர்வாய்

இராசத தாமத மென்றி ரண்டினி
லேபடு லாதிகள் துன்பம் வந்துறும்
ஞாதுரு நேயம்வி டாமல் நின்றிடு—சுகமாகும்

நாதமு விந்தினி லேவி ளங்கிய
பூரண முங்குரு வாகி டும்பர
ஞானமும் வந்துகை கூடு மென்பது—மிதுதானே

கேசவ னும்பிர மாவு மன்பொடு
தேடியு முன்புகா ணாத சங்கைகள்
கேதுவு மிராகுமூ டாடி நின்றது—மறைவாகக்

கீழுல கம்மடி யேழு லோகமும்
மேலுல கம்முடி யேழு லோகமுங்
கேசரி யென்பதி லேயி ருந்துநீ—யறிவாயே. 78

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன—தனதான

15. சுருதி மொழிபகர் குருவென வருமொளொடு
துயர முறும்பவ் வினைகளு மடிபொடு
தொலைய வுலகினில் மனுவடி வெனவருந்—கொளநாடித்

தொழும் கிரிஷிக ளமரர்கள் பலரொடு
திரிய கணபதி கலியுக மதில்வரு
துறவை யொருவரு மறிவது கடினமென்—றறவோது

அருகு பலமலர் களபகுங் குமமொடு
அடியர் தொழுதிட வவனியில் வலம்வரு
மரிய மகிமையை யெளிதினி லுணரவும்—வெளியாமோ

அறிஞர் திருவடி யனுதினம் வழிபட
அமிர்த குணமது பெருகிடும் வினையது
அகலு மனமது தெளிவுறும் ரகசியம்—வெளியாகும்

பருவ மிதுவெனு முதிர்சரு குகனிகள்
பருக நினைபவர் கருமிக னுமறை
பகரு மொழிகளை நெறியென வுணர்பவர்—பெரியோரே

பருதி மதியிரு கலைகளு முறவுசெய்
பதியில் நடமிடு கரிமுக னடியிணை
பரவு மௌனிகள் மலைகுகை சருகுகள்—புசியாரே

சருவ மவனது செயலென வுருகுவர்
தரணி தனிலதி மகிமையை யுடையவர்
சலனம் விடுபடு சமரச நிலைகளு—மறவாரே

தரும நெறிகளும் வளரவு முயர்குல
சதுர்மறைமுனிவ ரனைவரும் வெளியிடு
சமய முலகினி லசுரர்கள் குலமது—முடிவாமே. 79.

தனனத் தனனதத்த தான தானன
தனனத் தனனதத்த தான தானன
தனனத் தனனதத்த தான தானன—தனதானா

16. புருவத்தி னிடைமத்தி பார்பா ரென்சொலு
மறைகற் றுணரவல்லா ராரா ரென்சொல்வேன்
பொறுமைப் படுதல்பற்றி மேலு லாவிடு—நிலையாகும்

பொறிசற்று மசைவற் றிராது மாய்கையில்
ஒருமைப் படுதல்நித்ய மோவென் றேசொலும்
புலனற் றனுதினமும் நீதி யோடுசென்—றுறவாடி

குருவைக் கண்டடிபணிந் தேத்து வாயிரு
வினைபற் றறுதுனைவிட் டுப்போகு மேகசற்
குணமுற் றியுனைநற்றி யேவி டாதருள்—கனிவாகும்.

குரவர்க்கு வீடளித்த நாளி லேபல
சிறுமைப் படவும்வைத்த கோலமே கண்டு
குமரக் கடவுள்செப்பும் நீதி யேகும்ப—முனியேக

பருவப் படுதல்சத்ய மேமுன் னோர்களுஞ்
சுருதிப் படிநடந்து போர்செய தேயிந்தப்
பரத கண்டமுழுது மாண்ட யோகிகள்—வெகுகோடி

பதமிப் படியிருக்க மூட ரானவர்
கலைகற் றுநெறிதப் பியே நடந்திடும்
பவமுத்தி யுலகத்தி லேமயங்கிடும்—வழிகூடா

வறுமைப் படுதல்நன்று நீடுதென் றேயினி
மருவிச் சுழியிலயன் றேனு மாய்கையில்
வழிதப்பி யிருளுக்கு ளேம றைந்துநீ—நழுவாதே

வரினிப் படிநடந்து ராஜ யோகத்தின்
மவுனத் திருந்துமுத்தி சேர லாமென்ற
மரபைத் தெரிந்துசித்த மேதெ ளிந்திட—லயமாமே. 80.

தனதனன தனதனன தனதான தத்ததன
தனதனன தனதனன தனதான தத்ததன
தனதனன தனதனன தனதான தத்ததன—தனதான

17. குருவுருவ மருவமெனும் மறவாது நிட்டைபுரி
குணரகித மினிமையொடு நெடுநாளு நிர்த்தமிடு
குரவரெதிர் படும்வரவை நடுவீதி பற்றுபதி—சதியோடும்

குலமுழுது மடிமையெனும் பலகாலு முத்தர்பணி
குருவினடி தொழுதுநறு மலர்தூவி யிட்டமுது
கொளுமெனவு முறுகியறு சுவையோ டளித்தமிர்த—மெ

பெருமைபெறு தவமகிமை யறியாத முத்திநிலை [னவூட்டும்
பிறவிவினை யகலவொரு தவம்வேறு செப்பவிலை
பிரமநிலை புணர்பவர்க ளரனால் விதித்தவிதி—இதுதானே

பெருமையிது பெருமையிது யெவரா லுரைக்குமொழி
பிசகோ ரணுவிலையெனவு மறையோர் களிப்புறுதல்
பிறர்கருதி பிறர்கருதி யிவர்போல் நடக்கமன—முறுவாரே

பருவமெனு முபநிடத மறைநா லிலக்கணமும்
பகருமொழி யனுதினமு முருவே செபித்திலகு [ராய்
பதவுரைக ளணுவளவு மறவா தியற்றுகுண—முடையோர

பகலிரவி லொருகணமு மசையாது நற்கனிகள்
பருகிருசி யதிகமுள ரசமே வடித்துநிறை
பசிதீவி ரதரமுடைய தபநிலை ருக்கமிர்த—வுணவாகும்

சிறுகுழவிகதறியழ திடவோல மிட்டகுரை
சிறைபடுதல் முறைமையல வெனவே தொடுத்தசரஞ்
செவிடுபட வசுரர்கிளை கெடவே ரறுத்ததிற—மிதுதானே

செகுணதரி கிடதொமெனத் திருமால்கை மத்தளமுஞ்
செணுதசெணு ததிங்கணதோ மெனவாடு நிர்த்தனமுஞ்
செயசெயன வருள்பொழிய மௌனநீதி சித்தர்சபை—புகு
வோனே. 81.

தனன தான தான தந்த
தனன தான தான தந்த
தனன தான தான தந்த—தனதானு

18. பழைய வாணி பாடி முத்தர்
கிளைகள் கூடி யேப பூத்த
பழமு ளேக மாய்வ டித்த—ரசமோடு

பரிதி மேலு லாவு சித்ர
மதியி லோடும் வான மிர்தம்
பருகு வார்க ளோயி யற்று—மறைநீதி

தழைப லாவி ஞோர்வ ருக்கை
சுளையி னூடு மேவ டித்த
சரிதம் யாவ ராலு ரைக்க—முடியாதே

தமிழ்வ லோர்க ளேம திக்கும்
அருமை யான யோக சித்தர்
தரும சீல ரோடு மிக்க—வுறவாடி

விளையும் ஞான பூமி மட்டும்
மசைவி லாது காடு வெட்டி
வெளியில் நாத கீத மூட்டி—யொளிவீச

விசித மான தாளி லிட்ட
பணிக ளோடு மேமு டித்த
விபுதர் நாவி னூலு ரைத்த—தனிநூலே

மழைகள் வாணி லேசெ ணித்துப்
பொழிய நீதி மாநி லத்தில்
மருவி யோடு வாரி திக்கு—நதிமூலம்

வரிசை யாக மாத வத்தர்
கருணை யாக வேமு டித்த
மௌன ராச யோக நிட்டை—புரிவாரே. 82.

தனனத் தனனதத்த தனனத் தனனதந்த
தனனத் தனனதத்த தனனத் தனனதத்த
தனனத் தனனதத்த தனனத் தனனதத்த—தனதான

19. வயிரத் தினடுபச்சை பவழத் தினொடுமுத்து
மருவிக் கோமேதகத்தி னிடைபுஷ்பராகமிட்டு [யமோடு
மகிழப் பெருமாணிக்க வளைவிட் டநீலமொய்த்த—வைடூரி

மகுடத் தில்நவரத்ன மிலகச் சிரசில்இட்டு
மகிழ்ற் றபிரசன்னத்து வதனத் தினழகிற்கொள் [நாதா
வடிவைக் கண்டடிபற்றி யடிமைப் படுவதெப்போ—கண

உயிர்பற் றிநிலைநிற்கக் கடமெத் தகைவிளக்கும்
உடல்பற் றியுயிர்நிற்கும் விகமெப் படிநடக்கும்
உணவற் றமனதிற்கு வெதுசப் யமெதுநித்ய—மறியேனே

உலகத் தினெறிபற்று மலசத் திகள்மறைந்து
உருவத் திலாவற்ற மசனனத் திலீடுபட்டு [குறையேநோ
உருகிக் கண்ணீர்வடித்துச் சிறுமைப் படவும்விட்ட—

தயிருக் குளெழுவெண்ணெய் வுறியிற் றிருடியுண்ட
சகளக் கோபாலகிருஷ்ண வரிபக் தரொனுநித்ய
தருமக் கொடிபறக்க அடிமைக் கருள்செய்விந்த—குருநாதா

சகுணக் கிரியைபற்றி மனதைத் துளிவுறுத்தித்
தனிமைப் படவிரக்தி யடையக் கிருபைசித்தி [வீடே
சகசப் படநிறுத்தி யருணிற்குணமேமுத்தி—யெனும்

கெய்சர் செர்மனிப்பட்ட மெய்யாய்ப் பனிரெண்டாண்டு
கெடிவைத் துறுதிபற்றும் நிரூப மெத்தனைகோடி
கீழ்நா டீக்காரர்கள் தெள்ளிய வரசாட்சி—யருளோடும்

கெர்வித் தசுராசுத்தம் படவெட் டிக்கொடிகட்டிக்
கிளைசெப் புமமரர்க்கு முனிசித் தரிஷிகட்குங்
கிருபைக் கண்ணொளிபற்றி யமரர்க் குச்சிறைமீட்கும்—
பெருமானே. 83.

தனன தனதனன தனன தனதனன
தானத் தத்த தனதன தந்தன
தனன தனதனன தனன தனதனன
தானத் தத்த தனதன தந்தன
தனன தனதனன தனன தனதனன
தானத் தத்த தனதன தந்தன—தனநாண

20. கதிரவ னொளிபெறும் மணிமகு டாதிகள்
காணக் கண்க ளனேக தவம்புரி
கனக சபையிலக நடன மிடுந்திரு
காலிற் பூட்டு சிலம்பு கலீரிடக்
கருமுகி லிணைகுழ லசையு மதிவதனி
காளிகங் காளித்திரி சூலியோ டாடிய—மறைபராய்

கருவி கரணாதிகள் சலனமி லாதிரு
காரண சற்குரு பாதங் கதியெனுங்
கலைகள் சரசமொடு சுழிமுனை யேகிடுங்
காலம றிந்துதே வாமிர்த முண்டு
கனவில் மெழுகெனவு முருகி மௌனநிலை
கண்டிட குந்திட மொன்றேற யருணிலை—யெனநாடு

பதிபசு பாசலக் கணமறி வோர்மல
பாசந நோடற வாடி மருந்திடல்
பருவ மிதுசகச நிலையெனு முணர்வது
பத்திப் பந்தி மறந்து வெறுத்திடு
பழகுமும் மலப்பகை விலகிநிர் மலமயிர்ப்
பால மேறிநெருப் பாறது கடந்திடத்—துணிவாயே

புகலி ரவுமடியர் பணிகொளு மிருவினைப்
பாசம் போக்கி நிராசை பெருக்கிடும்
பலகலை பருகிடு கனிரச மொழிகிடும்
பாக முறைக்கெந் நாவது கிட்டாப்
பவமது விலகிடு மறைமொழி யனுபவம்
பார்த்துத் தேங்கி யழுது தொழுதிடிற்—கனிவாகும்

சுதிகொள் மத்தள முரசதிர வீணைபல
சுத்தி மிர்தங்க முழங்கிப் பாவலர்
சுரர்கள் விருதுகொடி பலதிசை பரவிடச்
சூர மாயுத வீரர் நெருங்கித்
துரித மானபரி கரிதேர் படைரதஞ்
சூழ வுலகில்மறை நீதி செலுத்திடும்—அரசாமே

சுடரெழு சுகாதி முனிவ ரிஷிகள்தனித்
தூல சூக்குமங் காரண மூன்றுடல்
துவித பாவனைகள் மமதை யகந்தைகள்
சுட்டிச் சுட்டி யானென தென்பதைத்
துணிவுறும் வாள்கொண் டறுத்து ஞானிகள்
சோதித் தெழுநிலை மாடமி தேறுவர்—சுயமாக

மதியோ டிரவி கலந்துற வாடிட
வாசி வசப்பட் டேறியொ டுங்கிடும்
மனமே மாசறு திங்கள் கங்கைசடை
வைத்தென் னுள்ளங் கவர்ந்த வரனுமை
மரகத வடிவினள் கனக சபைநடுவில்
மாறி மாறியெதிர்த் தாடிடும் ரகசிய—மிதுதானே

மடமை யிருள்வடிவ மகல முடிவுபெறும்
வானத் தேகதிர் கோடிகள் வீசிடும்
மறைகள் பகருமனு பவநிலை சதிபெற
வாய்க்கு மனோவாக் கின்பம் விளைத்திடும்
மௌன மலரிணையி னருகி லுறையும்வழி
மார்க்கங் கண்டு துறப்பது வீடென—வறிவாயே.84.

தனனதான தானன தனனதான தானன
தனனதான தானன—தனதான

21. வினைகளோடு போராடி மனதிலாடு மாமாயை
விதிகள்யாவு மோராம—லிடையூறும்
விரகராக மோகாதி நினைவிடாது சேருடி
வெறியனாகி நாடோறு—முழல்வேனை

சனகராதி மேலான பதியிலோர்மை யாய்மோன
சபையிலேறி யேஞான—நிலையானோர்
தபசினோர்மை யாகாய வெளியில்வாசி வேல்கூர்மை
நுனையின்மீது ரூபார—வடிவாகி
கனகமேரு தூணோடு வளையநாணி சேடாதி
கருணைமூல பாணுதி—விடுவோனை
கலியில்நிதி சிநோடு தொலையநீத மோவேறு
கதியிலாது மேலோர்கள்—பெறும்வாறென்
றுனைவிடாது வாதாடு மடிமைநாலம் வீணுகி
வுறவுகூடி வாழாது—தவிர்வேனோ
உருகிவாடி யேபால னிடைவிடாதுன் வீடேக
உலகபாசம் வேரோடு—களைவீரே. 85.

தனன தனந்தன தானு தந்தன
தனன தனந்தன தானு தந்தன
தனன தனந்தன தான தந்தன—தனதானு

22. அருவ மெனும்பொரு ளாதா ரங்களும்
அடிமுடி நடுவோ டாதே யங்களும்
அளவு கடந்துனை யார்தான் காண்பர்க—ளரிதாமே
அடிமையும் விண்டுசொ லாதே நாணிட
அறிவது பொங்கி மெய்ஞ்ஞா னந்தனை
அடைய விரும்பிய தேநெறி நின்றதுன்—னருளாகும்
சிறுதுளி யும்பனி நீர்போ லேயணு
வளவு கலந்திட மாபூ தம்பொறி
திடபுல னுய்பர மாகா யந்தனி—லுருவாகிந்
திரிகர ணங்களும் வாதா டும்படி
பிரவெனும் நம்பியோர் மாதா வும்பெறச
செகமதி லும்பலர் சீசீ யென்றிடு—குறைவேதோ
திருவடி தந்தருள் யாவா மென்றுனை
வலமது வந்திடு வோமோ சந்ததந்
தெளிவு பொருந்தியெவ் வசைவு மென்றிட—லறியேனே

திடமது கொண்டெங் நாடோ றும்பணி
செயுமொழி யென்கலி தீரா தோசொலுஞ்
செனன மறும்படி தேவா நின்கழல்—தருவீரே
கிருபை யெனுங் கடல் நீரா டவுருட
கருணை புரிந்தெனைக் கூடா யோபர
கெதிபெற விண்டெனல் வேதா சாரமு—மறைவானேன்
கிரியை சரியையெனும் யோகாம் சங்களின்
கிளைகள் பெருகிவளர் பூகாய் பண்டுகள்
கிளைஞர் முனிவரிஷி தேடி யுண்டகற்—கனிதானே. 86.

தானதன தானதன தானதன தானதன
தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தானதன தானதன தானதன தானதன
தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தானதன தானதன தானதன தானதன
தத்ததன தத்ததன தத்ததன தத்ததன—தனதானு

23. ஆதி திரு நான்மறைக ளோதுமுடி வானபொருள்
அத்துவித முத்திபெறு தத்வமசி யென்றுணர்வர்
ஆகமபு ராணகலை ஞானநெறி யேவும்வழி
யற்பமல சிற்சபைத னிற்புகுவ தானத்து
நீயுமது வானபெரு வீதியது ளச்சமொடு [கும்
உச்சிநிலை நிற்சலன முற்றுவிடி லத்துவித—வுண்மையா
ஆவலுட னேதுகுரு தேடிவுற வாடுமல
மற்றவிடம் நித்யமெனு முறறுணரு வாயுருகி
ஆவிபொருள் காயமொடு தானமேகை மாறெனவு
மத்தனடியைத்தொழுது தத்தமிடு வாயுதக
மாருதல் மூடுருவி யேறுதனி மாடமதி [தானே
லப்பனொடு நிர்த்தமிடு சத்தியுமை பொற்பிடமு—மிது
பேதமறு ஞானிகள் குழாமறியும் வேதபொருள்
பெத்தநிலை நிற்பவர்கள் கற்றுமுணரா தவர்கள்
பேசரிய ஞானநிலை பேசமுடி யாமெளனப்
பெட்டகம் நிறைந்தமணி சுத்தநின்ம லத்துரிய

பேதமோ டபேதமரு சாதனமெ லாமொழிகிப்
பெற்றவர்க ளுத்தமர்க ளிப்பிறவி தப்பும்வகை—யறிவாயே
பேதமகல் வாயரிய சாதனமே லாம்புரிய
பித்துமன மேயிருவி னைக்குமூல மேசிறிதும்
பேசவறி யாமலச ரீரமெடுத் தேயுயிர்கள்
பெற்றகதி முற்பிறவி யிற்செய்பவ மிச்செனனம்
பேயுலக மீதுறவை நீவிடுவை யேலுயர்வு [—விரைவாக
பொற்றிடுவை மெய்பொரு ளருட்கனி பழுத்தொழுகும்
சாதிமத மார்சமய மாதிசைவ மாகவெகு
சத்திகளும் வெற்றிபெறச் சத்துரு செயக்கொடியுந்
தாவுபரி யானைரதம் வானுலக ளாவிவரச்
சப்தரிஷி ரத்தனமிழை பொற்சிவிகை நிர்த்தமிடத்
தாசர்களு மேலுலக வாசிகளும் வேகமொடு
சக்கர நெறிப்படிய றந்நினை வளர்க்கவரு—மரசாமே
தாணுவொடு சாதுதவ யோகிகளும் ராசரிஷி
தத்துவம் விளக்குசிவ தத்வரகஸ் யப்படைகள்
தாலமுழு தாசைபடு போர்நடன மாடுவது
சத்தியம் நிலைப்படவும் நித்யகர்ம முட்கொளவுந்
தாடசுரர் வேர்களைய மூவுலக மோர்குடைகள் [வாமே
தற்பரன் விதிப்படி செலுத்தும்விரு துக்கொடிக—ளிது
சூதுகலி காலநிலை மாறுநிலை யாயிரத்துத்
துட்டசன நிக்கிரக சிட்டபரி பாலனமுஞ்
சோதிமக மேருகிரி சாகரமெ லாமதிரத்
துற்கபட சித்தர்களை சித்ரவதை முற்புரியச்
சோதனைசெய் தேமுனிவர் கோசரம கோசரமாய்ச்[வாரே
சொற்பன சுழித்திநிலை தத்துவம் வெளிப்படுவ—துணர்
தோகைமட பாதர்மயல் மீதுலாது வோர்செயல்கள்
சுத்தமோ நத்தியிடை துக்கவலை சிக்கியெழு
சோர்வுகடல் மேலலைக ளோடுதுரும் பாடிவரு
துர்ச்சடை விலக்குபிற விக்கடல் தொலைக்குமிது
சோகமுமப் பாவனைவி டாதுணரு வார்வினைத்[வாயே.87
துச்சமொழி சிற்கனக வெட்டவெளி யைக்கியநிலை—பெரு

உ

ஸ்ரீமத் இரெட்டியபட்டி சுவாமிகள் துணை.

இரெட்டியபட்டி சுவாமிகளின்

அடியார்கள் பாடிய

தோத்திரப்பாக்கள்

ஆசிரிய விருத்தம்

ஆரணப் பொருளைத் தானு மறிந்திட வொருவ னாகிக்
காரண சொரூபங் காட்டிக் காசினி யடியார் தம்மைப்
பூரண வடிவ மாக்கிப் பொய்யெலாம் நீக்கியாள
வாரண ரெட்டி பட்டி வள்ளலைப் பணிகுவோமே. 1

முதுகுளத்தூர்ப்புலவர் சுபகிருது௵ பாடியது.

ஆசிரிய விருத்தங்கள்.

1. நிதிபெருகும் பதியில்வளர்ந் தோங்கும் நாதா
நீணிலத்து மாந்தர்களைய் நீக்கி யெங்குந்
துதிசெய்பவ ரிருதயத்தில் வாழுங் கோவே
சுந்தரமந் திரமணியே அருளைக் காட்டும்
மதியேசெந் தேனேயென் னிருள கற்ற
வல்லாயெம் பெருமானே மயக்கந் தீர்த்துன்
கெதிபெறவே யருள்புரிய வந்து தித்தாய்
கீர்த்தியுள்ள ரெட்டிபட்டிக் கிருபை யானே. 2.

2. இரெட்டிப்பட்டி சாமியென நாமம் பூண்டே
யிருள்டைந்தார் தமைக்காக்க வந்து தித்தாய்
சுட்டிநீ யுன்னருளை யுலக மெங்குந்
துலங்கவைத்தாய் மெய்யன்பர் தனக்குக் காட்சி
கெட்டியாய்க் கிட்டவென்று கொடியும் நாட்டிக்
கிண்கிணியு மார்ப்பரிக்க நடனஞ் செய்யும்
இட்டகுல தேவதையும் நீயே யாகும்
என்குருவே ரெட்டிபட்டிக் கிருபை யானே. 3.

3. சரியைகிரி யாயோக பதங்கள் ஞானம்
தனைக்கடந்த மெய்ப்பொருளை நவத்தி லுள்ளோர்
அறிவுபெற வந்துதித்த வமரர் நாதா
வற்புதமே கற்பகமே யகண்டத் தைப்பார்
துரியதுரி யாதீதச் சுடரா யெங்குஞ்
சுத்தபரி பூரணமாய் நிறைந்து நிற்கும்
நெறியேநிற் குணமேநிஷ் களங்க மான
நித்தியமே ரெட்டிபட்டிக் கிருபை யானே. 4

செங்கோட்டை, சுப்பிரமணியம் பிள்ளை பாடியது.

பதிகம்.

1. காதல்கொண்ட பதார்த்தங்கள் பணிகள் நேமி
கனகமுயர் மாடங்கள் மனைவி மக்கள்
நீதிநெறி பத்திசித்தி யனம்பால் நெய்யும்
நீங்காத வித்தைபுத்தி திடங்கள் போத
சாதனங்கள் தத்துவங்கள் ஞான மோனம்
தந்தருள்வான் சாதிபுன்னை தெங்கு சூழும்
பாதலத்தி லுயர்ரெட்டி பட்டி சுவாமி
பாதகம லம்மிரண்டும் பணிகின் றோர்க்கே. 5.

2. சிதம்பரத்தி லுடல்பல கோடி யென்று
செப்புகின்ற செகத்தோரே கண்ணுற் காணீர்
சதம்பத்து கோடிவித லீலை காட்டத்
தரணிதனி லவதரித்தா னவனு ரென்னில்
பதகநோய் களைப்போக்கி யருளைக் காட்டப்
பரன்சைவ குலமரபி லருள வந்தான்
உதகநிறை தடங்கள்மா டங்கள் சூழ்ந்த
வுயர்ரெட்டி பட்டிநகர்ச் சுவாமி தானே. 6.

3. சாமிகுகன் கணேசனைய னிவனே யாகுஞ்
சங்குவர மிருத்ர னிவனே யாகும்
வாமிமகேசு வரிமணாதா னிவனே யாகும்
வரைமகளொபா கசிவ னுமிவனே யாகும்

ஓமிமுதற் ககனம்வரை யிவனே யாகும்
நீணிலத்து மாந்தர்கள்நோய் நீக்கி யாளும்
தாமிவனே ரெட்டிபட்டி நாதன் தன்னைச்
சர்வக்ஞ னெனத்துதிப்பீர் தரணி யோரே. 7.

வேறு

4. தூநித்துநிதம் போற்றினவர்த் தொடர்பவத்தை முடிக்கும்
சுதந்திரமாம் மனைவிமக்கள் தனம்நிலங்கள் கொடுக்கும்
முதிர்த்துவரும் வாதபித்த மைபமுதல் தடுக்கும்
மோகனவ சியமுதலட் டசித்தி கொடுக்குங்
கொதித்தமனத் தரைநிறுத்துங் குணரசத்தை யருத்தும்
கோபியர்வஞ் சகரைநற்கு ணம்பெருகத் திருத்தும்
விதித்தவிதி யினைமாற்றும் வேதாந்த நாத
வீரனெனும் ரெட்டிபட்டி சுவாமிவிம லோனே. 8.

5. கொல்லாத விரதங்கள் கொடுக்குமது கடலே
கொடுநரகத் தோரேறக் கொன்றுசுகத் திடலே
கல்லாலி னல்வருக்குக் கருணைசெய்த திறமே
கண்ணப்பன் பூசனைக்குக் கருத்துகந்த பரமே
வல்லாள ராசனுக்கு மகனான சுதனே
மாநார தன்னிசைக்கு மகிழ்கொளுமிங் கிதனே
எல்லாமா யெவ்வுயிர்க்கு மிரங்குமருட் டேனே
இரெட்டிபட்டி நகரில்வள ரெந்தைபெரு மானே. 9.

6. சிந்துரமா முகத்துடைய தேவனெனுந் தேவே
தெவிட்டாத வுணவளிக்குந் தேவருல காவே
சந்ததமெல் லாம்வல்ல சித்தனெனுங் குருவே
சகலவுயிர் சுகமுறவே சடமெடுத்த வுருவே
சுந்தரமந் திரமணியே சுவர்னவரைப் பெட்டி
துதிப்பவர்க ளுரைக்கின்ற சுகமதுரக் கட்டி
ஏந்தனுளத் தெண்ணப்படிக் கேயருளல் வேண்டும்
ஏரிசூழ் ரெட்டிபட்டி நகரினுறை வோனே. 10.

வேறு

7. நற்கமலக் கழற்சிரத்தை நான்முகனும்
நாரணனுங் காணு ரென்றால்

பொற்கமலப் பதமுகத்தை யாரறிவார்
போதமுளார் பொலிந்து காண்பார்
துற்கமலச் சடம்பிளக்கத் துவாதசாந்
தத்தமிர்தஞ் சுரக்கச் செய்வாய்
கற்கமலப் பிரகாசன் கமழ்வீசும்
ரெட்டிபட்டிக் கருணை யானே. 11.

8. நிம்பத்தா ரணிகின்ற நின்றசீர்
நெடுமாறன் றனக்கு ஞான
சமபந்தர் சுரத்திணைய் தவிர்த்தாரே
தமிழ்மறையைச் சாற்றி யந்நாள்
அன்பந்த லீலைதனை யாரறிவா
ரகிலமதில் நம்மோர் காணத்
துன்பந்த நோய்நீக்கச் சுகரெட்டி
பட்டிநகர்ச் சுதன்வந் தானே. 12.

வேறு

9. வந்தவன்றன் சிரத்தில்மதி முதலாய் காணோம்
மான்மழுவுஞ் சூலமுதற் கரத்திற் காணோம்
கந்தகணை சன்னவன்ற ன்றுகிற் காணோம்
கமலபத வுமையுமிடப் புறத்திற் காணோம்
சந்ததமும் டணிப்புலியும் பாம்புங் காணோம்
சர்வநோய் நீர்க்கவிவ னலாமோ வென்றால்
மந்திரதந் திரநோய்கள் நீர்க்குங் கர்த்தன்
மகிழ்ரெட்டி பட்டிநகர் வரதன் றானே. 13.

10. மதியாத்தி கொன்றைமத்த முதற்சி ரத்தும்
மான்மழுசூ லம்டக்கை முதற்க ரத்தும்
பதிவிநா யககந்த னிருபு யத்தும்
பதுமமலர்ப் பதவுமையா ளிடப்பு றத்துந்
துதிபுலியும் பாம்புமுகப் புறத்து மாகச்
சுகரெட்டி பட்டிநகர்ச் சுவாமி யென்போன்
அதிமதுர வடியாருட் டொன்றுந் தோன்றும்
அவர்க்கன்றி யவனிதனி லறியொ ணாதே. 14.

11. ஆமைபோ லைந்துறுப்பு மடக்கி வந்த
ஆதிசெட்டி பட்டிநகர் நாதன் றன்னை
மாமறைக ளோயுள்ள மனித ரெல்லாம்
மனங்குவிந்து போற்றறியார் கெர்வங் கொள்வார்
தீமைபவத் தைக்கெடுத்தே யாளு தற்குத்
தேகிவடி வாயிருக்கும் பரம னானை
தூய்மைநிலைத் தேசிகன்றன் கமலம் போன்ற
துணைப்பதத்தி னருகிருந்து துதிகொண் டோமே. 15.

பிலவஹு, ஈராச்சி பார்வதிநாதம் பிள்ளை பாடியது.

பல்லவி

வேடிக்கை பாராய்—ஐயன் திருவிளை—யாட்டை நேராய்

அனுபல்லவி

தேடு மடியவர்கள் தெரிசித் தருள்சுரக்க
நாடும் செட்டியபட்டி நாத ரவதரித்த (வேடிக்கை)

சரணம்

1. தேவாதி தேவன் சகலவினை தீர்க்குமுதாரன்
பாவாணர் போற்று மற்புதகுண பரமதயாளன்
நாவி னுதிக்குமந்ரம் நலமென்று துதிப்போர்க்குப்
பாவ வினைகளெல்லாம் பறந்தோடிப் போகுதென்ற (வேடிக்)
2. தேசாதி தேசமெங்கும் நிறைந்து திசைகட்டியாளக்
காசினி யோர்கள்கொண் டாடிடுங் கருணையேயுருவாய்த்
தேசிக னாகவீசன் றிருந்த வடிவெடுத்து
நேசமு டன்பரி சோதனைகள் செய்திட்ட (வேடிக்கை)
3. அனுதினம் நீராடி யையன் கணேசனைத்தொழுது
தினந்தின மூன்றுபிர தட்சணஞ்செய்து முடித்துக்
கனம்பெறு சுக்கிரவாரங் கனிவாய் விரதமென்று
தினமும்வெந் நீர்மருந்து சேர்க்கக்கூ டாதென்ற (வேடிக்கை)
4. தெய்வங்கள் தனக்குமுன் பிரார்த்தனை செய்தோர்கடனை
உய்யவே முடித்தினிமேல் நேர்ச்சியொன் றுமேவேண்டாம்
மெய்யான தெய்வத்தை விரும்பித்திரு நீறிட்டால்
வையகத் தோர்வினை மாய்ந்துமே போகுமென்ற (வேடிக்கை)

5. நேரான தெய்வம்ரெட்டி பட்டிசுவாமி யின்நாமம்
பாராதி யெங்குந்துதித் திடப்பகை வரைவெல்லும்
தீராத வல்வினை தீர்த்துக் கலியகற்றக்
காரானை மாமுகக் கணபதி யாகவந்த (வேடிக்கை)

6. நிர்த்தனம் புரியுஞ்சிவ காமிநே சனுமிவனே
பற்பல காலமவ தரித்தபர மனுமிவனே
கர்த்தன் பரசமயக் கடவுளு மொன்றாகிச்
சத்திக ளொடுங்கூடித் தரணியை யாளவந்த (வேடிக்கை)

7. சோதனை செய்துட்டரை வெல்லத் துடிக்காகவந்த
நாதன்பேர் சொல்லுலக மெங்குமிநன் மையுண்டாகும்
நீதி தவறும்பேரை நிர்த்தூளி செய்யவே
பூத கணங்களோடு புனிதமா கவேவந்த (வேடிக்கை)

8. ஆராலுங் கூடணிச்ச யங்களை யறியவொண்ணு
வீராதி வீரனன்பரைக் காக்கும் மிகுந்தகுணாளன்
சூராதி சூரனைத் துதிக்கு மடியார்வினை
நீறாக்கிச் சாயுச்ச நிலையைக் கொடுக்கவந்த. (வேடிக்கை) 16.

அடியாரோருவர் பாடியது.

அடைக்கலப் பஞ்சகம்.

1. ஆதிமுத லெட்டெழுத்தும் நீயாய் வந்தாய்
அரும்பொருளாய் வந்துதித்தாய் ரெட்டி பட்டி
சோதனையாய்ச் சோழன்மா ளிகையிற் சென்று
துட்டர்களைச் சம்மாரஞ் செய்ய வந்தாய்
வேதனைப்பட் டவர்களுன்ற னுமஞ் சொன்னால்
வேண்டியவ ரங்களெல்லா மவர்க்கே யீவாய்
வீதியெல்லா முன்னுமந் துதிக்க வென்று
விடைகொடுத்தாய் கும்பகோ ணத்திற் சென்றே. 17.

2. திரும்புமையா தெட்சணமே பார்க்கத் தானே
திகபரமாய் வந்துதித்த வமரர் நாதா
விரும்புமையா அடியார்க்கு வரங்கொ டுக்க
வேதாந்த மெய்ப்பொருளே விமலா சாமி
கரும்புபோ லுனைத்தேடி யெளியோ ரெல்லாங்
காத்திருக்கா ருன்னுடைய வருளைக் காண

எரும்புகடை யானைதலை யாமு யிர்க்கும்
இகபரமாய் வந்துநின்றே யிரட்சிப் பாயே. 18.

3. இப்போதே யிதுசமயம் வரவே வேண்டும்
என்னுடைய விடைஞ்சல்களைத் தீர்க்க வேண்டும்
ஒப்புடனே யுன்னைநான் காண வேண்டும்
உன்பாதந் துதித்துநின்று வணங்க வேண்டும்
எப்போது முனைத்துதிப்பா ருலகத் தோர்கள்
ஏழையடி யார்க்கிரங்கி வாவா சாமி
அப்பனே ரெட்டிபட்டி யுதித்த சாமி
அன்புடனே யென்னைவந் திரட்சிப் பாயே. 19.

4 இப்போதே யிந்தமுகந் திரும்பி வாவா
எளியேனைக் காத்திரட் சிக்க வாவா
எப்போது முனைமறவேன் குறைக ளில்லை
யேகபர மாய்வந்த கருணை மூர்த்தி
செப்புமையா வாய்திறந்தே யடியேன் முன்னே
செய்தகுற்ற மின்னதென வறிகி லேனே
அப்பனே ரெட்டிபட்டி யுதித்த சாமி
அன்புடனே யென்னைவந் திரட்சிப் பாயே. 20.

5. கார்வண்ண மேனியனும் நீர்தா னாகும்
கடம்பவன நாதனுமே நீர்தா னாகும்
ஏர்வண்ண மாகவந்து லோக மெல்லாம்
இறையவனாய் வந்துவிளை யாட வந்தாய்
பார்வண்ண மாகப்பரஞ் சோதி யாயும்
பார்த்தவர்க்குக் கலியுகத்து மெய்யு மாயும்
சீர்வண்ண மாய்வந்த ரெட்டி பட்டிச்
சிதம்பரம்போல் பாடுதற்கு வகைசொல் வாயே. 21.

ஊத்துப்பட்டி, சங்கரபாண்டியன் அவர்கள் பாடியவை.

1. திங்கள்தா தகிதும்பை யென்பணியு மெம்பிரான்
சீதரன் முகுந்தன்வேதன்
சித்தங் கனிந்துநல் முப்பத்து முக்கோடி
தேவர்கள் ரிஷிகளோடுந்

துங்கமா யுலகத்தி லவதரித் தெப்பரி
சோதனைகள் செய்து நன்றாயச
சொரூபமது மாறியும் பலவேட மாகியுந்
துட்டரைக் கண்டுதட்டிப்
புங்கமுப ரட்டகா ளிகளொட்டும் நடனம்
புரிந்திடச் சங்கரித்துப்
புனிதமா யன்பரை யிரட்சிக்க வின்பமாய்ப்
புவிபுரந் திடவந்தவா
பங்கயந் திருவதன ரெட்டிபட் டிசாமி
பத்தருப காரி யேபொற்
பாதா வெனக்குனருள் தாதாவி னோதாநன்
னீதா பரஞ்சோதியே. 22.

2. சுவர்னமய மானசிவ சோதியே மெய்ஞ்ஞான
சொரூபியே சுடர்விளக்கே
துய்யனே மென்மலர்க் கையனே நலபரி
சுத்தனே கற்பதருவே
அவனிதனி லுதித்தடிய வர்களிடர் தவிர்த்தாளு
மையனே யானைடைக்கலம்
அம்புயத் திருமலர்கள் தந்துநெறி சனமுகந்
தருள்செயவித் தென்னிருநயக்
கவலையுந் தீர்த்துவெகு சுபசேம லாபமுங்
கனயோக முங்கொடுத்துக்
காப்பதும் நின்கடமை யாதலா லிதயங்
கனிந்துகலி யாவுமகன்றெய்
பவமுழுதும் நீக்கியாள் ரெட்டிபட்டி சாமி
பத்தருப காரியேபொற்
பாதா வெனக்குனருள் தாதாவி னோதாநன்
னீதா பரஞ்சோதியே. 23.

3. கர்த்தனே ஞானபரி சுத்தனே செம்பொனே
கடவுளே யெந்தனிதயக்
கமாலா சனத்தில்வளர் நிமலா விசேடமிகு
கையா சிறந்தமெய்யா

நுத்திய மிகுந்தசுக வாரியே பகைவெல்லுஞ்
சூரியே மற்றுயர்ந்த
துங்கமா சற்றசுய தங்கமா மேருவே
தூயகற் பகதாருவே
முத்தே யெழிறசுருதி வித்தே மனத்துயர்
முழுதுந் தவிர்த்து நன்றாய
முக்கியமாய் நின்னுமை சங்கீர்த் தனஞ்செய்ப
முன்னமுந் தினம்வணங்கும்
பத்தியுஞ் சுபமுமருள் ரெட்டிபட் டிசாமி
பத்தருப காரியேபொற்
பாதா யெனக்குனருள் தாதாவி னேதாநன்
னீதா பரஞ்சோதியே. 24

4. நெடியவரை துளபமா லிகையணியு மாதவன்
நேர்த்தியுய ராத்திருடும்
நிமலனய னிவர்மூவ ரோருருவமாகியும்
நீணிலத் தவதரித்தே
அடிபணியு மடியவர்க ளிடர்கலி யகற்றியும்
அலகையெண் படைகளோடும்
அட்டகா ளிகளெட்டும் நடனம் புரிந்திட
வாதாளி யிட்டெழுந்து
கொடியதுட் டரையுமொரு நொடியில்வே லாயுதங்
கூர்மைமிகு சூலாயுதங்
கொண்டுகுத் தியும்வெறறி வாளினுல் வெட்டியுங்
கொன்றுமகு டமுமணிந்து
படிபுரந் திடவந்த ரெட்டிபட் டிசாமி
பத்தருப காரியேபொற்
பாதா யெனக்குனருள் தாதாவி னேதாநன்
னீதா பரஞ்சோதியே. 25.

வேறு

5. சத்தியந் தவறு மாந்தர் தன்னைரட் சிக்குந் தெய்வம்
குற்றமில் லாத வெங்கள் குருரெட்டி பட்டி சுவாமி

வித்தகப் பதம்ப ணிந்து விநாயகர் கோவில் தன்னை
நித்தமும் வலம்வந் தோர்கள் நீடூழி வாழ்வர் தாமே. 26.

6. ஓடிடும் பில்லி சூன்ய மொருதலை மண்டைக் குத்து
வாடிடும் வயிற்று நோயும் மாரகங் குன்மம் யாவும்
நாடிநின் பதியைச் சார்ந்துன் நாமமே பசனை செய்யக்
கூடினோர் வறுமை தீர்க்குங் குருரெட்டி பட்டி சுவாமி. 27.

7. தினந்தினம் ரெட்டி பட்டி தெய்வத்தை மனதி லெண்ணி
மனங்களி கூர்ந்தே தவுற்று மாநகர் தன்னிற் சென்று
கனம்பெறு சுக்ர வாரக் கற்பூர தீபங் கண்ட
சனங்களின் கணங்கள் பீடை சகலமுந் தவிருந் தானே. 28.

8. சகலபீ டைகளும் போகச் சந்ததி மிகவுண் டாகப்
பகலிருள் பருதி காணப் பறந்திடு மாறுபோல
இகலதுற் சனர்கள் நெஞ்ச மீடழித் திடுவ னென்றே
மகமகன் பிதாவின் தேவி வாலையம் பிகைசொன் னளே. 29.

9. குருவரு ளாலே யிந்தக் குவலய மனுக்க ளெல்லாம்
வருவதுன் னிடத்திற் சுக்ர வாரங்கள் தனிலென் கையாற்
பெறுவதுந் திருநீற் றன்பாற் பெற்றபேர் பிணிகள் யாவும்
வெருவிய பேய்க ளெல்லாம் விடுவிடென் றோடுந் தானே. 30.

10. வாழ்வெலாம் பெருகு மூற்று மாநகர் தனிலெந் நாளுந்
தாழ்விலாச் சங்கர பாண்டியன் தயாநிதி தன்சிந் தெங்குங்
கேள்வியா லுலக மெல்லாங் கிளத்துக ணேசன் கோயில்
கோளிலா ரெட்டி பட்டிக் குருகடாட் சமும்பெற் றனே. 31.

வேறு.

11. தந்திச் சமய மறிந்தென்னைத் தற்காத் திடுவாய் ரெட்டிபட்டி
முந்திக் கருணை நிதியான மூலப் பொருளே யூற்றுநகர்
சித்திரப் படத்தி லெழுந்தருளுந் தேவா நின்தாளர்ச்சனைப்பூப்
பத்திரக் குடலை யெடுக்காதார் பாழுங் குடலை யெடுத்தாரே.
32.

அடியாரொருவர் பாடியது.

பல்லவி

வேடிக்கை பாராய்—ஐயன் திருவிளை—யாட்டைக் கேளாய்.

அனுபல்லவி

தாடிதலை வளர்த்து சந்நியாசி ரூபங்கொண்டு
பாடிப் பாவனையுடன் பக்தரைச் சோதிக்கவந்த (வேடிக்கை)

சரணம்

1. கோமான் குலத்துதித்துக் குருவென் றவதரித்து
நாமம் ரெட்டிபட்டி சாமியென் றோதுகின்ற (வேடிக்கை)

1 ஓது முபதேசத்தா லுண்மையே தோணுமென்று
நீத மென்றுணர்ந்து நிச்சயப் படுத்துகின்ற (வேடிக்கை)

3. நீதி நெறிகள்யாவும் நெருங்கியே வருமென்று
ஆதி வினைகளெல்லா மழிவது திண்ணமென்ற (வேடிக்கை)33

அடியாரொருவர் பாடியது.

பல்லவி

பூலோக கயிலாசன்—ரெட்டிமாநகர்
புரந்திடு மருள் நேசன்

அனுபல்லவி

நீல் கண்டதிரு நேத்திர னெனுஞ்சிவ
கோலங் கொண்டமத யானை யெனவுதித்த (பூலோக)

சரணம்

1. மந்திர குருநாதன்—உலகமெங்கும்—வளரவந் திடுநீதன்
தந்திர முளயோகன்-சைவகுலத்தில்-தயவுட னவதரித்தோன்
கந்தக் கடம்பனென்றும் கார்வண்ண மேனியனென்றும்
முந்த வுதித்தோனென்றும் மூலக் கடவுளென்றும் (பூலோக)

2. அன்பரைக் காக்கும்வீரன்—துதிப்பவரு—ளானந்தமுள்ளதீரன்
இன்பங் கொடுக்குமாரன்—அடியவரை—யீடேற்ற வல்லசூரன்
துன்பங்கள் யாவையுந் தொலைக்க வல்லநிபுணன்
வன்பரை யொழித்திட வந்த பரசமயன் (பூலோக)

3. பற்பல வவதாரம்—முன்செய்ததொரு—பரப்பிர்மமு மிவனே
சொர்க்காதி புவனமெங்கும்—நிறைந்திருக்கும்—சூட்சாதி சூட்ச [மிவனே
துற்சங்கம் யாவையுந் தொலைத்துக் கலியுகத்தில்
வெற்றிபுரிந் தாளவந்த வீரபோக னுமிவனே (பூலோக) 34.

திருத்துறைப் பூண்டி.

வேலூர் T. G. கலியபெருமாள் பிள்ளை பாடியவை.

பதிகம்.

உந்தமது பேர்சொலிக் கையிலேவெண் ணீறெடுத் தோங்கார ரீங்காரமே
உவ்வுரிவ் வுஞ்சௌவு மையும்ரெட் டியபட்டி யுருவேற்றி மேற்றெளிந்தா
லந்தங் குலைந்துமட மாதர்கரு வைக்கெடுத் தகலாத பேய்முனிகளை
யடித்துச் சவுக்கிறுற் கைச்சாட்டை யால்வளைத் தாட்டிவாய் விட்ட லறவே
வெந்தழற் கொண்டெரித் தோட்டிவிடு செயசிங்க வீரப்ர தாபமூர்க்க
மிகுபுய பராக்ரகெம் பீரகய தந்திர விநோதசா மர்த்யவைய
மந்திரவி லட்சண சுலட்சண விலாசனே வளரெட்டி பட்டிதன்னில்[மே,
மதிமந்திரி யெனரத்ன மணிமேடை யதிலுற்று வாழுமென் குருரெத்ன

வட்டவா ரிதியுலகி னல்லரிய மங்களொடு மலர்கொண்டு பூசித்துனை
மறவாம லருமைகுரு சிங்கமே யென்றுனை மதிக்கின்ற மனிதர்மீது
ஒட்டியஞ் சல்லியங் கருமான மந்திரமோ டொடிபில்லி விடுமடையரை
ஊட்டியை யரிந்துதிறம் வீட்டியு முறிஞ்சுசீன் னுதிரவாய் சேருடவே
கட்டுக் கடங்காத இட்டகுல காலனே கண்சாடை யாயிராமற்
கடிகடி பிடிபிடி யடியடி கொல்லுகொல் கட்டுகட் டுயிர்போக்கிடு
மட்டுமித மில்லாத இட்டகுல தெய்வமே வளரெட்டி பட்டிதன்னில்
மதிமந்திரி யெனரத்ன மணிமேடை யதிலுற்று வாழுமென் குருரெத்னமே.

எந்தமக் கெதிர்நின்று தர்க்கித்து மற்கட்டி யிதுவல்ல வதுவல்லவென்
றெத்திப் பகட்டுத் தினஞ்சொலு முலுத்தரை யிழுத்துப் பிடித்துதைத்தே
அந்தங் கெடப்பல் லுடைத்தெழு மகத்தையு மடக்கிச் சரீரந்தையும்[வாய்
அனல்கொண்டு வாட்டிப் பிழிந்தம்மி மேலிட் டரைத்துக் கரைத்துவிடு
செந்தழற் கண்ணனே யெந்தைபெரி யண்ணனே சீமூத நிறவண்ணனே
சித்தனே பத்தர்புகழ் கர்த்தனே நித்தமுஞ் செகதலமெ லாந்துதிக்க
வந்தருள்செய் சுந்தர புரந்தர திரந்தரா வளரெட்டி பட்டிதன்னில்
மதிமந்திரி யெனரத்ன மணிமேடை யதிலுற்று வாழுமென் குருரெத்னமே.

நீங்காத சூன்மவலி யாசனப வுத்திரம் நெஞ்செறிவோ டீளையிருமல்
நீரிழிவு வெண்குட்ட மேகமரை யாப்புபுண் ணினைவபே தகமயக்கம்
தாங்காத வெடிசூலை மார்பாணி துடைவாழை தலைவலி வாந்திபேதி
சன்னிமூ லங்கபம் பாண்டுபித் தஞ்சூடு சகலவித பிணிகளொடினுந்
தீங்கான பற்படு விடங்கடு விடங்களுஞ் செழுமேக வணனென்றுனைச்
சிந்தையி னினைந்துவெண் ணீறெடுத் தோதித் தெறிக்கப் பறந்தோடுமே

வாங்கரூத மனமொடு பிரியா திருப்பைநீ வளரெட்டி பட்டிதன்னில்
மதிமந்திரி யெனரத்ன மணிமேடை யதிலுற்று வாழுமென் குருரெத்னமே.

எத்தனை விதத்தெய்வ மெத்தனை விதக்கறுப் பெத்தனை விதப்பிசாசம்
எண்ணிற் கடங்காத கோடானு கோடியென் றியம்பவுமென் வாய்வலிக்கும்
அத்தனை விதத்தையு மறிந்துகொண் டொல்காம லவ்வழி நடப்பதரிதென்
றையனே கலிகால மெய்யனே யென்றுன்னை யண்டினே னுதலாலே
சித்தம திரங்கியுன் றொப்பரிய பரிவார தேவதைகள் சூழநடுவில் [முடிமேல்
திகழ்கின்ற மணிமேடை யதினின்று விளையாடுஞ் செய்கைகண் டிருகை
வைத்தெதிர் வழங்கநல் வரமருள்க சமயமிது வளரெட்டி பட்டிதன்னில்
மதிமந்திரி யெனரத்ன மணிமேடை யதிலுற்று வாழுமென் குருரெத்னமே

தந்தைநீ தாயுநீ தமருநீ யுறவுநீ சமயங்க ளோராறுநீ
தலையாதி பூதநீ பொறியுநீ புலனுநீ சந்திர னிரவியுயிர்நீ
விந்துவொளி நாதநீ பரவெளிக ளேழுநீ வேதமுய ராகமமுநீ
வேதாந்த முடிவுநீ சித்தாந்த நிலையுநீ விண்ணுலக புவனங்கணீ
சிந்தையொடு கரணநீ பல்லுயிர்க் குயிருநீ செகமெலா மீன்றவனுநீ
தேறுமுக் குணமுநீ யைந்தொழிற் செல்வனீ திகழ்சச்சி தானந்தனீ
வந்துமிகு கவிராச னன்புமிகு சிவனேசர் வந்தனைகள் செயவோங்கிவாழ்
மாவரத வெனரத்ன மணிமேடை யதிலுற்ற வளரெட்டி பட்டிமணியே. 40.

துப்பளவு புனன்மே னடக்கலாம் வடவையுந் தோன்றுநீ ராச்செய்யலாஞ்
சொல்லரிய கேசரி மீதிவர்ந் தேகலாந் தொட்டாவி னைப்பூணலாம்
வெப்பளவு வேங்கையைக் கட்டியே தழுவலா மிருமணற் சோறுண்ணலாம்
மேதினியர் காணாது லாவலா மிருசிதிகள் வேண்டுமுன் வரச்செய்யலா
மொப்பளவு விடமுத லெட்டியுந் திண்ணலா மோட்டினைப் பொன்னாக்கலாம்
முயர்மறை முடிப்பொரு ளுனையன்றி வேறில்லை யுண்மையென் றெந்தநாளும்
வைப்பளவு மாதேவ சம்புவென் றுன்னடியின் மலமிளகி யுருகலரிதே
மாவரத வெனரத்ன மணிமேடை யதிலுற்ற வளரெட்டி பட்டிமணியே. 41.

பாட்டளி துதைந்துநின் றிசைபாடி நனையுண்டு படியும்பன் மலர்கள்சூடும்
பனிதந்த தகரவார் குழல்காட்டி முல்லைநிகர் பல்வரிசை காட்டிவாட்க
ணோட்டமுற மைதீட்டி மணிகலவை கொண்டுபொன் னுகமொத் தடிபரந்து
நனிசுணங் கெழில்தரக் கச்சற நிவந்தொளிர் நளினமென் முலைகள்காட்டித்
தேட்டமுறு கண்டமுது பாகனைய மொழிசொலிச் செந்தொடிக்கைகணீட்டிச்
சிங்கார நடைநடந் தேமையல் வலைவீசு சிறுமியர்க் கட்படாது
வாட்டமறு மாதவர்கள் பாடிப் பழிச்சுநின் மலரடி கொடுத்தாளுவாய்
மாவரத வெனரத்ன மணிமேடை யதிலுற்ற வளரெட்டி பட்டிமணியே. 42

இருபொருள்க டம்மினுங் கல்வியாஞ் செல்வமே யிகபர சுகந்தந்திடு[ஞ
மேற்றமிக் குடையதென் றெண்ணிலேன் புன்மையே னென்செய விருந்துவா
பொருமருவு வேலையங் கண்ணியர்களின்பமே போந்தநெறி யென்றுழன்று
போதமு மிழந்தறிஞர் நீதமு மிழந்துபுரு டார்த்தநெறி யும்மிழந்து
துருமருவு செம்பென மலத்தொடக் குற்றயான் றூயநின் சேவைகண்டு
சுகமெய்தி வாழுநா ளிந்தநா ளெனறுநீ சொலவேண்டு மென்றனரசே
மருவார ணங்களொடு மாறுபா டின்றியே மஞ்சுறுஞ் சாரல்கொண்ட
மாவரத வெனரத்ன மணிமேடை யதிலுற்ற வளரெட்டி பட்டிமணியே. 43.

காருற்று மின்னித் தழைத்தெழு மாணவக் காட்டினைப் பஞ்சாக்கரக்
கட்கத்தி னுற்றநுந் தப்பா லகக்கழுநி கண்டுநங் கேதிருத்திப்
பாருற்று மறியாத மோனவித் திட்டுமெய் பத்தியா மெருவட்டியான்
பாடுநீ ரிட்டுவன் காமாதி களைபொரீஇப் பதிபுரா உம் நிட்டைவேலி
நேருற் றுறக்கட்டி மாயையாம் பறவைகள் நெருங்கிவந் திடாதுகாத்து
நின்றுவிளை யுண்மையறி வானந்த போகமுணு நின்னடியர் கூட்டமருள்வாய
வாருற்ற செல்வக் களஞ்சியத் தேனெழுரு மம்பொன்மணி மாலையழகா
மாவரத வெனரத்ன மணிமேடை யதிலுற்ற வளரெட்டி பட்டிமணியே. 44

"தலையே நீ வணங்காய்" என்ற மெட்டு

1. செய்வாய் நெஞ்சகமே ரெட்டி பட்டி யடியிணையை
ஐவாய் சென்றலை யாமற் றினந்துதி
செய்வாய் நெஞ்சகமே

2, உய்வார்க் கோர்மருந்தே ரெட்டி பட்டித் திருப்பாதம்
மைவாய்க் கும்பவ வன்பிணித் துன்பொழிந்
துய்வார்க் கோர்மருந்தே

3. கண்டால் சொல்மனமே எங்கள் ரெட்டி பட்டிநாதனை
அண்டா தெங்கு மலைந்தலைந் தென்பயன்
கண்டால் சொல்மனமே

4. உண்டா மோவினைகள் நம்ரெட்டி பட்டி வடிவங்
கண்டா மாமணித் தாளையுங் கண்டவர்க்
குண்டா மோவினைகள்

5. துறவே நன்னெறியாந் திருத் தொண்டர்கள் கொண்டாடும்
விறல்வேற் கொற்றவன் மெய்யரு ளையநிடத்
துறவே நன்னெறியாம்

6. கற்ரோ ரேபெரியோர் வருங் காதலொரு மூன்றும்
அற்று சானருள் பெற்றக நின்றிடக்
கற்ரோ ரேபெரியோர்

7. கல்லார் நல்லவரே சொல்லுங் காமக்கலை குதர்க்கம்
பொல்லாச் சூது புலைகள வாதியைக்
கல்லார் நல்லவரே

8. வல்லா ராவர்களோ குரு வார்கழற் கன்பியற்று
தெல்லா வித்தையு மெண்ணறக் கற்கினும்
வல்லா ராவர்களோ

9. வாரா தொன்றுளதோ ரெட்டி பட்டி குருநாதன்
சீரார் சேவடி சிந்தனை செய்திடில்
வாரா தொன்றுளதோ

10. சாராய் நெஞ்சகமே குரு சாமி யருண்மொழியை
நேராக் கொண்டுநீ நம்ரெட்டி பட்டியைச்
சாராய் நெஞ்சகமே. 45.

அடியாரொருவர் பாடியது.

சந்தாபாமாவசரி

1. இரெட்டிய பட்டி மகாமணியே நேசர்வ ணங்குஞ் சிகாமணியே
நிதிதரு பதிதனி லமரர்கள் தொழுதிட
நீதி வழங்குகண் டாமணியே

2. பத்தர்கள் தேடும் நவமணியே பாரினுள் ளோர்செபி செப [மணியே
படிமிசை இருளற நடுநிலை யருள்புரி
பாச மகற்று சிரோன்மணியே

3. முத்தர்கள் பணியுங் குருமணியே மூவர்க் கெட்டாத் திருமணி [யே
முடியடி நடுவினு மொரு பொருளாகிய
முக்கணி ணுவெழிற் கருமணியே

4. சித்தி புரிந்திடும் நன்மணியே தேசமெ லாம்புகழ் பொன்மணி [யே
சிந்தை தெளிந்திட வந்து நடம்புரி
தேசோன் மணியே சின்மணியே. 46.

பிரஞ்சு இலாகா
புதுவையைச் சார்ந்த பாகூர் கொம்மீன்
பிள்ளையார் குப்பம்
மணியம் பாபு ரெட்டியாரவர்கள்
இல்லத்தில்
ஸ்ரீமத் இரெட்டியபட்டி சுவாமிகள் அருட்பெருக்கால்
தற்போதும் நடைபெறும் பயனையுணர்ந்த
கூடலூர் தாலூகா புதுப்பேட்டை போர்டு ஆண் பாடசாலை
மாஜித் தமிழாசிரியரும்
டிஷ தாலூகா தம்பிப்பேட்டை பாளையமென்னும்
சோலை. ஸ்ரீமத் வீரசைவ சிவயோக சுவாமிகள்
மடாலயத்து ஆதீன தருமகர்த்தருமான
மு. அப்பாதுரை ஐயரவர்கள்
இயற்றியவை

பதினான்குசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

1. சிவமருவு வேதாந்த முடிபையு முணர்ந்துமே
சிவயோக சாதன மியற்றிச்
சித்திதரு சாதாக்கிய மெவருமே கண்டுய்யச்
சித்துருவ வைங்கரன் றனையே
எவமகலு மாலவாய் வைகையின் கரைமேவி
எண்ணலுறத் தாபித் தலோடே
வெங்கலமு மோங்குதிருச் செந்தில்வா ழறுமுகவ
னெழிலருளு மினிது பெற்றுப்
பவமகலும் பொதிகையி லரியதவ மிகப்பூண்டு
பத்தர்க்கு வாய்மை கொண்டு
பந்தமுறு மூலகுதனி லுதயமுன் னீர்மூழ்கிப்
பத்தியுட னீறு பூசித்
தவமருவு கணபதியி னடியிணைகள் வழுத்தவுந்
தாங்கரிய நோய்கள் யாவுந்
தற்போதமும் நீக்கியெமை யெப்போதுங் காத்தருளுந்
தகுரெட்டி பட்டி குருவே. 47.

2. உலகுதனி லுரியபெரு சாத்திர மனைத்தையு
முயரிசைப் பாடல் செய்ய
வுணர்பெரிய ரிவரென்ன வுறுமடிய ருளங்கொண்டு
வுன்னரிய பதிகள் பலவுழ
நலமிக்க வபிடேக மாதிவிழாப் புரிந்தெவரு
நன்ஞான முணர்ந்து வந்த
நன்மையொடு குருநாதன் கூறியவை சட்டமென
நாட்டினிற் போற்றி நிற்கப்
பலமிக்க தாதான்மிய காட்சியொடு சித்திபல
தற்போது மளிக்கு நிதியே
பண்பினொடு யோகிகளும் பரப்பிரம சொரூபரெனப்
பல்காலு மருவி சூழத்
தலமிக்க பிள்ளையார் குப்பத்திற் சிலபோது
தங்கியருள் புரிந்த தேவே
தளைவினைகள் நீக்கியெமை யெப்போதுங் காத்தருள்
தருரெட்டி பட்டி குருவே. 48.

கலிவிருத்தம்

3. சிந்தை மகிழ்ந்து சிறப்பொடு பூசனை
முந்தை யுன்னி முடிப்பவ ரோங்குக
வெந்தை யிரெட்டி பட்டி யெழில்பெறு
விந்தை குருவின் வியன்பதம் வாழ்கவே. 49.

அடியாரொருவர் பாடியது.

குருநாதன் அருணிலைக் கும்மி

கும்மியடிப் பெண்கள் கும்மிய டியிரு
கொங்கை குலுங்கவே கும்மியடி
நம்மையா ளும்ரெட்டி பட்டி நாதனை
நாடிக் கும்மி யடியுங்கடி

கரிமுக தந்தனுக் கன்பனடி யவன் காலங் கடந்த நாதனடி
கருவினை யொழிக்க வந்தாண்டி யவன் கருத்தைப் பாடி யடியுங்கடி.

வையகத்தினில் வந்தாண்டி யவன் வாலை யருளைப் பெற்றவண்டி
வைராக் கியமுடைய நாதனடி யவன் வரவைப் புகழ்ந் தடியுங்கடி
சிவனருள் பெற்ற நாதனடி யவன் சீவ னுக்குப காரனடி
கவலை யொழிக்க வந்தவண்டி யவன் கருத்தைப் பாடி யடியுங்கடி
கன்மனங் கரைய வடியுங்கடி யவன் காமத்தை வென்ற புனிதனடி
வன்புலக் குறும்பையொழிப்பாண்டி யவன்வல்லமை பார்த்தடியுங்கடி
சடைமுடி யுடைய நாதனடி யவன் சண்முக னருள்பெற்ற நாதனடி
தொடை யுடைய மார்பனடி யவன் தோற்றத்தைப் பாடி யடியுங்கடி
மறைமு டிமீது நின்றவண்டி யவன் மாமயில் வீரப் புனிதனடி
கறைமிடற் றண்ணலை யடைந்தவண்டி யவன் கயிலை மேவிய கடவுளடி
துரிய நிலையில் நின்றவண்டி யவன் சோதிசொ ரூபத்தைப் பார்த்தவண்டி
ஆரி தயமு முணர்ந்தாண்டி யவன் ஆதியைப் பாடி யடியுங்கடி
சாதிப் பிறப்பை யொழித்தாண்டி யவன் சன்மார்க்க நிலையில் நின்றவண்டி
ஆதி நாயகன் மகிழும்படி யவன் அங்க மொழிக்க வந்தவண்டி
மும்மலத் தொடக்கை யறுப்பாண்டி யவன் மூஷிக வூகன நாதனடி
இம்மைக்கு மம்மைக்கு மருந்தாண்டி யவன் இனிமையைச் சொல்லி யடியுங்கடி
ஊரைச்சொன் னாலே போகுமடி பிணி பேரைச்சொன்னாலே போகுமடி
யாருக்கு மன்பனிவன்தாண்டி யவன் சீரினைச் சொல்லி யடியுங்கடி
தேச முய்ய வந்தாண்டி யவன் நாச மொழிய வாராண்டி
ஆசா பாசத்தை நீத்தாண்டி யந்தத் தாசனைக் கும்மி யடியுங்கடி
பார்த்த பேருக்குப் பரமனடி யவன் பாவிகண்ணுக்குச் சீவனடி
தேர்ந்து பார்த்தாலே தெரியுமடி யவன் சீர்மையைக் கண்டடியுங்கடி.

50.

திருத்துறைப்பூண்டி, வேளூர். S.பெத்தபெருமாள் ஆச்சாரியார் பாடியது

பல்லவி

கொஞ்ச மேனுமுன் நெஞ்சமி ரங்கலையா
குருநாதனே சர்வேசனே

அனுபல்லவி

அஞ்ச லென்றவர்கள் சஞ்சலந் தீர்த்திடும்
ஐயா குரு மெய்யாவருள் (கொஞ்ச)

சரணம்.

1. இரெட்டிய பட்டியி லுதித்த அவதாரா
நேச முடனேயடி யார்க்குப காரா
பட்ச முடன்வந்து பால னெனைக்காரய்ப்
பரலோகமு மருள்வாயிரு நலனும்பெறத் திருவேகுரு (கொ)

2. பாவலர்கள் போற்றுங் கோவே யுனையன்றிப்
பண்பாக வேதுதித் தேன்துணை நீயன்றி
நாவால் புகழ்வதற்கு நானுஞ்சொல் லமுயன்று
நாதாவரத் தோதாவுப தேசாவருள் நீதாவரக் (கொஞ்ச)

3. தொண்டர்கள் போற்றித் தினந்துதித் தேத்தியே
தூயாவு னையடியார் சிந்தையுள் நாட்டியே
பந்த வினையென்னும் பாசத்தை யோட்டியே
பாழாகிய சென்மமிதைச் சூழாவினை தொடாதறக் (கொஞ்ச)

4. அனுடநட் சத்திரத்தி லடக்கமான யோகனே
அடியார்க் குபதேசித் தருள்தந்த வீசனே
ஐயா வுனையன்றி யாரெனக் குத்துணை [தைக் (கொஞ்ச)
அருள்வாய் பெத்தபெருமாளுக்குத் தருவாயுன் னிருபாதத்

அடியாரொருவர் பாடியது.

சுவாமிகள் அவதார அற்புத நாமாவளி.

ஆதியந்த மிரண்டையுமே இவ ரடிமுடியாய் வைத்துக்கொண்டார்
நடுவே நிலைமையாக இந்த நாதனும் பூண்டுகொண்டார்
திரிலோக மூன்றையுமே இவர் திரிநேத்ர மாக்கிக்கொண்டார்
குண்டலி சத்திதன்னை இவர் குறிப்பாக வைத்துக்கொண்டு
சந்திரர் சூரியரை இவர் சரமாகச் செய்துகொண்டார்
நட்சத்திர மண்டலத்தை இவர் நாவாகச் செய்துகொண்டார்
நவசத்தி யொன்பதையு மிவர் நாகபட மாக்கிக்கொண்டு
கழுத்தி லணிந்துகொண்டார் நீல கண்டரென்று சொல்வதற்கு
வாய்வு பகவானை இவர் மார்பாகச் செய்துகொண்டார்
அக்கினி பகவானை இவர் அஸ்தமாகச் செய்துகொண்டார்
அட்டகுல பர்வதத்தை யிவரட்க்கிரு றிருபுறத்தில்

சாகரங்க ளொன்றையுமே இவர் சரீரமாகச் செய்துகொண்டார்
பிருதிவி யொன்றையுமே இவர் பீடமாகச் செய்துகொண்டார்
பாதாள லோகமெங்கு மிவர் பாதமாகச் செய்துகொண்டார்
ஆதிசேட னொன்றையுமே யிவர் ஆசனமாப் போட்டுக்கொண்டார்
மேகமண்ட லங்களையுந் திருமேனியி லழுத்திக் கொண்டார்
தொண்ணூற்றாறு தத்துவத்தை இவர் சூட்சமாகச்செய்துகொண்டார்
அட்டமா நாகங்களை இவர் ஆபரணம் பூண்டுகொண்டார்
உலகம் கிரீடமாக இந்த வுத்தம ரணிந்து கொண்டார்
ஆகாயங் குடையாக இந்த அரனும் பிடித்துக்கொண்டார்
பதினெட் டாயுதமாய்ப் பதினெண் சித்தர்களைச் செய்துகொண்டார்
எண்ணாயிரம் சத்திகளை யிவ ரிடையிலிறுக்கிக் கொண்டார்
அந்தரம் வில்லாக ஆதி சேடநாணாகக் கொண்டார்
சப்தகோடி மந்திரமும் வாயுந் தன்னம்பா வைத்துக்கொண்டார்
மகமேரு பர்வதத்தை இவர் மணிமந்ர மாக்கிக்கொண்டார்
அண்டபிண்ட சராசரத்தை யிவ ரவிழ்தமாகச் செய்துகொண்டார்
முப்பத்து முக்கோடி தேவர்களை முன்னும்பின்னு மாகவைத்தார்
அட்டதிக்குப் பாலகரை யிவர் அட்டதிசைக் காவல்வைத்தார்
நவவீர ரென்பவரை யிவர் நாலுபக்கம் காவல் வைத்தார் [கொண்டார்
இருநூற்றெழுபத் தெட்டுக்கோடி சத்திகளை ஏவலாகச்செய்து
பூதகணங்களையெல்லா மொரு பொக்கிஷமாகச் செய்துகொண்டார்
பூதத் தலைவர்களை யிவர் பொக்கிஷம் சுமக்கவைத்தார்
சிவகணங்க ளத்தனையு மொரு திறவுகோலாய்ச் செய்துகொண்டார்
சிவகணங்க ளதிபதியைச் சித்ரபுத்ர ராக்கிக்கொண்டார்
இருபத்தெண்கோடி நரகமதை-யிவ ரிடதுகையி லேந்திக்கொண்டார்
சொர்க்கமதை வலதுகையி லிவர் சுகமாக வைத்துக் கொண்டார்
வேதாந்தக் கோட்டைதன்னைத் தெருவீதியாய் வகுத்துக்கொண்டார்
சித்தாந்தக் கோட்டைதன்னை யோர் சிவிகையாகச் செய்துகொண்டார்
சப்தரிஷி சிவிகை தாங்கத் தானுள் ளிருந்துகொண்டார்
பதினாறு கலையுடனே யிவர் பார்தனி லவதரித்தார்
கின்னரர்கள் கிம்புருடர் கெருடகெந் தருவர்களும்
இயக்கியர் விஞ்சையரு மினிய நரம்புதோல் கருவிகளும
சித்திவித்தியா தரரும் மிங்கே சேர்க்கை யாகமுழங்கிவர
பதினெட்டு வாத்தியமு மிவர் பக்கத்தில் முழங்கிவர

முப்பத்திரண்டுவகை மேள்தாளம் முன்பக்கம் முழங்கிவர
முனிவ ரிஷிகளுமா யிவர் முன்னாகப் பாடிவர
வேதக் கோஷ்டிகளுடன் வேதப் புத்தகங் கைபிடித்து
நாற்பத்தேழு வருடமாக இவர் நாற்றிசையுஞ் சுற்றிவந்து
பொக்கிஷங்கள் தான்திறந்து·இவர் பூமியெங்கும் பார்த்துவந்தார்
பனிரெண்டு வருடமாக·அருள்காட்டிப் பரிசோதனைசெய்து
நீதிவிசாரணைக்கு மூன்றுவருடம் நித்தியன் கருணைவைத்தார். 52.

1080-ம்௵ ஆடி௴ அம்பா சமுத்திரத்தில்
பிரமதேசம் செட்டியாரவர்கள் பாடியது.

சற்குருமகிமா நாமாவளி.

இரெட்டிய பட்டி ஆண்டவரே இரத்தின சிம்மா சனபதியே
தீரா வினைகளைத் தீர்ப்பவரே செகத்திற் குருவாய் நின்றவரே
சுத்தசன் மார்க்க நெறியினரே தொல்புவி யாள வந்தவரே
உலகந் தழைக்க வந்தவரே உத்தம புருடர்க்கு நாயகரே
பூமி தழைக்க வந்தவரே புண்ணிய புருடருக்கு நாயகரே
சகல மதங்களின் சம்மதரே சகல கலைக்கும் வல்லவரே
இராஜநீதி தெய்வநீதி யிவைநிலை மைகள்தவ றாதவரே
பேரா னந்த முடையவரே பேரின் பானு சுகவமுதே
பேரானந்தங் காட்டவல்ல பேரின்பவெள் ளக்கடலே
எங்கு நிறைந்த பூரணரே யெல்லோ ருக்கும் நாயகரே
பத்தரைக் காக்க வல்லவரே பாவ வினைகளைத் தீர்ப்பவரே
நித்தியா னந்த நிட்களரே நேர்மையுள் ளோர்க்கு நாயகரே
துட்டநிக் ரகசிட்ட பரிபாலனஞ் சுகமாய் நடத்த வந்தவரே.
அறிவில் லாத மானிடருக் கறிவு கொடுக்க வந்தவரே
தெரியாத மானிடர்க்குத் தெளிவு படுத்த வந்தவரே
அன்பர் மனதி னருகிருந்தே யாடுங் கருணைப் பரஞ்சோதி
பத்தர்களைச சோதிக்கப் பலவே டங்கள் பூண்டவரே
பத்தி யுடைய புண்ணியர்க்குப் பத்தி காட்ட வந்தவரே
அன்புக் குரிய மாதவர்க்கே யானந்தங் காட்ட வல்லவரே
பரம பதத்தைக் கொடுப்பவரே பாவ வினைகளைத் தீர்ப்பவரே
பிறவிப்பிணியை நீக்கவந்த பெருஞ்செல்வத்தின் பெருமானே.
53.

கும்பகோணம், சோழன் மாளிகை அம்மையார் பாடியவை.

நிட்டானுபூதியிலிருந்து சுவாமிக்குத் தூதுவிட்டது

பல்லவி.

தூதுநீ சென்றுவாராய்—குரு நாதன்முன்போய்த்
தூதுநீ சென்றுவாராய்

சரணம்

1. வீதிக்கு வீதிநின்று விளையாடும் வேளையிலே
பாதபூசைக்குநின்ற பசுங்கிளி தேடுதென்று (தூது)
2. அற்புதக் காட்சியென்று மானந்தங் காட்டிநின்ற
சற்குரு நாதனைச் சகலமுந் தேடுதென்று (தூது)
3. காணாத காட்சியெல்லாங் கண்டு தெளிந்தபின்பு
பூணாரம் பூண்டுகொண்ட பொற்கிளி தேடுதென்று (தூது)
4. பாத கமலந்தன்னில் பணிந்து பூசைகள்செய்யும்
சாதனந் தந்தகுரு சாமியைத் தேடுதென்று (தூது)
5. சோதி சொரூபமதைச் சுயம்பிர காசத்தனியாய்
ஆதியி லெனக்களித்த வையனைத் தேடுதென்று (தூது)
6. பிரியா திருக்கவென்று பேணி யிருந்தவென்னை
வெறிகொள்ளச் செய்துபோன வேடிக்கை தேடுதென்று (தூது)
7. தோரண கம்பமெல்லாஞ் சொகுசா யலங்கரித்துக்
காரணந் தெரியாமல் கலங்கியே தேடுதென்று (தூது)
8. தேவால யங்களெல்லாஞ் சிறப்பா யலங்கரித்தே
ஏவல்கள் செய்துவைத்த வெந்தையைத் தேடுதென்று (தூது)
9. தெருவீதி தோறும்நின்று தியானங்கள் சொல்லவைத்த
அருமறைப் பொருளினை யனைவோருந் தேடுதென்று (தூது)
10. அந்திப் பொழுதினிலே அரகரா வென்றுசொல்லும்
விந்தையைக் காணவைத்த வேதத்தைத் தேடுதென்று (தூது)
11. முத்தி கொடுக்கவந்த மூர்த்தியை யெந்நாளும்
பத்திகள் செய்துவந்த பாவைகள் தேடுதென்று (தூது)
12. சங்கீத மேளதாளம் தவறாமல் நடந்திட
இங்கிதக் கோஷ்டிசெய்த வின்பத்தைத் தேடுதென்று (தூது)

13. அந்தணர் பெரியோர்க ளனைவோரும் வந்துகூடிச்
சென்றடி தொழுதிட்ட செல்வத்தைத் தேடுதென்று (தூது)

14. பாவாணர் சங்கீதம் பாடி முழங்கிவரத்
தேவ விருதுடனே சென்றதைத் தேடுதென்று (தூது)

15. வேதத்தி னுட்பொருளை விவரித் துரைக்கவந்த
நாதனைக் காணுமல் நற்கிளி தேடுதென்று (தூது)

16. பத்தரைக் காக்கவென்று பரமகுரு வாய்வந்த
சித்தரைக் காக்கவென்று செகமெலாந் தேடுதென்று (தூது)

17. வரும்வரு மென்றுசொல்லி வழிபார்த் திருந்தநாளும்
சுருதி முடிவைக்காணச் சொர்னக்கிளி தேடுதென்று. (தூது)

54.

நிட்டாநு பூதித் தூதுப் பாடல்

அன்னத்தைத் தூதனுப்பினேனெங்களாண்டவன் சற்குருநாதருக்கு
ஆண்டவன்திரு நடனங்கண்டல்லோ அன்னமும்வரக் காணேமே
நாரையைத் தூதனுப்பினேனெங்கள் நாதன்சற்குரு தேவருக்கு
நாதனிருக்கும் வடிவங்கண்டல்லோ நாரையும்வரக் காணேமே
மயில்களைத் தூதனுப்பினேனெங்கள் வல்லவர்சற்குரு நாதருக்கு
வல்லவர்விளை யாடல்கண்டல்லோ மயில்களும்வரக் காணேமே
குயில்களைத் தூதனுப்பினேனெங்கள் குருபரன்திருச் சேர்வைக்குக்
குருபரன்திருப் பாடல்கண்டல்லோ குயில்களும்வரக் காணேமே
கிள்ளையைத் தூதனுப்பினேனெங்கள் கெம்பீரர்சற்குரு நாதருக்குக்
கெம்பீரர்கொண்ட கோலங்கண்டல்லோ கிள்ளையும்வரக் காணேமே
கருடனைத்தூ தனுப்பினேனெங்கள் கருணையாங்குரு நாதருக்குக்
கருணைதங்கிய அருளைக்கண்டல்லோ கருடனும்வரக் காணேமே
வல்லூரைத்தூ தனுப்பினேனெங்கள் வரதர்சற்குரு நாதருக்கு
வரதர்செய்கின்ற மார்க்கங்கண்டல்லோ வல்லூரும்வரக் காணேமே
சேவலைத்தூ தனுப்பினேனெங்கள் செல்வர்சற்குரு நாதருக்குச்
செல்வரிருக்கும் குணங்கண்டல்லோ சேவலும்வரக் காணேமே
தாராவைத்தூ தனுப்பினேனெங்கள் தற்பரசற்குரு நாதருக்குத்
தற்பரசற்குரு சாலங்கண்டல்லோ தாராவும்வரக் காணேமே

புட்களைத்தூ தனுப்பினேனெங்கள் புண்ணியசற்குரு நாதருக்குப்
புண்ணியர்பேசும் புகழைக்கண்டல்லோ புட்களும்வரக் காணேமே
மாடப்புறவைத்தூ தனுப்பினேனெங்கள் மணிமந்ரசற்குரு நாதருக்
மந்திரசக்தியின் வலிமைகண்டல்லோ மாடப்புறவரக் காணேமே[கு
வர்ணப்பட்சிக ளனேகமாகவே வலிமைபாய்ந்தூ தனுப்பினேன்
வாக்கினில்வரும் வேதங்கண்டல்லோ வர்ணப்பட்சிகளுங் காணேமே
இடபங்களைத்தூ தனுப்பினேனெங்க ளினியசற்குரு நாதருக்கு
இனியசற்குரு நிலைமைகண்டல்லோ இடபங்கள்வரக் காணேமே
புள்ளிமான்தூ தனுப்பினேனெங்கள் புகழ்பெற்றோங்கிய நாதருக்குப்
புகழ்பெற்றோங்கிய நாதரைக்கண்டல்லோ புள்ளிமான்வரக் காணேமே
கலைமானைத்தூ தனுப்பினேனெங்கள் கர்த்தன்சற்குரு நாதருக்குக்
கர்த்தனிருக்குங் கருணைகண்டல்லோ கலைமானும்வரக் காணேமே
மனவாக்குக்காய மௌனமூன்றையும் மாயமாய்த்தூ தனுப்பினேன்
மலர்கள்தூவியே தெண்டனிட்டுமே வரதரும்வரக் காணேமே. 55.

நிட்டானுபூதியிலிருந்து தேடுவது

சீரிலங்குந் திருவே யருள்தருஞ் செல்வப் பெருங்கடலே
பார்தனில் வந்தகதை முடியுமுன் பாலகி கண்டிலனே
எந்தன்குரு நாதனிங் கேபிருந் தெவ்வழி யேகினரோ
சொந்தமா யானிருந்தும் போனவழி தூரமோ கண்டிலனே
கட்டில் மெத்தைகளே திண்டுதலை யணைகளே நீங்கள்
சட்டமுட னிருக்கச் சுவாமிசென்ற சாலத்தைக் காணீரோ
நாற்காலி ஈச்சர்களே யுங்களிடம் நண்ணி யிருந்தவருட்
பாற்குடம் போனவழி விடிந்த பகலிலுங் காணீரோ
ஆசாரச் சாவடியி லடிதொழு மன்பர்கள் காத்திருக்கப்
போசன சாலையுள்ளே புகுந்தவர் போனதைக் காணீரோ
கொல்லையில் கேணிகளே குளிர்ந்தசல மென்று ஸ்நானஞ்செய்த
எல்லையில் நீங்களெல்லா மிருக்க என்னெந்தையைக் காணீரோ
கருவேப் பிலைமரமே நிறைந்த கதலியே தாழைகளே
பருவத்துட னிருக்குங் குணங்களைப் பார்த்துமெங் கேகினரோ

தெருவி லருமையுடன் விளையாடுஞ் செல்வக் குழந்தைகளே
பெரிய மனிதர்களே குருநாதன் பேட்டியுங் காணீரோ

ஆலயந் தோறும்நின்று விளங்குஞ் சிவானந்த மூர்த்திகளே
பால குருநாத னிந்த முகம் பார்க்கவுங் காணீரோ

சங்கையாய்க் கூடிநிற்கும் பசுக்களே தனித்த கன்றுகளே
இங்கே யிருந்தீரோ நாதன்வர விவ்வழி காணீரோ

வாவி தடாகங்களே வொன்றாகவே வாழுஞ்செந் தாமரையின்
பூவே குருநாத னிந்தவழி போகவுங் காணீரோ

நாத்து நடவுகளே வயல்களில் நன்றாய்ப் பயிர்த்தேறி
பூத்தசெந் நெற்கதிரே யிங்கேயொரு புண்ணியர் காணீரோ

நந்த வனங்கள் தோறும் பூத்துச்சொரி நால்வகைப் புட்பங்களே
இந்த வனத்தோடே குருநாத னேகியுங் காணீரோ

மந்தாரை பிச்சுமுல்லை மருவும ருக்கொழுந் தேமகிழே
சந்தனச் சோலைகளே யிந்தவழி சாமியைக் காணீரோ

சாலை நெடுந்தூர மிந்தவழி சார்ந்தவி ருட்சங்களே
நாலு வழியிலுமாய்ச் சென்றுவரும் நாதனைக் காணீரோ

புண்ணிய தீர்த்தங்களே நதிதோறும் போக்குள்ள மீனினங்காள்
கண்ணின் மணிவிளக்காய் விளங்குங் கருணையைக் காணீரோ

அன்றில் பேடுகளே மயில்குயில் அன்னமே தாராவே
செந்தலைச் சேவல்களே யிந்தவழி தேவனைக் காணீரோ

பட்சிப் பறவைகளே மணிப்புறா பஞ்சவர் ணக்கிளியே
இச்சையுள்ள கிளிதா னிந்தவழி யெப்போதுங் காணீரோ

வாச மலரெடுத்தே ஐயன்பதம் வாழ்த்தியே பூசைசெய்த
நேசர்க ளிங்கிருக்கச் சென்றதொரு நிலைமை காணீரோ

வண்டுகள் தும்பிகளே மலரோடு வாசனை யிங்கிருந்தும்
கண்டு மதுவையுண்ணுங் கருத்தினால் கண்ணனைக் காணீரோ

என்றுயான் காண்பேனோ ஐயன்பத மெப்படிச் சேர்வேனோ [னே.
சென்றவி டங்களெல்லாந் தேடித்தேடிச் செப்பியுங் காண்கில

56

மகானேநுவர் பாடியது.

பல்லவி

கூவுதையோ சேவல் கூவுதையோ
கொக்கரித்துக் கூத்தாடிக் கூவுதையோ

அனுபல்லவி

கூவுகின்ற சத்தமதின் குறிப்பறி யாதவர்க்குக்
கொடிய நரக மென்றுங் கூவுதையோ

சரணம்

கணபதி வந்தாரென்றுங் கூவிதையோ அவர்
கலியுக வரதரென்றுங் கூவுதையோ
தேவர்கள் வந்தாரென்றுங் கூவுதையோ விந்தச்
செகமெல்லா மோர்குடைக்குள் கூவுதையோ
அரசாள வந்தாரென்றுங் கூவுதையோ ஈச
னவதாரஞ் செய்தாரென்றுங் கூவுதையோ
மும்மூர்த்தி வந்தாரென்றுங் கூவுதையோ விந்த
மூவுலகுங் கொக்கரித்துக் கூவுதையோ
ஏகபரா பரவஸ்து வாகி யிங்கே
யேசுவும் வந்தாரென்றுங் கூவுதையோ
ஈசா அலேகிஸ் சல்லாம் வந்தா ரென்றே
யிங்கிதமாய்க் கொக்கரித்துக் கூவுதையோ
மகதி அலேகிஸ் சல்லாம் வருவா ரென்றும்
வகைவகையாய்க் கொக்கரித்துக் கூவுதையோ
திசாலும் வந்தாரென்றுங் கூவுதையோ விந்தச்
செகமெல்லாம் கொக்கரித்துக் கூவுதையோ
வீர போகவசந்த ரென்று சொல்லி நிதம்
விதவிதமாய்க் கொக்கரித்துக் கூவுதையோ
நீதிக்கொடி நாட்டவென்று தேவ ரெல்லாம்
நீணிலத்தில் வந்தாரென்றுங் கூவுதையோ
சாத்திரங்கள் சொன்னபடி தவறுமலிங்குச்
சகலரும் வந்தாரென்றுங் கூவுதையோ

ஆகாய மாய்ப்பறந்துங் கூவுதையோ வெண்ணி
லண்டமெல்லாஞ் சுற்றிவந்து கூவுதையோ
இரவும் பகலுமாய்க் கூவுதை யோவதே
யேகாந்தமா யிருந்துங் கூவுதையோ
அற்புதங்கள் காட்டியுமே கூவுதையோ நிதம்
அந்தரமாய் நின்றுகொண்டு கூவுதையோ
வேதங்கள் செல்லியுமே கூவுதையோ நல்ல
வேதாந்தங் காட்டியுமே கூவுதையோ
சாத்திரங்கள் சொல்லியுமே கூவுதையோ வுலகிற்
சகலருக்குந் தோணும்படி கூவுதையோ
மானிட ரூபங்கொண்டு தேவ ரெல்லாம்
வையகத்தில் வந்தாரென்றுங் கூவுதையோ
பொய்கொலை களவுகள் கூடா தென்றும்
பொருந்தவே கொக்கரித்துக் கூவுதையோ
துட்டர்மடி வாரென்றுங் கூவுதையோ யின்னும்
சொற்பநா ளிருக்குதென்றுங் கூவுதையோ
உலக மழியுமென்றுங் கூவுதையோ நிதம்
உத்தம ரிருப்பாரென்றுங் கூவுதையோ
வேதம் தவறுகின்ற மானிடர்க்கு நல்ல
வீரவாழ்வு வந்ததென்றுங் கூவுதையோ (கூவு) 57.

அடியாரொருவர் பாடியது.

பல்லவி

மாயவித்தை செய்கிறு ரையா—இரெட்டிய பட்டிசாமி
மாயவித்தை செய்கிறு ரையா

அனுபல்லவி

மாயவித்தை செய்கிறுர் காயமொன் றெடுத்துக்கொண்டு
நேயமான அன்பருக் குபாயமாகக் காட்டுகிறுர் (மாய)

சரணம்

1 உண்ணுகிறு ருறங்குகிறு ருளறுகிறுர் திரிகிறுர்
கண்ணகண்ண வேவந்து காட்சிகளைக் காட்டுகிறுர் (மாய)

2. கண்ணைமூடச சொல்கிறார் கனவைப்போலக் காட்டுகிறார்
விண்ணைப்போலக் காட்டுகிறார் மெய்தனிலே காட்டுகிறார் (மாய)

3. பாட்டுப்பாடச் சொல்லுகிறார் பாவைகளைக் கூட்டுகிறார்
கூடடங்கூட்ட மாகவிருந்து குருவைவணங்கச சொல்லுகிறார் ()

4. ஆசையை யடக்குகிறா ரருள்தனைக் கொடுக்கிறார்
நேசமாக வெல்லோர்க்கும் நிட்டையைக் கொடுக்கிறார் (மாய)

5. வரசித்தி விநாயகனை வலமாய்வரச சொல்லுகிறார்
கரங்கூப்பி யடிபணிந்தால கர்மம்விலகு மென்கிறார் (மாய)

6. மேடை விநாயகனை மேதினியோ ரறியவே
கோடைவெயபிவில்லைதனக் குமபிடவுஞ் செய்கிறார் (மாய)

7. வல்லவை மணாளனை வழிக்கரையி லேயமர்த்தி
எல்லோருங் கண்டுதொழ வருளளிக்கு மென்கிறார் (மாய)

8. பார்க்கப்பார்க்க வெல்லார்க்கும் பலன்கிடைக்கு மென்கிறார்
காக்கக்காக்க கடவுளுங் காட்சிதனைக் கொடுத்திடுவார் (மாய)

9. கண்ணப்ப ரைப்போலக் கருத்தி லுறுதிகொண்டால்
விண்ணுடர் மெசசவே மெயப்பொருள் தந்திடுவார் (மாய)

10. ஆசானைக் கண்டவுட னன்புடனே நீவணங்கு
பூசனைகள் புரிந்துமே பூமியிறப டியநில்லு (மாய)

11. குருவைப் பணியவேணுங் கூடவே யிருக்கவேணும்
கருததை யறியவேணுங் கடவுளென்று நம்பவேணும் (மாய)

12. ஏடாகூடம் பேசாதே ஏமாந்து போய்விடாதே
சாடாபூ ழியஞ்செய நால்சற்குரு துணையிருப்பார் (மாய)

13. கண்டவிடஞ் செல்லாதே கருத்தைவெளி யாக்காதே
கொண்டவ னென்றுலுங்கூட வுண்மையை யுரையாதே (மாய)

14. நிட்டையிலே கிடைத்தபடி நித்தநித்தங் கவனம்பண்ணு
கட்டமின்றிக் காத்திடுவார் கடவுள்ரெட்டி பட்டிசாமி (மாய)

15. ஆசாரம் விட்டுவிடு அன்பர்களை நீவணங்கு
நேசமாக நீயிருந்தால் நிட்டையில் பொருளளிப்பார் (மாய)

16. ஆயாசப் படவேண்டா மன்புடனே யானுஞ்சொன்னேன்
காயாசங் கொள்ளவேண்டாங் கடவுளே துணையுஞ்செய்வார் ()

17. கேட்டபொருளைக்கொடுப்பார் கிரமமாக நீயிருந்தால்
காட்டவேண் டாம்வெளியில் கடவுளுந் துணையிருப்பார்(மாய)
18. கோவிலுக்கேன் போகவேணுங் குனிந்துகும் பிடவேணும்
தாவித்தாவிப் பாடுபட்டால் தற்பரந்தைக் கண்டிடலாம்(மாய)
19. அன்னைபிதா முன்னிருக்க ஆசா னருகிருக்கச்
சொன்னபடி செய்யாமல் சூட்சுமத்தைக் காணலாமோ (மாய)
20. கல்வியிலே யென்னவுண்டு கருத்திலெல் லாமிருக்க
வில்லா லடித்தல்லோ விசயன்பாசு பதம்பெற்றான் (மாய)
21. இந்தப் படிநடந்தா லெல்லாம்நீ பெற்றிடலாம்
சிந்தனைப் படவேண்டாம் சிவனாணை நான்சொன்னேன் (மாய)
22. வெளியிலே காட்டாதே வெட்டவெளி யாக்காதே
சலிக்காதே உனக்குள்ளே சஞ்சலப்பட் டிருக்காதே (மாய)
23. உன்னுடன் சொன்னதுபோ லொருவருக்குஞ் சொல்லவில்லை
தன்னுள்ளே வைத்துநீயும் சஞ்சலத்தை விட்டுவிடு (மாய)
24. அப்ப னிருக்கிறா ரார்க்கும் பொதுவாக
எப்படியுங் காத்திடுவா ரென்றேநீ நம்பியிரு (மாய)
25. நம்பியிரு நம்பியிரு நான்சொன்னேன் நம்பியிரு
அம்பலமாய் விட்டிடாதே அருளைக்கை விட்டிடாதே (மாய)
26. தென்பாக நீயிருந்தால் சேனபொருள் கொடுப்பார்
அன்பரைக் காத்திடுவா ரதற்குச்சந் தேகமில்லை (மாய)
27. உறுதியாய் நம்பியிரு வுன்னாணை நான்சொன்னேன்
கருதியே வுள்ளத்தில் கஷ்டப்பட் டுறுதிகொள்ளு. (மாய) 58

அடியாரொருவர் பாடியது.

பல்லவி

ஆனந்தங் கொள்கிறா ரையா—குருநாதனும்
ஆனந்தங் கொள்கி றாரையா

அனுபல்லவி

ஆனந்தங் கொள்கிறா ரறிவைக் கொடுக்கிறார்
ஞானோப தேசஞ்செய்து நடித்தே யிருக்கிறார் (ஆனந்தம்)

சரணம்

1. காட்சிகளைக் காட்டுகிறார் கவலைபிணி நீக்குகிறார்
ஆட்சியா யிருப்பதற் கழியாப்பதந் தருகிறார்
சீடர்களுக் காகவே சீமைசீமை யாய்த்திரிந்து
ஆசாபா சத்தைநீக்கி யைவரை யொடுக்கிறார் (ஆனந்தம்)
2. தெரிவிலே திரிகிறார் திண்ணையி லிருக்கிறார்
கருவிலமைப் பென்றுசொல்லிக் காலத்தைக் கழிகிறார்
சிறுவரோடுங் கூடுகிறார் தெந்தினங்கள் பாடுகிறார்
அறிவைக் கொடுத்துநீங்க ளஞ்சவேண்டா மென்கிறார் (ஆன)
3. ஒன்பது வாசலையு முள்ளே யறியவேண்டும்
ஐம்பத்தோ ரெழுத்தையு மதிலே தெரியவேண்டும்
கண்கூசா மலேபார்த்துக் கருத்தா லறியவேண்டும்
அண்டபிண்ட சராசரம் யாவுமங் கிருக்குதென்று (ஆனந்தம்)
4. கூட்டமாகக் கூட்டுகிறார் குருவைவணங் கச்சொல்லுகிறார்
ஆட்டபாட்டம் பார்த்தக்கா லவத்தையுண் டாக்குகிறார்
தேட்டையாகச் சொல்லித் தெளிவையுண் டாக்குகிறார் [59.
நாட்டுக் கணக்கையெல்லாம் நன்றாகச் சொல்லுகிறார். (ஆனந்)

அடியாரொருவர் பாடியது.

பல்லவி

மாயவித்தை செய்கிறா ரையா—இரெட்டிபட்டி சாமி
மாயவித்தை செய்கிறா ரையா

அனுபல்லவி

மனிதசென்ம் மாகவந்து பூமியி லவதரித்தே
உலோக வசனமதைப் பார்க்க வுருவெடுத்து (மாயி)

சரணம்

1. கேட்டவரந் தனைக்கொடுக்கவுங் கிலேசங்களைத் தீர்க்கவும்
நாட்டில்விளை யாடவந்த நாயகமே யென்சாமி (மாய)
2. வெள்ளிக் கிழமைதோறும் விரதங்க ளிருக்கவும்
மற்றைநாட் காலையவர் நாமத்தைத் துதிக்கவும் (மாய)
3. அடியாருக் கன்பனாகிக் கலியுகத்தில மெய்யனாகி
எங்குநிறைந்தபொரு ளாகவிருந்துகொண்டு. (மாய) 60.

அடியாரொருவர் பாடியது.

குயிற்கண்ணி

1. எங்கெங்கே பார்த்தாலு மங்கங்கே நீயிருக்க
மங்கையர் மனம்போல ஏ குயிலே மயங்குவது காரணமோ
2. மயங்குவது காரணமோ மண்டலத்தி லுள்ளவர்கள்
மனதை யடக்கிவிட்டால் ஏ குயிலே மயக்கமது தீருமடி
3. மயக்கமது தீர்ந்துவிட்டால் மறைப்பொருளுங் கிட்டுமடி
மாநிலத்தி லுள்ளவர்கள் ஏ குயிலே மதிப்பார்க ளப்போது
4. மதிப்பார்க ளப்போது மகிமையுள்ள சற்குருவும் [வைப்பார்
ஆனந்தங் கொண்டல்லோ ஏ குயிலே அருள்நிலையைக் காட்டி
5. அருள்நிலையைக் காட்டிவிட்டால் அனந்தங்கோடி சீவன்களும்
உனதுள்ளே தோன்றுமடி ஏ குயிலே உற்றுநீ பார்த்தாயானால்
6. இகத்துக்கும் பரத்துக்கும் இவனே வழிகாட்ட
இரெட்டிய பட்டியிலே ஏ குயிலே ஏகாந்த வள்ளலடி
7. ஏகாந்த வள்ளலடி எங்கும் நிறைந்தவண்டி
பத்தர்கள் உள்ளத்துளே ஏ குயிலே பதிவாக வீற்றிருப்பான்
8. பதிவாக வீற்றிருப்பான் பலதொழிலுங் காட்டிவைப்பான்
பத்தியாய் நினைத்தபேர்க்கு ஏ குயிலே பரகதியுங் கொடுத் [திடுவான்
9. வாலை வயதிலென்னை வலியப் பிடித்திழுத்துப்
பருவங்கள் காட்டிவைத்தான் ஏ குயிலே பரமபதமடைய. 61.

அடியாரொருவர் பாடியது.

நொண்டிச் சிந்து.

ஓமெனும பிரணவத்தில்—சகலகரித்
தோங்கார வட்டமதி லுள்ளே யமைந்து
றீங்காரந் தன்னிலிருந்து—பரம்பொருளாய்
நின்மலசொ ரூபமதை நிரஞ்சன மாய்
சத்தி சிவமாகி—நாதவிந்து
தன்னிலிருந் தானந்த சதாசிவமாய்
மகேசுவரன் தானாகி—யெங்கு நிறைந்து
வாகான ருத்திரன்விண்டு பிர்மாவாகி

பஞ்சபூதங்களாகிப்—பொறிபுலனுய்ப்
பாதாதி கேசமுத லாதியந்தமாய்த்
திரண்டோ ருருவாகி—மானிடமாய்ச்
செகத்தி லவதரித்த திறங்களாய்
பதினுறு கலையுடனே—கலியுகத்தில்
பரமன வதரித்த பதிபகர்வேன்
அரசாண்ட பாண்டிநாட்டின்—எல்லை
அகத்தீசர் தாம்ரநதி வடபாகம்
திருநெல் வேலிஜில்லாவின்—நாகைநகர்
சேர்ந்தரெட்டி மாநகரந் தனிலிந்நாள்
சைவ குலத்துதித்து—வெகுகாலமாய்த்
தரணியுள் வேதங்களைச் சமமாக
எல்லோர்க்குங் காட்டவென்று—அருள்சுரந்து
யேகபர மாயெங்குந் தானுகி
இரெட்டிபட்டி சுவாமியென்னும்—நம்பூஜ்யர்
எல்லோரை யுங்காக்கும் நீதிசொல்வேன்
தபங்களும் தானுகி—யறம்பொருளின்
தர்மங்களும் நீதிகளும் தழைத்தோங்க
மதுரா புரிதனிலே—வடதிசையில்
வைகைநதித் தென்பாக மிரயில்மேற்காய்க்
கணபதி கண்காண—காட்சிதந்து
கலியுகமை யாயிரம் ஆண்டுக்குமேல்
நடக்கு மதிசயங்களின்னதென்று
நாவரி லுரைந்தாரந்த நகர்தனிலே
சர்வசித்து வருடமுதல்—கணபதிக்குத்
தானுயி ருந்துபூ சைகள்முடித்துக்
கடம்ப விருட்சமொன்று—தழைத்துவந்த
காரணத்தை யின்னதெனக் கருந்தில்கொண்டு
மன்மத வருடமுதல்—அவதரித்த
மாநகரம்சென் றீச னருள்காட்டச்
சட்டமொன் றுண்டாக்கிச்—சாலோக
சாமீப சாரூப சாயுச்சியம்

தடையின்றியடையவென்று—அய்யனவர்
சாற்றினதோர் சட்டமதின் சூக்ஷமமுரைப்பேன்

அனுதினமும்ஸ்நானஞ்செய்து—கணபதியை
அன்பாய்ப்பிரதக்ஷணங்கள் மூன்றுமுடித்து

வெள்ளிவிரதமிருந்து—தினந்தோறும்
வெந்நீரில்ஸ்நானபானங் கூடாதென்றும்

யெண்ணெயிட்டுக்கொண்டாலும் —சுத்த ஜலம்
யேற்றுக்கொள்ளவேண்டுமென் றும் யெண்ணெய்தனைக்

காச்சவேகூடாதென்றும்—மருந்துகளைக்
கனவிலும்நினைக்காமல் மறந்துவிட்டு

வியாதிகஷ்டம்நேர்ந்ததென்றால்—ஔஷதமாய்
மெய்யானரெட்டியப்பட்டி சுவாமிநாமம்

துதித்துவிபூதிபூசி —உட்கொள்ளவும்
துலைபுமேவியாதிகளும் பேய்களில்லை

வஞ்சனைசூனியமும்—யேவலோடு
மாத்தான்கருப்பன்மோண்டி காட்டேரியும்

சப்பாணிமாயிருளன்—சடாமுனி
சாத்திபேய்ச்சிபிரம ராக்ஷசியும்

இசக்கிமாடனுமே—துஷ்டதெய்வம்
யெங்குமுள்ளபேய்களும் பறந்தோடும்

கள்ளன் கருமாத்தன்—பெருவியாதி
கண்குருடூமைமோண்டி சப்பாணியும்

வெண்குட்டங்கருங்குட்டமும்— சயரோகம்
மேசம்விப்புருதிகுன்மம் வயிற்றுவலி

நீரழிவுவெட்டைசூடு—பவுத்திரங்கள்
நீங்காதபாண்டுபித்தஞ் சன்னிசுரமும்

வலிப்புநோய்களுடன்—ஜென்மவினை
மாறாதபாவதோஷம் பறந்தோடும்

ஜென்மங்களீடேறும்—நாமஞ்சொல்லித்
தேள்பாம்புபிழைத்திட வணங்கிடுமே

இஷ்டங்கள்நிறைவேறும்—காக்ஷிதரும்
எம்பிரான்சட்டமின்ன மியம்புகிறேன்

தெய்வப்பிரார்த்தனைகள்—முன்பாக்கிதனைச்
செலுத்தினிமேல் நேர்ச்சை கூடாதென்றும்

வயித்தியன்மந்திரவாதி—கோடாங்கிகுறி
வகையுடன்கட்டிவைத்த ரட்சைகளைக்

களைந்தெறிந்துவிட்டு—யிவர்களைக்
கண்டாலும்பேசாது மறைந்திடென்றும்

விஷத்தேள்பாம்புகளைக்—கொன்றுவிட்டால்
விஷங்களிறங்காதென்று மறுக்கச்சொன்னார்

இப்படிச்சட்டமொன்று—செய்ததுடன்
ஏத்தமகமதியர் கிறிஸ்துரோமன்

அந்தந்தமதஸ்தர்களும்—அவரவர்
மார்க்கவழக்கப்படி வணக்கங்களும்

மற்றவிபரமெல்லாம்—சட்டமுள்ள
அருதிப்படிநடக்க வுறுதிசெய்து

எல்லோர்க்குங் குருவாகி யுலகமதில்
எங்கும்நிறைந்தானந்த வஸ்துவாகி

மன்மதவருடமுதல்—சட்டமது
வழங்கும்படிக்கனந்தம் அருள்காட்டி

நான்குவருடம்வரை—அவதரித்த
நகரந்தனில்நடந்த அற்புதங்கள்

கோடானுகோடியல்லோ—அதின்
குணங்களுரைக்க ஆதிசேடனும்

விவரிக்கமுடியாது—அய்யன்திரு
விளையாட்டைக்கண்டவர்கள் வெகுகோடி

அடியார்கள்கூட்டங்கூடி—அன்புடனே
ஆனந்தங்கொண்டாடி அய்யனடியைத்

துதித்தார்வெகுகோடி—கர்மவினை
துன்பங்கள்நீங்கினவிர் பலகோடி

மலடுசெவிடூமை—கண்குருடு
மாறினவர்மொண்டி சப்பாணிகளும்

பலவிததுன்பங்களும்—பேய்களாடிப்
பயந்தோடுமற்புதங்கள் பார்த்திருக்கக்

கடவுளென்றறியாமல்—உலகமெங்கும்
காக்ஷிகளைப்பார்த்துஞ்சிலர் மோசம்போனார்

அறிந்தோர்சாயுச்சியம்—அடைந்துகொள்ள
அய்யனுடசூக்குமமதை யறிந்துகொண்டு

வெகுபேர்தேர்ந்தார்கள்—இன்னம்
வேண்டுந்தபசுகளை முடித்துக்கொள்ள

அனந்தம்பேரருள்கள்பெற்று—உலகமெங்கும்
அற்புதங்கள்காட்டிவரு மதிசயங்கள்

விகாரிவருடமுதல்—நாமந்துதித்த
விடமெல்லாங்கண்காக்ஷி புரிந்துவரும்

அற்புதங்கள்கோடியல்லோ—பரதகண்ட
மனைத்தும்விளங்கிவரு மதிசயங்கள்

கண்டார்வெகுகோடி—கண்டதின்
காரணத்தைப்பூரணமா யறியவில்லை

விண்டுசொல்லக்கூடாது—அய்யன்
விளையாட்டைக்கவனித்தோர் மெய்யராவார்

பத்துவருடமாக—அருள்காட்டிப்
பரதகண்டமுழுதும் பரவிவந்து

சோதனைகள்செய்துவரும்—சூக்குமமதைச்
சொன்னாலுந்தெரியாது கலியுகத்தில்

கலியன்மிகுத்ததினால்—அய்யன்வந்து
காக்ஷிகளைக்காட்டிவேத போதனைசெய்தும்

தெரிந்து நடப்பவர்கள்—சொற்பமுண்டு
தெரியாதமானிடர்கள் பலகோடி

பின்வருங்காரியங்கள்—அய்யன் அனுப்
பிசகாமல்சொல்லியுமே தெரியவில்லை

சாஸ்திரங்களுணர்வாறில்லை—யுணர்ந்தவர்போல்
சமர்த்துகள்பேசியெங்குந் திரிவார்கள்

இனிமேல்திரிவாருண்டோ—கொஞ்சகாலத்தில்
யெமனுடபட்டாளங்க ளிறங்குவதால்

தேவர்கள்வந்துகூடி—முன்சாஸ்திரத்தில்
தெரிவித்தபடிவந்து நீதிநடத்தும்

காரியங்களின்னதென்றும்—விபரமாகக்
கண்டுதெளிந்தவ ரனேகமுண்டு

தெளிந்தவரனைவருமே—சாயுச்சியபதஞ்
சேர்வாரென்றேமறைகள் ஒலியிடுதே

சந்தேகம்யாதுமுண்டோ—கலியுகத்தில்
சாயுச்சியங்கிட்டுவது யெளிதலவோ

அறியாமானுடர்க்கு—கலியுகத்தில்
அருமறையொலிப்பது தோணாது

தெளிவாகச்சொன்னாலும்—கலியுகத்தில்
தேறாதுதேறாது தேர்ந்துபாரே. 62

கொடியேற்று விழாவில், "குருநாதர் உபதேசம்" என்னும்
பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தியவரும்,
காஞ்சிபுரம் ஆண்டர்சன் உயர்தரக் கல்லூரித் தமிழ்ப்புலவருமான
திருவாளர். வித்வான்
அ. மு. பரமசிவானந்த முதலியார்
அவர்கள் ஆக்கியது.

உடையவன் திருக்கொடி.

ஆனந்தக் களிப்பு.

உடையவன் திருக் கொடிபாரீர்—அங்கு
உயர்திருச்சாத்தனூர் ஒங்கியநிலையில் (உடை)

1. நந்தமை ஆண்டருள் புரியும்—உயர்
நம்பன்தன் திருக்கொடி நாட்டிய நாளில்
உம்பர் உவந்தனர் கண்டீர்—நம்மை
உடையவனாணையி னோங்கிய தருவே (உடை)

2. பத்திரண் டாண்டுகள் முன்னர்—வந்து
பண்புடன் நின்ற பெருந்திருந் தவத்தார்
நித்திய வாழ்வினை வேண்டி—வாயில்
நிறுத்திய திருக்கொடி கண்டனம் இன்றே (உடை)

3. இரெட்டியப் பட்டி யடிகள்—இங்கு
இருந்து அருள்புரிந் தாக்கிய செல்வம்
விரித்து ரைத்தார் அதன்பொருளை—இன்று
வித்தகத் தன்மையில் விளங்கிடக் கண்டோம் (உடை)

4. இராமலிங்கப் பெயரோனும்—அருள்
எங்குமிளிர்ந்த இறையவன் கொடியை
மராமலிருக்கும் படித்தான்—இங்கு
வந்திருந்தேற்றினன் மனமகிழ்ந் தடியார் (உடை)

5. தாதெனும் நற்பெரு ஆண்டில்—உயர்
தன்மைசேர் நற்புரட்டாசியா மதியில்
சீர்பெறும் பதினாறும் நாளில்—கொடியை
ஜெகமெலாம் கண்டிட ஏற்றினன் வாரீர் (உடை)

6. சாத்தனூர் தனியர சாளும்—நல்ல
தகைமைசேர் சீர்முத்து ராம ரெட்டியார்
காத்து உடையவன் கொடியை—இன்று
கண்டிட யாவரும் காட்டினன் காண்பீர்! (உடை)

7. கண்டிடுவீர் அருட்கொடியை—கண்டு
காணரும் இன்பத்தின் மெய்வழி நிற்பீர்
பண்டும் இன்றும் என்றும் அருளும்—மெய்மைப்
பண்ணவர் தன் அருள்பாலிக்கக் கொண்டே (உடை)



ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருளிய

அருட்பாடல்

அகராதி.

அடியவர்கள் பாடிய

தோத்திரப்பாக்கள்

அகராதி

வாழ்த்து

நல்லருள் புரிந்து மெய்மை நாட்டி இவ்வுலகத் தென்றும்
புல்லர்கள் இல்லா துள்ள பொற்புறு தலைமை கண்டு
கல்லினும் வலியர் தாமும் கசிந்துள முருகச் செய்து
சொல்லுப தேசஞ் செய்த தூயவன் வாழி வாழி!

இரெட்டியப் பட்டி வந்து யாங்கணும் அருள் பரப்பி
அருட்டிற வள்ள லாகும் ஆண்டவன் ஆசி வாழி!
மருட்கெடச் செய்தான் நம்மை மலவழி நீக்கி ஆண்ட
தெருட்டருஞ் செல்வன் நீதி சீர்பெறச் சிறக்க வாழி!

வாழிஇவ் வுலகத் தென்றும் வள்ளல்தன் நியதி யெல்லாம்!
வாழிஇவ் வுலகி லன்னோன் வளம்பெறு அடியார் யாரும்!
வாழிஎந் நாளும் மெய்மை! வாழ்கநல் லறங்க ளெல்லாம்!
வாழிஅப் பெரியோன் நாமம்! வாழியே வாழி வாழி.!



குமரன் பிரஸ் காஞ்சீபுரம்